உ

கடவுள் துணை.

மகாமகத்துவம்பொருந்திய கும்பமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# ஈஸ்வரநாடிசோதிடம்.

சப்தகாண்டங்களில் நான்காம்பாகமாகிய

# புதகாண்டம்.

---

இஃது,

எளூர். பெரும்பாளிப்பட்டி

இராமசாமிபிள்ளையவர்கள் குமாரர்

பாலக்கோடு ஜோஸியம்

ஆர். அப்புசாமிபிள்ளையால்

தம்மிடமிருந்த ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

எழுதிமுடிவுபெற்றதை,

---

சிங்களாந்தபுரம்.

ரிஜல்ட்டுஸ்கூல் மானேஜரும்

நெடுங்காலம் சோதிடப்பண்டிதருமாகிய

வெ. வாசுதேவம்பிள்ளையவர்களால்

பார்வையிடுவித்து

இரத்தினமங்கலம்.

ஷ. கோவிந்தராஜு முதலியாரால்

சென்னை.

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1926.

இதன் விலை] ரிஜிஸ்டர்காப்பிரைட். [ரூபா 1 8

39

28029

A 1864

உ

கடவுள் துணை.

கும்பமுனிசோதிடம் சப்தகாண்டங்களில்

நான்காம் பாகமாகிய புதகாண்டத்தின்

# பொருளடக்க

# அட்டவணை.

OFFICE OF THE PE
13 JUL 192


| பொருள் | பக்கம். | பொருள். | பக்கம். |
|---|---|---|---|
| மேடபுதன் லக்கினம் | க | ஒன்பதாமிடம் | சங |
| இரண்டாமிடம் | உ | பத்தாமிடம் | சச |
| மூன்றுமிடம் | ச | பதினோராமிடம் | சரு |
| நான்காமிடம் | ரு | பனிரண்டாமிடம் | சஎ |
| ஐந்தாமிடம் | சா | சடகபுதன்லக்கினம் | சகூ |
| ஆறுமிடம் | எ | இரண்டாமிடம் | ருய |
| ஏழாமிடம் | கூ | மூன்றுமிடம் | ருக |
| எட்டாமிடம் | ய | நான்காமிடம் | ருங |
| ஒன்பதாமிடம் | கக | ஐந்தாமிடம் | ருச |
| பத்தாமிடம் | கஉ | ஆறுமிடம் | ருரு |
| பதினோராமிடம் | கச | ஏழாமிடம் | ருசா |
| பனிரண்டாமிடம் | கரு | எட்டாமிடம் | ருஅ |
| ரிடபபுதன்லக்கினம் | கஎ | ஒன்பதாமிடம் | ருகூ |
| இரண்டாமிடம் | கஅ | பத்தாமிடம் | சாய |
| மூன்றுமிடம் | ககூ | பதினோராமிடம் | சாக |
| நான்காமிடம் | உக | பனிரண்டாமிடம | சாங |
| ஐந்தாமிடம் | உஉ | சிம்மபுதன்லக்கினம் | சாரு |
| ஆறுமிடம் | உங | இரண்டாமிடம் | சாசா |
| ஏழாமிடம் | உச | மூன்றுமிடம் | சாஎ |
| எட்டாமிடம் | உசா | நான்காமிடம் | சாஎ |
| ஒன்பதாமிடம் | உஎ | ஐந்தாமிடம் | சாஅ |
| பத்தாமிடம் | உஅ | ஆறுமிடம் | சாகூ |
| பதினோராமிடம் | உகூ | ஏழாமிடம் | எய |
| பனிரண்டாமிடம் | ஙக | எட்டாமிடம் | எக |
| மிதுனபுதன்லக்கினம் | ஙங | ஒன்பதாமிடம் | எஉ |
| இரண்டாமிடம் | ஙச | பத்தாமிடம் | எஉ |
| மூன்றுமிடம் | ஙரு | பதினோராமிடம் | எங |
| நான்காமிடம் | ஙஎ | பனிரண்டாமிடம் | எச |
| ஐந்தாமிடம் | ஙஅ | கன்னியாபுதன்லக்கினம் | எசா |
| ஆறுமிடம் | ஙகூ | இரண்டாமிடம் | எஎ |
| ஏழாமிடம் | சய | மூன்றுமிடம் | எஅ |
| எட்டாமிடம் | சஉ | நான்காமிடம் | எஅ |

# அட்டவணை.


| பொருள். | பக்கம். | பொருள். | பக்கம். |
|---|---|---|---|
| ஐந்தாமிடம் | ௭௬ | ஒன்பதாமிடம் | ௧௧௪ |
| ஆறாமிடம் | ௮௰ | பத்தாமிடம் | ௧௧௫ |
| ஏழாமிடம் | ௮௧ | பதினோராமிடம் | ௧௧௬ |
| எட்டாமிடம் | ௮௨ | பனிரண்டாமிடம் | ௧௧௭ |
| ஒன்பதாமிடம் | ௮௩ | மகரபுதன்லக்கினம் | ௧௧௮ |
| பத்தாமிடம் | ௮௩ | இரண்டாமிடம் | ௧௧௯ |
| பதினோராமிடம் | ௮௪ | மூன்றாமிடம | ௧௨௰ |
| பனிரண்டாமிடம் | ௮௫ | நான்காமிடம் | ௧௨௧ |
| துலாபுதன்லக்கினம் | ௮௭ | ஐந்தாமிடம் | ௧௨௧ |
| இரண்டாமிடம் | ௮௮ | ஆறாமிடம | ௧௨௨ |
| மூன்றாமிடம் | ௮௯ | ஏழாமிடம் | ௧௨௩ |
| நான்காமிடம் | ௮௯ | எட்டாமிடம் | ௧௨௪ |
| ஐந்தாமிடம் | ௯௰ | ஒன்பதாமிடம் | ௧௨௫ |
| ஆறாமிடம் | ௯௧ | பத்தாமிடம் | ௧௨௬ |
| ஏழாமிடம் | ௯௨ | பதினோராமிடம் | ௧௨௬ |
| எட்டாமிடம் | ௯௩ | பனிரண்டாமிடம் | ௧௨௭ |
| ஒன்பதாமிடம் | ௯௪ | கும்பபுதன்லக்கினம் | ௧௨௯ |
| பத்தாமிடம் | ௯௪ | இரண்டாமிடம் | ௧௩௰ |
| பதினோராமிடம் | ௯௫ | மூன்றாமிடம் | ௧௩௰ |
| பனிரண்டாமிடம் | ௯௬ | நான்காமிடம் | ௧௩௧ |
| விருச்சகபுதன்லக்கினம் | ௯௭ | ஐந்தாமிடம் | ௧௩௨ |
| இரண்டாமிடம் | ௯௮ | ஆறாமிடம் | ௧௩௩ |
| மூன்றாமிடம் | ௯௯ | ஏழாமிடம் | ௧௩௪ |
| நான்காமிடம் | ௱ | எட்டாமிடம் | ௧௩௫ |
| ஐந்தாமிடம் | ௱௧ | ஒன்பதாமிடம் | ௧௩௫ |
| ஆறாமிடம் | ௱௧ | பத்தாமிடம | ௧௩௬ |
| ஏழாமிடம் | ௱௨ | பதினோராமிடம் | ௧௩௭ |
| எட்டாமிடம் | ௱௩ | பனிரண்டாமிடம் | ௧௩௮ |
| ஒன்பதாமிடம் | ௱௪ | மீனபுதன்லக்கினம் | ௧௩௯ |
| பத்தாமிடம் | ௱௫ | இரண்டாமிடம் | ௧௪௰ |
| பதினோராமிடம் | ௱௬ | மூன்றாமிடம் | ௧௪௧ |
| பனிரண்டாமிடம் | ௱௬ | நான்காமிடம் | ௧௪௨ |
| தனுசுபுதன்லக்கினம் | ௱௮ | ஐந்தாமிடம் | ௧௪௨ |
| இரண்டாமிடம் | ௱௯ | ஆறாமிடம் | ௧௪௩ |
| மூன்றாமிடம் | ௱௯ | ஏழாமிடம் | ௧௪௪ |
| நான்காமிடம் | ௱௰ | எட்டாமிடம் | ௧௪௫ |
| ஐந்தாமிடம் | ௧௧௧ | ஒன்பதாமிடம் | ௧௪௬ |
| ஆறாமிடம் | ௧௧௨ | பத்தாமிடம் | ௧௪௬ |
| ஏழாமிடம் | ௧௧௩ | பதினோராமிடம் | ௧௪௭ |
| எட்டாமிடம் | ௱௧௪ | பனிரண்டாமிடம் | ௧௪௮ |


அட்டவணை-முற்றிற்று.

உ

சிவமயம்.

## பார்வதிக்கி பரமசிவன் வுபதேசித்த

# ஈஸ்வர நாடி சோதிடம்

சப்தகாண்டங்களில் ஒன்றாகிய நான்காம்பாகம்

## புதகாண்டம்

### மேடபுதன் வித்தையம்மான் வர்க்கப் பலன்.

| | | | |
|---|---|---|---|
| | ல பு. கே | | |
| | | | |
| | | | |
| | குரு | | |

(1)

உதையத்தில் மாதுலக்காரகன், கேது வுடன் கூடி வாக்குஸ்தானத்தை, பாக்கிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் ஜாதகனுக்கு நல்ல வித்தையும் அதனால் மேன்மையு முண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல. பு ரா | | |
| | | | |
| | | | |
| | | | |

(2)

உதையத்தில் மாது லக்காரகன், ராகு வுடன்கூடி ஒருவரும் பாராமல், த்விதியஸ்தானம் சுத்தமாயிருந்தால், புதன் திசை பிற்பாதி உத்தியோகம், விவாகம், நீச்சவித்தை, சங்கீதவித்தை, செல்வப்பெருக்கு, வாகனம், மண்மனை யுண்டாதல் முதலிய பலனென்பர்.




(3)

உதையத்தில் மாதுலக்காரகன், ஏகனுய் தனித்து ஒருவரும் பாராமல் கர்ம லாபாதிபதியான சனி வாக்குஸ்தானமேறி யிருந்தால் மாமனிருவர் ஜாதகனுக்கு, வித்தைபேத மென்பர்.




(4)

உதையத்தில் மாதுலக்காரகன் தன பஞ்சம சப்தமாதிபதிகளுடன் கூடி வாக்குஸ்தானத்தில் இரவி புதல்வனேறியிருந்தால், மாமன் ஏகம் ஜாதகனுக்கு வித்தையுண்டாகி அரசா கண்டுகளிக்கும்படி வேலை செய்வனென்பர்.




(5)

உதையத்தில், மாதுலக்காரகன் பஞ்சம கர்ம லாபாதிபதிகளுடன், கூடி பாக்கிய விரையாதிபதியான குரு, ராகுவுடன் வாக்குஸ்தானமேறியிருந்தால் ஜாதகனுக்கு வித்தை அற்பம், கூலிவேலை ரோகியா யிருப்பனென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் வாக்குஸ்தானாதிபதியான சுக்கிரன் திருதியமேறியிருந்தால் மாமனிருவர் யெல்லாம் க்ஷீணித்துப்போகும், ஜாதகனுக்கு சுயபாஷையால் ஜீவனமென்பர்.




(7)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சமாதிபதியுடன் கூடி ஒருவரும் நோக்காமல் வாக்குஸ்தானுதிபதி, உச்சனுய் விரயமடைந்திருந்தால், ஜாதகன் யோகவானுய் சௌக்கியமாய் வாழ்வனென்பர்.




(8)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஏகனுய் தனித்து அஷ்டமஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர பூமகனுல், நேரே நோக்கப்பட்டிருந்தால் அம்மான்களுக்கு பயம், மத்தியகாலம, அன்னிய ஸ்திரீயுடன் சேசமாரலாவனென்பர்.




(9)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சமாதிபதியான இரவியுடன் கூடி ஒருவரும் நோக்காமல், வாக்குஸ்தானுதிபதி வீரியமேறியிருந்தால் அமமான்களிருவரி லொருவன் விர்த்தியில்லை யென்பர்.




(10)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஏகனுய் தனித்து ஆயுர்ஸ்தானமேறிய, சதுர்த்தகேந்திராதிபதியால், நோக்கப்பட்டிருந்தால அம்மான்கள் மூவரிலொருவன் வேதமோதுவன், ஜாதகன் வித்தையில் தேர்ச்சியுள்ளவனுய் சுகமடைவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | பு. சூ சு |
| | | | |
| | | | |
| | | | |

## (11) மூன்றாமிடம்.

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய் த்விதிய பஞ்சம சப்தமாதிபதிகளுடன் கூடி வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தால் அம்மான்கள் • நான்கில் இருவர் விர்த்தி, ஜாதகன் குடும்பம் சுகமிராதென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | பு |
| | | | |
| | | | |
| குரு | | | |

## (12)

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரம்பெற்று ஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய ஸ்வக்ஷேத்திர, பாக்கிய விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் வித்தையற்பம், சிலநாள் உத்தியோகம் பின்னால் மாறுபடுதல், சன்னாசிசேர்க்கை, பின்னால் சகோதரன் மூலம் கொஞ்சம் சௌக்கியமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| சனி | ல | | பு |
| | | | |
| | | | |
| | | | |

## (13)

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல், விரையமடைந்த கர்ம லாபாதிபதியால் வாக்குஸ்தானத்தை நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் சிவஸ்தலங்கள் விர்த்திசெய்து செல்வானாயும் பெண்கள் மூலம் கவலையுள்ளவனாயுமிருப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | பு. சு |
| | | | |
| | | | |
| | | | |

## (14)

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன் தனசப்தமாதிபதியுடன் கூடி ஒருவரும் பாராமல் வாக்குஸ்தானமும் சுத்தமாயிருந்தால் தாய் மாமனில்லை, வேறுமாமன்களுண்டாம், சுகமில்லையென்பர்,

| செ | ல | கே | பு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

## (15)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து விரையமடைந்த லக்கின அஷ்டமாதிபதியால், நோக்கப்பட்டு வாக்குஸ்தானத்தில் மோக்ஷகாரகனேறி யிருந்தால், அம்மான்கள் மூவர் நாளுக்குநாள் க்ஷீணமடையுமென்பர்.

| | ல | | |
|---|---|---|---|
| | | | பு.ரா சனி |
| | | | |
| | குரு | | |

## (16) நான்காமிடம்.

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், சனி, ராகு இவர்களுடன்கூடி, வாக்குஸ்தானத்தை, ஆயுள்ஸ்தானமேறிய, வியாழனால் நேரே நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமனேகம், தெத்தாகவளர்வன் ஜாதகனும் விர்த்தியில்லையென்பர்.

| | ல | | |
|---|---|---|---|
| | | | பு செ |
| சனி | | | |
| | | | |

## (17)

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கின அஷ்டமாதிபதியுடன் கூடி தசமகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர கர்ம லாபாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், தாய்மாமனிரண்டு, கனிட்டன் தனித்து பெண்களையுடையவனாய், மலை நாடுகளில் பொருள் சேர்ப்பனென்பர்.

| | ல | | |
|---|---|---|---|
| | | | சூ.பு சு |
| | | | |
| | | | |

## (18)

நான்காமிடத்தில் மாதுலக்காரகன் தனபஞ்சம சப்தமாதிபதிகளுடன் கூடி, வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தால் தாய்மாமனில்லை, ஜாதகன் வித்தையுடையவனாயிருப்பனென்பர்.




## (19)

நான்காமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து சப்தமகேந்திரம்பெற்ற உச்ச சனியால், நோக்கப்பட்டு வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அல்பவித்தையுடையவனாய் அதன்மூலம் உத்தியோகம் செய்வனென்பர்.




## (20)

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், ரவி, சனி, ராகு இவர்களுடன்கூடி வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தால், தாய் மாமனிருவர் வித்தையில்லை, கூலிவியாபாரம் செய்வனென்பர்.




## (21) ஐந்தாமிடம்.

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் சூரியன், கேதுவுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய கர்ம லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை, ஜாதகன் ஆயுள்வேத சாஸ்திரங்களை, ஆராய்ச்சி செய்பவனாய் அரசாங்கத்தாரால் மேன்மைபெற்றிருப்பனென்பர்.




## (22)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் சுக பஞ்சமாதிபுடன்கூடி அதற்குப் பஞ்சமத்ரிகோணத்தில் சனி, கேது சேர்ந்திருந்தால், ஜாதகனுக்குக் காலூனம், சொல்பவித்தை, ஔசிதப்பிரயோகம் செய்வனென்பர்.




## (23)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வ க்ஷேத்திர பஞ்சமாதிபதியுடன் கூடி, வாக்கு ஸ்தானமேறிய, சுகாதிபதியை நீச்சகுருவா ல் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகனுக்கு இர ண்டுவித்தையுண்டாம். வித்தைமூலம் ஜீவ னம், பெண்கவலையுடையவனென்பர்.




## (24)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் பாக் கிய விரையாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமல் வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தா ல் ஜாதகனுக்கு உபையவித்தை கடைசிவ ரையிலும் வித்தைமூலம் ஜீவனம் பிற்பாகத் தில் ஞான அறிவுண்டென்பர்.




## (25)

ஐந்தாமிடததில் மாதுலக்காரகன் ஏக னாய் தனித்து, லக்கினகேந்திரம்பெற்ற் பா க்கிய விரையாதிபதியால் நோக்கபபட்டிருந் தால் திருதியாதிபன் திசையில் ஜாதகனுக்கு கண்டமுண்டாகி நிவர்த்தி, பின் சம்சாதர கெர்ப்ப பின்னம், முன் சகோதர மரணம், கல்வி சித்தியும் பின்னால் பெண்ணு முண் டென்பர்.




## (26) ஆறுமிடம்,

ஆறுமிடத்தில் மாதுலக்காரகன், உச் சஸ்வக்ஷேத்திரனாய் ஏகனாகதனித்து ஒருவ ரும் பாராமல் வாக்குஸ்தானமும் சுத்தமா யிருந்தால் புதன் திசை, ஜாதகனுக்கு புத்தி தெளிவும், வித்தையால் மேன்மையும், புத் திரவிர்த்தியுமுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | குரு | |
| | | | |
| | | | |
| | | | ரா பு |

## (27)

ஆரூமிடத்தில் மாதுலக்காரகன், உச்சஸ்வக்ஷேத்திரனுய், ஞானகாரகனுடன்கூடி பாக்கிய விரையாதிபதியான பிரகஸ்பதி வாக்குஸ்தானமேறி யிருந்தால், புதபுக்தி, சகோதரமரணம் ஆதிதாயும் கடைசிதாவு மரணம், ஜாதகன் வித்தையும் திரவியவானுமாயுமிருப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | | | |
| | | | சனி |
| | | | |
| | | | பு சு கே |

## (28)

ஆரூமிடத்தில் மாதுலக்காரகன், ரவி கேதுவுடன்கூடி, சுகஸ்தானமேறிய கர்மலாபாதிபதியால் நோக்கப்பட்டு வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனிருவர், ஜாதகன் அதிகபூமிகளை யுடையவனுயிருப்பன், வித்தையல்பபம், சொத்துகளை பெண்களடைவர்கள், புதபுக்தி பிதாமஹமரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | சனி |
| | | | |
| | | | சு. பு ச |

## (29)

ஆரூமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் ஸ்வக்ஷேத்ர உச்சனுய், தனபஞ்சம சப்தமாதிபதிகளுடன்கூடி, மாதுருஸ்தானமேறிய கர்மலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், அம்மான்கள் நால்வரில், ஏகன் தீர்க்கம், ஜாதகனுக்கு வித்தையுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| சனி | ல | | செ |
| | | | |
| | | | |
| | | | கு |

## (30)

ஆரூமிடத்தில் மாதுலக்காரகன், பஞ்சமாதிபதியுடன் கூடி திருதிய விரையமடைந்த குஜன், சனி இவ்விருவர்களால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை கடைசி களத்திரமரணம், குடும்பத்தில் விரையம், மனதிற் [illegible]லன்களாக நடக்குமென்பர்.




## (31) ஏழாமிடம்.

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் பஞ்சமாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமல் வாக்குஸ்தானத்தை அஷ்டமஸ்தானமேறிய குஜன், குருயிவர்களால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்க நாசமடையுமென்பர்.




## (32)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர தனசப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமல் வாக்குஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனேகம் கடனால் முறிவான் புதன் திசையில் ஜாதகன் ஜேஷ்டபிதாவினிடம் வளர்வனென்பர்.




## (33)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல், வாக்குஸ்தானத்தில் சுகாதிபதியான சந்திரன் உச்சப்பெற்றிருந்தால், அம்மான்களிருவர் நல்லவித்தையு மேன்மையுமுடையவர்களாயிருப்பரென்பர்.




## (34)

ஏழாமிடத்தில், மாதுலக்காரகன் ஏகனாய் தனித்த பஞ்சமதிரிகோணமேறிய கர்மலாபாதிபதியால் நோக்கப்பட்டு த்விதியாதிபன், நீச்சம் பெற்றிருந்தால், மாமனேகம் அலைந்த ஜீவனம் ஜாதகன் களத்திரமூலமும் வித்தைமூலமும் பொருள்களை விரையம் செய்வனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | சனி | |
| | | | |
| | | | |
| | | பு செ கே | |

## (35)

ஏழாமிடத்தில், மாதுலக்காரகனாகிய, புதன், ஆரல் கேதுவுடன்கூடி, ஒருவரும் நோக்காமல், கர்ம லாபாதிபதியான சனி, வாக்குஸ்தானமேறியிருந்தால், மாமனில்லை ஜாதகன் நீச்சவித்தையால் விர்த்தியாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| | | | செ |
| | சூ பு | | |

## (36) எட்டாமிடம்.

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பஞ்சமாதிபதியுடன் கூடி, புத்திரஸ்தானம்பற்றிய லக்கின அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம. தாரமூன்றில், பெண்ணேகம் விர்த்தி, போகமுள்ளவனாய் ஜாதகன் குடும்பத்தை சவரக்ஷணை செய்வனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| | | | |
| | பு செ சு, ரு | | |

## (37)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கினஷ்டம் பாக்கியவிரையாதிபதிகளுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு வித்தையற்பம், ஆயுதங்கள்மூலம் ஜீவிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| | | | |
| | பு செ சு, ச | | |

## (38)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன், ஜென்ம தனசுக சப்தம அஷ்டமாதிபதிகளுடன், கூடியிருந்தால் அம்மான்கள் நான்கில் ஏகன் தீர்க்கம் ஜாதகன் வித்தைமூலம் ஜீவிப்பன், பிதுர்துவேஷி யென்பர்.




## (39)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன், தனசப்தம கர்மலாபாதிபதிகளுடன் கூடியிருந்தால் மாமனிருவர் சுகஜீவனம், திருதிய ரோகாதிபன் திசையில் ஜாதகன் அரிட்டமாவனென்பர்.




## (40)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன், வியாழன், ராகுவுடன் கூடியிருந்தால், மாமன் வர்க்கம் நாளுக்குநாளாகக் குறைவுபடும். ஜாதகன் மேலகோட்டில் வாசம் செய்வனென்பர்.




## (41) ஒன்பதாமிடம்.

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், இரவி, கேதுவுடன்கூடி, ஒருவரும்பாராமல் த்விதியஸ்தானம், சுத்தமாயிருந்தால் மாமனிருவர் குறைந்தபலன், ஜாதகன் ஒன்பது வயதில் சுவீகாரமாவனென்பர்.




## (42)

ஒன்பதாமிடத்தில் மாதலக்காரகன், தனசப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும் நோக்காமல்; வாக்குஸ்தானமும், சுத்தமாயிருந்தால், மாமனேகம் வித்தையில்லையென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| | | | |
| பு செ சு. சூ | குரு ரா | | |

(43)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின, பஞ்சம, அஷ்டம, கர்ம, லாபாதிபதிகளுடன்கூடி, வாக்குஸ்தானத்தை, குரு, ராகு யிவரிருவரால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவரில் கனிட்டன் மலைநாட்டில் கைத்தொழில்மூலம் ஜீவிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| | | | |
| பு செ குரு | | | |

(44)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், லக்கின, அஷ்டம, பாக்கிய விரையாதிபதிகளுடன்கூடி நேத்திரஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமன்மகன் ஜாதகனுக்கு ஐந்து வயதில் ஜலகண்டம் நிவர்த்தியென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| | | | |
| பு செ | | சனி | |

(45)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய மதிமகன் லக்கின அஷ்டமாதிபதியுடன் கூடி சப்தமகேந்திரமேறிய உச்சகர்ம லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்மகன் தனவான், ஜாதகன் வித்தையுடையவனாய், பூமிமூலம் ஜீவிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| | | | |
| பு. சூ சனி | | | |
| | | | |

(46) பத்தாமிடம்,

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், பஞ்சம, கர்ம லாபாதிபதிகளுடன், கூடி ஒருவருக்கும் பாராமல் த்விதியஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மதிமகன் திசையில், தாய்மரணம், பிதிர் ஜாதாவுமரணமென்பர்.

## (47)




பத்தாமிடத்தில், மாதுலக்காரகனாகிய அம்புலி சுதன், ஏகனாய்த் தனித்து ஒருவருடம் பாராமல் வாக்குஸ்தானமும் சுத்தமாயிருந்தால், மாமனேகன் தாரமிரண்டு விர்த்தியில்லாமல் அம்மானிறந்த பின்பு சகோதரனை சுவீகாரங்கொடுத்து அதனால் இழிவும் விவகாரமுமுண்டென்பர்.

## (48)




பத்தாமிடத்தில், மாதுலக்காரகன் ஏகனாய் நின்று ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானத்தில் ரவி, புகர், சனி, ராகு நால்வரும் கூடியிருந்தால் மாமனேகன் விர்த்தியிலலை வம்ஷம் க்ஷீணமடையுமென்பர்.

## (49)




பத்தாமிடத்தில், மாதுலக்காரகன் கேதுவுடன்கூடி ஒருவரும் நோக்காயிருந்தால் மாமனிருவர் விர்த்தியில்லை, செல்வமில்லை, உபாய ஜீவனம, ஜாதகன் நீச்சவித்தை விர்த்தியாய் உத்தியோகமூலம் மேன்மையடைவனென்பர்.

## (50)




பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின அஷ்டமாதிபதியான உச்ச, குஜனுடன் கூடி, சதுர்த்தகேந்திரமேறிய பாக்கியவிரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், அம்மான்கள் மூவரிலொருவனுக்குப் புத்திரதோடம் ஜாதகன் வித்தையால் சுகமடைவனென்பர்.




## (51) பதினோராமிடம்

பதினோராமிடத்தில், மாதுலக்காரகன் சுக கர்ம லாபாதிபதிகளுடன்கூடி, ஒருவரு [illegible]மலிருந்தால், மூப்புத்துமூன்றுவரை தாய, தீர்க்கம், மாயனேகம் குடும்பத்தில் பொருந்தாள், ஜாதகன் வித்தையுடையவனாய் சுக்ஜீவனம் செய்வனென்பர்.




## (52)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய அறிஞன் பஞ்சமாதிபதியுடன்கூடி, மாதுலஸ்தானமேறிய பாக்கிய, விரையாதிபதியால நோக்கப்பட்டிருந்தால், திருதியாதிபன் திசையில், ஜாதகன் வயிற்போக்கா வரிட்டமாவன், பிந்தி ஆண்ஜெனனமுண்டென்பர்.




## (53)

பதினோராமிடத்தில், மாதுலக்காரகன் மாதுலஸ்தானாதிபதியுடன்கூடி, நவதிரிகோணமேறிய கர்மலாபாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு உபையவித்தை தேர்ச்சியில்லை, மூர்க்கன் வித்தைமூலம் தேசங்கள்சுற்றி ஜீவிப்பனென்பர்.




## (54)

பதினோராமிடத்தில், மாதுலக்காரகன் தனசப்தமாதிபதியுடன்கூடி சப்தமபாக்கியமேறிய குரு, சனி, யிவர்களால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகனுக்கு வித்தையற்பம், புத்திபுர்த்தி விவாகமுண்டென்பர்.




## (55)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி மாதுலஸ்தானத்தில் ராகுயிருந்து த்விதியஸ்தானத்தை ஒருவரும் பாராமலிருந்தால் மாமனில்லை, வித்தையர்பம் ஜாதகனுக்கு பத்துவயதிற்கு மேல் வியாபாரத்தால பூமி பொருள் சுயார்ச்சியமுண்டென்பர்.




## (56) பனிரெண்டாமிடம்,

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் நீச்சனாய் தனபஞ்சம சப்தமாதிபதிகளுடன்கூடி பாக்கிய விரையாதிபதியான குரு மாதுலஸ்தானமேறியிருந்தால் மாமனேகன் தீர்க்கம் ஜாதகனுக்கு வாயூனமென்பர்.




## (57)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ராகுவுடன்கூடி ரோகஸ்தானமேறிய கர்ம லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம், ரொணத்தாலமுரிபட்டும், தானடுமைபட்டு மிருப்பனென்பர்.




## (58)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சுக்கிரன், கேதுவுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் மாமனில்லை, புதன்திசை முற்பாகம் பிதுர்கர்மம் கடைசி களத்திர மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு. சு | ல | | |
| | | | |
| | | | |
| | | | குரு |

## (59)

பதினோராமிடத்தில், மாதுலக்காரகன் நீச்சமாய், தனசப்தமாதிபதியான உச்சசுகருடன்கூடி, பாக்கியவிரயாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன் ஜாதகனுக்கு வித்தையுண்டாம் கைத்தொழில் வியாபாரம் செய்வனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு. ச | ல | | |
| | | | |
| | | | |
| | | | குரு |

## (60)

பனிரெண்டாமிடத்தில், மாதுலக்காரகன் நீச்சமாய் சுகாதிபதியுடன்கூடி, ரோகஸ்தானமேறிய பாக்கிய விரயாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம், தாயால் தந்பசம்செகதீணை, புதன் திசை பிற்பாதி த்திரமாணம் கடைசி ஜாதகனுக்கு விவாகமென்பர்.

மேடலக்கண சக்கரம் (60)

## மேடபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்

முற்றிற்று.

# புதகாண்டம்

## ரிடபபுதன் வித்தையம்மான் வர்க்கப் பலன்.




(1)

உதையத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் பாக்கிய காமாதிபதியுடன், ஒருவரும் பாராமல் மாதுலஸதானத்தை, லாபமேறிய குஜன், சுக்கிரனிவர்களால் நேரே நோக்கப்பட்டிருந்தால், அம்மான்களாறில், ஏகன் தவிர மற்றவர்களெல்லாம் துன்பப்படுவார்களென்பர்




(2)

உதையத்தில் மாதுலக்காரகன், சுக, சப்தம விரையாதிபதிகளுடன் கூடி, கர்மஸ்தானமேறிய, அஷ்டம லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகனும், தாயும், அன்னியனுக்கு ஆறுவயதில், தெத்தும்பாலாவார்களெனபர்.




(3)

உதையத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் ஏகனுய் தனித்து, களத்திரஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர சப்தம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் மேலான யோகமுடையவன், மாமனுல் வஞ்சிக்கப்பட்டவனுய் துன்பமுண்டாம், மத்தியவயதில், மரணமாவனென்பர்.

## (4)




உதயத்தில் மாதுலக்காரகன், சுகாதிபதியான இரவியுடன் கூடி, ஒருவரும் நோக்காமலிருந்தால், புதன்திசை முற்பாகம், புத்திரசோகமடைந்து பின்பு மரணம், ஜாதகன் சாஸ்திரமறிந்தவனாய் அரசாங்கத்தை யடுத்து ஜீவித்து அன்னியரால் கர்மம் செய்யப்படுவதென்பர்.

## (5)




உதயத்தில் மாதுலக்காரகன், ஜென்மசுக ரோகாதிபதிகளுடன்கூடி, சப்தமகேந்திரமேறிய, அஷ்டம லாபாதிபதியால் நேரே பார்க்கப்பட்டிருந்தால், ஜெனனகாலம், தாய்க்கு, ரோகம், பத்துநாளில் ஜாதகன் அரிட்டமாவனென்பர்.

## (6) இரண்டாமிடம்.




இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன், சுகாதிபதியுடன்கூடி, ரோக, அஷ்டம ஸதானங்களேறிய குரு, குஜனிவர்களால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிரண்டிலொருவன் மரணம், மற்றவனுக்குத் தெண்டனையுண்டாம், குணமில்லையென்பர்.

## (7)




இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஸ்வக்ஷேத்திரம்பெற்று ஏகனாகநின்று வைரியமடைந்த, நீச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன், இளமையில் பிதுர், மாதுர் இழந்து, பிதுர்வகையில் சவரக்ஷணைப்பெருவனென்பர்.




(8)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன், சுக, அஷ்டம லாபாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும், சுத்தமாயிருந்தால் மாமனேகன், ஜாதகன் மூன்றும்வயதில், வைசூரியால், மரணமாவனென்பர்,




(9)

இரண்டாமிடத்தில், மாதுலக்காரகனுகிய புதன் ஜென்ம சுக ரோக்கிய பாக்கிய கர்மாதிபதிகளுடன் கூடியிருந்தால் அம்மான்கள் தனித்தனிப்பிரிந்திருப்பர் ஜாதகனுக்கு மத்தியவயதில் நேத்திர மூனபாகுமென்பர்.




(10)

இரண்டாமிடத்தில், மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய், ஏகனுய் தனித்து ஒருவரும்பாராமல் மூன்றுமாதி பஞ்சம திரிகோணமேறியிருந்தால் அம்மான்களிருவர் நல்லவித்தையும், ஞான அறிவும் மிகுந்த செல்வத்தையும் பொருந்தி யிருப்பார்களென்பர்.

(11) மூன்றமிடம்.




மூன்றமிடத்தில் மாதுலக்காரகனுகிய தேர்பபாகன் ஜென்ம சுக ரோக அஷ்டம லாபாதிபதிகளுடன் கூடியிருந்தால் பிதுர், மாதுர்களிளமையில் மரணம் பிதாவின் சொத்துகள் சகோதரிகளால் அழிந்துபோகுமென்பர்.




## (12)

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்மரோகாதிபதியுடன்கூடி, ஆயுர்ஸ்தானமேறிய சப்தம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிரண்டில் கனிட்டன் விர்த்தி, புதன்திசை, சுகம், கிரகவிர்த்தி சமயோகமென்பர்.




## (13)

மூன்றாமிடத்தில், மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர சந்திரனுடன்கூடி, ஒருவரும் பாராமல் பாக்கிய கர்மாதிபதியான, மாதுலஸ்தானமேறியிருந்தால் அம்மான்கள் மூன்றில் ஜேஷ்டன் விர்த்தியில்லை, வித்தையுண்டாம், சகோதரனால் கர்மம் செய்யப்படுவனென்பர்.




## (14)

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன், ராகுவுடன்கூடி ஒருவரும் பாராமல் சப்தம விரையாதிபதியான குஜன், மாதுலஸ்தானமேறியிருந்தால் மாமனேகம், சந்ததியில்லை பெண்விர்த்தியுண்டாம், ஜாதகன் கிருஷி மூலம் ஜீவனஞ்செய்வன், வித்தையற்பமென்பர்.




## (15)

மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் ஏகனாய் தனித்து உச்ச குஜனால் பார்க்கப்பட்டு ஜென்மரோகாதிபதியான சுக்கிரன், நீச்சமடைந்திருந்தால் மாமன் விர்த்தியில்லை, ஜாதகன் பூமி மூலம் ஜீவனம் செய்வன், வித்தையற்பம், களத்திரமூலம் சுகமற்பமென்பர்.




## (16) நான்காமிடம்.

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய பண்டிதன் ஸ்வக்ஷேத்திர சதுர்த்தகேந்திராதிபதியுடன் கூடி, பஞ்சமாதி திசையும், வந்தால ஜாதகன், உடனே மரணமடைவனென்பர்.




## (17)

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், ரவி, சுக்கிரன், ராகு இவர் மூவருடன்கூடி, வாக்குஸ்தானமேறிய பாக்கிய கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் விர்த்தியில்லை, அம்மான்களிருவர் வறுமையுடையவர்களாயிருப்பரென்பர்.




## (18)

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சப்தம விரையாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும், சுத்தமாயிருந்தால் மாமனிருவர், விர்த்தியுண்டாம், புதன் புத்தியும் வந்தால், ஜாதகனுக்கு இளமையில் விவாகமுண்டென்பர்.




## (19)

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஜென்ம ரோகாதிபதியுடன் கூடி, தசமகேந்திரமேறிய அஷ்டம லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய் மாமனேகன், சுகமில்லை, புத்திரியுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | |
| | | | பு சனி |
| | | | செ |

## (20)

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பாக்கிய கர்மாதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமல் சப்தம விரையாதிபதியான குஜன் மாதுலஸ்தானமேறியிருந்தால் தாய் மாமனேகன், வித்தை தேர்ச்சியுண்டாம், ஜாதகன் வியாபாரமூலம் ஜீவிப்பன், சுவல்ப வித்தை, கீழ்பார்வையென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | செ |
| | | | |
| | | | |
| | | | பு. |

## (21) ஐந்தாமிடம்.

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் உச்ச ஸ்வக்ஷேத்திரனாய் ஏகனாகநின்று த்விதியஸ்தானம்பெற்ற சப்தம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமன் மூவரில், கனிட்டன் பெண்மூலம் தெத்துபோல சுகமடைவன் மற்றிருவரும் பாகங்களை அழித்துவிட்டு அன்னியதேச மாரலாவரென்பர்.

| | | | |
|---|---|---|---|
| குரு | | ல | |
| | | | |
| | | | |
| பு சு சனி | | | |

## (22)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சுகபாக்கிய கர்மாதிபதிகளுடன் கூடி லாபஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர அஷ்டம லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் மாதம் பதினைந்தில் அரிட்டமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| ச | | ல | |
| | | | |
| | | | |
| பு சு | | | |

## (23)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் உச்ச ஆக்ஷியாகி ஜென்ம ரோகாதிபதியான நீச்சகோளுடன்கூடி, திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமனிருவரிலொருவன், ஜலத்தில் மரணம் கனிட்டன் விர்த்தி ஜாதகனுக்கு வித்தையில்லையென்பர்.




(24)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சதுர்த்தகேந்திராதிபதியுடன் கூடி, லாபஸ்தானமேறிய வீரியாதிபதியால் நேரே பார்க்கப்பட்டிருந்தால் புதன் திசையில், ஜாதகன் அனேக கர்மங்கள்செய்து தேசம் சுற்றி அலைந்து பிறகு மரணமாவனென்பர்.




(25)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் அஷ்டம, பாக்கிய, காம லாபாதிபதிகளுடன் கூடியிருந்தால் மாமனேகம் கஷ்டஜீவனம் அரசர் மகிழும் வித்தையுண்டாம் ஜாதகன் நான்குவயதில் மரணமாவனென்பர்.




(26) ஆருமிடம்.

ஆருமிடத்தில, மாதுலக்காரகன் ஜென்ம சுக ரோகாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானமும சுத்தமாயிருந்தால் தாய் மாமனிருவர் விர்த்தியில்லை ஜாதகனுக்கு அறுபதில் புதன்திசையில் டச்சைவாதரோகம சகோதரமரணம் கடைசி ஜாதகனு மரணமேன்பர்.




(27)

ஆருமிடத்தில், மாதுலககாரகனுகிய மதி, சுதன், ஸ்வக்ஷேத்திர, ஜென்மரோகாதிபதியுடன் கூடி ஒருவரும் பாராமல் பஞ்சம திரிகோணமும், சுத்தமாயிருந்தால், தாய் மாமனிருவர் புதன் புக்தி சகோதரவர்க்கத்திலும் ஜாதகனுக்கும் விவாகமுண்டென்பர்,




(28)

ஆறாமிடத்தில் மாதுலங்காரகன் ஜென்ம ரோகாதிபதியான அசுர குருவுடன் கூடி, விரயஸ்தானமேறிய சதுர்த்தகேந்திராதிபதியால் நோக்கப்பட்டிருந்தால ஜாதகன் ஜலவியாபாரம் செய்வனென்பர்




(29)

ஆறாமிடத்தில், மாதுலக்காரகனாகிய பிறை, புதன் ஏகராசிய தனித்து விரையமேறிய நீச்ச சனியால் நேரே நோக்கப்பட்டு மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் அம்மான்கள் விர்த்தியில்லை சுகமில்லை புதன் திசை சகோதர மரணமென்பர்.




(30)

ஆறாமிடத்தில், மாதுலங்காரகனாகிய கணக்கன் இரவி, சனி, ராகு, இவர்களுடன் கூடி புண்ணியரொருவரும் பாராமலிருந்தால் புதன் திசையில், ஒன்பதாவது வயதில் பிதுர்மரணம் பிந்தி ஜாதகனுமரணமென்பர்.




(31) ஏழாமிடம்.

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன், ஜென்ம சுக ரோகாதிபதிகளுடன் கூடி, பஞ்சமஸ்தானம் சுத்தமாயிருந்தால் தாய் மாமன் நான்கில் தீர்க்கமேகம் பூமிகளுடையவனாய், எப்போதும் விவகாரமூலம் அலைவனென்பர்.




## (32)

ஏழாமிடத்தில், மாதுலக்காரகன், உடைய மந்திரிகளுடன் கூடி, ஒருவரும் நோக்காமல், மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால், தாய் மாமனேகன், இருபத்துநான்கு வயதில், ஜாதகன் மரணமாவனென்பர்.




## (33)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால்; தாய் மாமனிருவர், ஜாதகன், மூன்றுவயதில் வைசூரியால் மரணமென்பர்.




## (34)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன், அஷ்டம, லாபாதிபதியுடன் கூடி, மற்றெவரும் பாராமல், மாதுல்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால், தாய் மாமனேகன், விர்த்தியுண்டாம், ஜாதகன் நீச ஸ்திரீபால் குடித்து மூன்று திங்களில் மரணம், முன்னமே தாயரிட்டமென்பர்.




## (35)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், சூரியன், கேதுவுடன்கூடி, ஒருவரும் நோக்காமல், பஞ்சமஸ்தானம் சுத்தமாயிருந்தால், மாமனேகன், புத்திரதோடம், வித்தையில்லை, அல்ப ஜீவனம்செய்வனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | |
| | | | |
| பு செ | | | |

## (36) எட்டாமிடம்.

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சப்தம விரையாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாரமலிருந்தால் மாமனில்லை, ஜாதகன் பிறந்ததுமுதல் சிலநாள் தாய்க்கு காத்து சேஷ்டை யுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | |
| | | | |
| பு சூ | | | |

## (37)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன், சதுர்த்த கேந்திராதிபதியுடன்கூடி, ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால், பஞ்சமாதிபன் திசையில், முன்னால் ஜாதகனும், பின்னால் பிதாவும், அரிட்டமாவரென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | |
| | | | |
| பு சு சனி | | | கே |

## (33)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன், ஜென்ம, ரோக, பாக்கிய, கர்மாதிபதிகளுடன் கூடி, கேது, பஞ்சமஸ்தானமேறியிருந்தால், மாமன் வம்சமில்லை, ஜாதகன் புத்திர தோடமுள்ளவன், வித்தையில்லை, கஷ்ட ஜீவனமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | |
| | | | |
| கே பு | | சனி | |

## (39)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் மோக்ஷகாரகனுடன்கூடி, ரோகஸ்தானமேறிய, உச்ச பாக்கிய கர்மாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன், விர்த்தியில்லை, செல்வமில்லை, வித்தையில்லை, கூலிவேலை, அலைந்த ஜீவனமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | • | ல | |
| • | | | |
| குரு | • | | |
| பு | | | |

## (40)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் மாதுலஸ்தானத்தை, நவதிரிகோணமேறிய நீச்ச குருவால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனிருவர் குடும்பம் ஒற்றுமை, சொல் பதனம், கனிட்டனுக்குப் புத்திரதோடம் பெண் விர்த்தி யுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| சு | | ல | |
| • | | | |
| பு | | | |
| | | | ரா ச |

## (41) ஒன்பதாமிடம்.

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமேறிய, சந்திரன், ராகுவை, லாபமேறிய சுகாதிபதியால், நேரே நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமனிருவர், ஜாதகன் விர்த்தியில்லை யென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | • | ல | |
| | | | |
| பு சூ கே | | | |
| | | செ | |

## (42)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், பானு கேதுவுடன்கூடி, ரோகஸ்தானமேறிய சப்தம விரையாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால் மாமன்வர்க்க சேதம், ஏகம் தீர்க்கம் ஜாதகனும், வாரமொன்றி லரிட்டமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | • | | |
| பு ரா | | | |
| | சனி | | |

## (43)

ஒன்பதாமிடத்தில், மாதுலக்காரகன் ராகுவுடன் கூடி, சப்தமகேந்திரம்பெற்ற பாக்கிய கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை, ஜாதகன் உடனே மரணமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | ச |
| பு ரா சனி | | | |
| | | | |

## (44)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், ஸ்வக்ஷேத்திர சனி, ஞானகாரகனுகிய ராகு, இவர்களுடன் கூடி, மூன்ருமாதிபதியால், நேரே நோக்கப்பட்டிருந்தால், அம்மான்களை மூவர், அலைந்து உபாய ஜீவனம் செய்வார்களென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | சனி | ல | |
| | | | |
| பு செ | | | |
| | | | |

## (45)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சப்தம விரையாதிபதியான, உச்ச குஜனுடன்கூடி, விரையமடைந்த நீச்ச சனியால் நோக்கப்பட்டிருந்தால், தாய் மாமனேகன், வித்தையில்லை, பூமி மூலம் ஜீவனம் விர்த்தியில்லை யென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| பு கு | | | |
| | | | |
| | | | |

## (46) பத்தாமிடம்,

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன், சதுர்த்தகேந்திராதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமல் தனபஞ்சமாதிபன் திசையில், பிறந்தால் இருபத்தொன்றில், பூமிமூலம் தனப்ராப்த்தியுண்டாய். இருபத்தெட்டில் புதன்புத்தி வருங்காலம், வீண் டம்பத்திலுல பொருள்களை அழித்து ஜாதகன், வருமைப் படுவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| பு சு | | | செ |
| | | | |
| | | | |

## (47)

பத்தாமிடத்தில், மாதுலக்காரகன் ஜென்மநோகாதிபதியுடன் கூடி, திருதிய ஸ்தானமேறிய, நீச்ச சப்தம, விரையாதிபதியால் நோக்கப்பட்டு, புதன் திசையிலுதித்தால் மூன்று வயதில், ஜாதகன் அரிட்டமாவனென்பர்.




## (48)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன், சுக்கிரன், ராகுவுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய திருதியாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமன் மூவர், விர்த்தியில்லை ஜாதகன் மாதமொன்றில், றிணங்கண்டு மரணமாவனென்பர்.




## (49)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், அஷ்டமலாபாதிபதியுடன் கூடி, சுககேந்திரம்பெற்ற மூன்றுமாதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகனுக்கு, நாற்பத்திரண்டிற்குள் தாய் தவிர, மற்றவர்க்கமெல்லாம் தீர்ந்துபோகுமென்பர்.




## (50)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன், லக்கின, திருதிய சுகரோகாதிபதிகளுடன்கூடி, கிரகஸ்தானமேறிய பாக்கிய, காமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்க மிடுக்கமாம, புதன் திசையில் சுபதேசம் வருதல் பொருள்விரைய முதலிய பலனென்பர்.




## (51) பதினோராமிடம்.

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், நீச்சம்பெற்று ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமலிருந்தால், தாய் மாமனேகன் உபைய தாரமுண்டாம், பிரதமதாரம் நாய்கடியுண்டு மரணம், அம்மான் கரும செலவுழுழுதும், ஜாதகனே செய்வனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு சூ | | ல | |
| | | | |
| | | | |
| | | | |

## (52)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன், சதுர்த்த கேந்திராதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமலிருந்தால் புதன் திசையில், தாய்க்கு ரோகமுண்டாகி பதினைந்து நாளில் மரணம், ஜாதகன் தாய்வழியில் சிலகாலம் வளர்வனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு சு கே | | ல | |
| | | | |
| | | | |
| | | | ச |

## (53)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சுக்கிரன், கேதுவுடன்கூடி மாதுலஸ்தானமேறிய திருதியாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால ஜாதகன், இளமையில் மலைநாட்டையடுத்து அவ்விடத்திலேயே ஜீவகாலத்தைக்கழிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூ பு | | ல | |
| | | | |
| சனி | | | |
| | | | ச |

## (54)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன், வாகனாதிபதியுடன்கூடி, ஸ்வக்ஷேத்திர பாக்கிய கர்மாதிபதியால் பார்க்கப்பட்டு, மாதுலஸ்தானத்தில் சந்திரனிருந்தால், மாமனேகம் ஜாதகன் மத்தியகாலத்தில் குடும்பத்தை விட்டுப்பிரிந்துத் தனிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு சூ செ | | ல | |
| | | | குரு |
| | | | |
| | | | |

## (55)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன், சுகசப்தம விரயாதிபதிகளுடன் கூடி, அஷ்டம லாபாதிபதியான, உச்ச குருவால் பார்க்கப்பட்டிருந்தால், ஜாதகன் நாள் மூன்றிலரிட்டமாவனென்பர்.




(56) பனிரெண்டாமிடம்,

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ஏகனாய்த்தனித்து ச்சமகேந்திரமேறிய லவக்ஷேத்திர, பாக்கிய, கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமனேகன் விர்த்தியாவன், புதன்திசை ஆதியி துர் மரணம், கடைசி ஜாதகனுக்கு விவாகமென்பர்.




(57)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், மாதுருஸ்தானதிபதியுடன் கூடி, ரோகஸ்தானமேறிய, திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் பதினேழு பாதத்தி லரிட்டம, தாய் மாமனேகன் வித்தையில்லை கைத்தொழில்மூலம் ஜீவனம் செய்வனென்பர்.




(58)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன், ரவி, ராகுவுடன்கூடி, சத்துருஸ்தானமேறிய உச்ச பாக்கிய, கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், அதி பாலியத்தில் விவாகமாகி ஜாதகன் முப்பதேழில், மரணமாவனென்பர்.




(59)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய மதிமகன், குரு, ராகுவுடன்கூடி ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும், சுத்தமாயிருநதால் தாய் மாமனிருவரிலொருவன் பாலியமரணம், பின்னொருவன் சுகமில்லை விர்த்தியில்லையென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | சூ பு | ல | |
| | | | |
| | | | |
| | | | |

## (60)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், உச்ச ரவியுடன்கூடி, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால், மாமன்வர்க்கநாசம், ஜாதகன் வியாபாரமூலம் ஜீவிப்பன் வித்தையற்பமென்பர்.

ரிடபலக்கண சக்கரம் (60)

முன் லக்கினம் 1-க்கு (60)

ஆகமொத்த சக்கரம் 120

**ரிடப புதன் வித்தையம்மான் வர்க்கபலன்**

முற்றிற்று

# புதகாண்டம்

## மிதுனபுதன் வித்தையம்மான் வர்க்கப் பலன்.




(1)

உதையத்தில் மாதுலக்காரகன், ஸ்வ க்ஷேத்திரனாய், திருதியாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமல் பஞ்சமஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனிருவர் விர்த்தியிலிருப்பர், புதன் திசையுமானால் பிற்பாகம் ஜாதகன் பிதுர் மாதுர் மரணமென்பர்.




(2)

உதையத்தில் மாதுலக்காரகன், கேதுவுடன்கூடி, சப்தமகேந்திரம்பெற்ற, அஷ்டம பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு நவதிரிகோணமேறிய சப்தம கர்மாதிபதியால், மாதுலஸ்தானத்தை நோக்சப்பட்டிருந்தால் மாமனில்லை, புதன்திசை நேருங்காலம் ஜாதகன் மரணமாவனென்பர்.




(3)

உதையத்தில் மாதுலக்காரகன், திருதியாதிபதியான சூரியனுடன்கூடி, மனைவிஸதானமேறிய ஸ்வக்ஷேத்திர சப்தம காமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால, மாமன் விர்த்தியுண்டாம், புதன்திசை கடைசி பிதுர் மாதா மரணம் ஜாதகனுக்கு செல்வமுண்டென்பர்.




## (4)

உதையத்தில் மாதுலக்காரகன், ஸ்வக்ஷேத்திரம்பெற்று ஏகனாய் தனித்து ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் தாய் மாமனேகன் அனேக பூமிகளையுடையவனாயிருப்பன், ஜாதகனுக்கு வித்தையுண்டாம் ஜெனித்தபின்பு தாய்க்கு ரோகமென்பர்.




## (5)

உதையத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், குஜன் ராகுவுடன் ஒருவரும் பாராமல் புதன்திசையும் ரோக லாபாதிபதி புக்தியும் நேர்ந்தால் திங்களொன்பதில், ஜாதகன் புண்ணியஸ்தலம் சென்று மரணமாவனென்பர்.

## (6) இரண்டாமிடம்.




இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் திருதிய பஞ்சம அஷ்டம பாக்கிய விரையாதிபதிகளுடன் கூடி சப்தமகேந்திரம்பெற்ற ரோக லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமன் மூவர் சந்ததி யில்லாதவர்களாயிருப்பரென்பர்.




## (7)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் தன திருதிய பஞ்சம விரையாதிபதிகளுடன்கூடி தசமகேந்திரம்பெற்ற ஸ்வக்ஷேத்திர சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை மூற்பாதியில் முதல் பிதுரும் அப்பால் ஜேஷ்ட சகோதரனு மரணம் ஜாதகன் யோகமுள்ளவன் கஷ்டமில்லை கடினசொல்வன் வித்தைதேர்ச்சி யென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | புச சனி |
| | | | |
| | | கே | |

## (8)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் தன அஷ்டம பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமல் மோக்ஷகாரகனாகிய கேது மாதுலஸ்தானமேறியிருந்தால் மாமனேகன் கஷ்டஜீவனமுள்ளவனாய் கைத்தொழில்மூலம் ஜீவிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | பு செ |
| | | | |
| | | சனி | |

## (9)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய அம்புலி புதல்வன் நீச்ச குஜனுடன் கூடி பஞ்சமதிரிகோணமேறிய அஷ்டம பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் வம்மிசவிர்த்தியில்லை உபாயவித்தையென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | பு |
| | | | |
| | | குரு | |

## (10)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் பஞ்சமதிரிகோணத்தில் தேவகுருவிருந்தால் ஜாதகன் அநேக சாஸ்திரங்களாராச்சியுடையவனாய் கவியீசுரனென ஜெகம் புகழக்கீர்த்தியுடையவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| | | | பு |
| | | | |

## (11) மூன்றுமிடம்.

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் ஐந்தாமிடமும் சுத்தமாயிருந்தால் தாய் மாமன் மூவர் நல்ல நிலமையிலிருப்பர் இருபதுவயதிற்குமேல் ஜாதகனுக்கு உத்தியோகமுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| | | | பு சூ |
| | | ச | |

(12)

மூன்றுமிடத்தில் மாதுல்க்காரகன் ஸ்வக்ஷேத்திர திருதியாதிபதியுடன் கூடி ஒருவரும் பாராமல் தனுதிபதியான சந்திரன் மாதுலஸ்தானமேறியிருந்தால் மாமனேகம் அபவிர்த்தி நீச்சவித்தை யுடையவனய் அராசாங்கத்தையடுத்து ஜீவிப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| | | | பு கே |
| | | செ | |

(13)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் கேதுவுடன்கூடி ஒருவரும் பார்மல் பஞ்சமத்தில் குஜனிருந்தால் மாமனில்லை இளமையிலொருவன் மரணம் புதன் திசையில் ஜாதகனுக்கு வித்தை களத்திரலாபமுண்டாம் தாய் மரணமென்பா.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| | | | பு சனி |
| | | சு | |

(14)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் அஷ்டம பாக்கியாதிபதியுடன் கூடி ஒருவரும் நோக்காமல் புத்திரஸ்தானத்தில சுக்கிரனிருந்தால் தாய் மாமன் ஐவரில் ஒருவன் புத்திரதோடமுள்ளவனும் பின்னெருவன் சன்னுசம் பெருவன் மற்றவர்கள் விர்த்தியென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | பு ச சூ |
| | | | |
| | | சனி | |

(15)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் திருதிய பஞ்சம விரையாதிபதிகளுடன்கூடி ரோகஸ்தானமேறிய அஷ்டம பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமனிருவர் தீர்க்கம் வித்தையுண்டாம் நல்ல மேன்மையுடையவர்களா யிருப்பரென்பர்.




## (16) நான்காமிடம்.

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், உச்ச ஸ்வக்ஷேத்திரனாய் இருந்திய ரோக, லாபாதிபதிகளுடன் கூடி, ஒருவரும் பாராமல் ஜென்ம சுகாதிபன் திசை, கடைசியில் ஜெனித்தால், பதினைந்து வயதில் ஜாதகனுக்கு ஜலத்தில் மாரககண்ட முண்டென்பர்.




## (17)

நான்காமிடத்தில மாதுலக்காரகனாகிய, புதன், ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராம லிருந்து மாலவன் திசையும், நேர்ந்தால் ஜாதகனுக்கு, க்ஷயரோகமுண்டாகி மரணம், சகோதரவர்க்கத்தில், சுபாசுபமிரண்டும் கலந்து நடக்குமென்பர்.




## (18)

நான்காமிடத்தில் மாதுலக்காரகன் பரம உச்சனாய், ரோக லாபாதிபதியுடன் கூடி, கர்மஸ்தானமேறிய, உச்ச பஞ்சம, விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய் மாமன் நால்வர், கல்வி மேன்மையிலிருப்பர், கனிட்டன், ஞான அறிவுடையவனாயிருப்பனென்பர்.




## (19)

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், நீச்சமடைந்த பஞ்சம விரையாதிபதியுடன் கூடி, த்விதியஸ்தானமேறிய அஷ்டம பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன், மூன்றுவித வித்தையில் தேர்ச்சியுள்ளவன், புதன் திசையில் நீச்ச பிரபு சேர்க்கையுண்டென்பர்.




## (20)

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், ரோக, அஷ்டம, பாக்கிய, லாபாதிபதிகளுடன்கூடி, கர்மஸ்தானமேறிய, திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனில்லை ஜாதகன், பிதுராக்ஷிதங்களை யிழந்து கல்வி மூலம், அற்பஜீவனம் செய்வனென்பர்.




## (21) ஐந்தாமிடம்.

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், ஸ்வக்ஷேத்திர பஞ்சம விரையாதிபதியுடன் கூடி, பூமகனால் நேம்ர நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன் மூவர், மிகுந்த பூமியுடையவர்களாயும், வம்மிஷவிர்த்தி யுடையவர்களாயு, தேவதாபக்தி, விசுவாச முடையவர்களாயுமிருப்பரென்பர்




## (22)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், ரோக லாபாதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், அம்மான்களிருவரொணத்தினால், கனிட்டன் மூரிபடுவன், ஜேஷ்டன், உபையதாரத்தை யுடையவனாய் கிருஷிமூலம் ஜீவிப்பன், வித்தை யற்பமென்பர்.




## (23)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன், சந்திரன், கேதுவுடன், ஒருவரும்பாராமல் புதன்திசையும் சேர்ந்தால், தாய்மரணம், பின்பு ஜாதகனுமரிப்பன், அம்மான்கள் விர்த்தியில்லை, வம்மிஷம் நாசமென்பர்.




(24)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் ரோக, அஷ்டம பாக்கிய, லாபாதிபதிகளுடன் கூடி, குடும்பாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமனிருவர், தீர்க்கம், கனிட்டன் வித்தைமூலம் அன்னியதேசம் சுகப்படுவன், ஜேஷ்டன் கைத்தொழில் மூலம் உபாய ஜீவனம், வித்தையில்லையென்பர்.




(25)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் சப்தம, கர்மாதிபதியுடன்கூடி, லாபமேறிய நீச்ச சனியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமன் மூவர், ஏக குடும்பம் ஜேஷ்டன் ஞானமார்க்கமுடையவனுய் சமாதியடைவனென்பர்.




(26) ஆருமிடம்.

ஆருமிடத்தில் மாதுலக்காரகனுகிய, மதிமகன், அஷ்டம, பாக்கியாதிபதியுடன் கூடி ஒருவரும் பாராமலிருந்தால், புதன் திசையில் ஜாதகனுக்குக்கல்வியும், ஞானவழியும் பெரியோர் கூட்டமும், யாகங்களைச்செய்து முடிப்பனென்பர்.




(27)

ஆருமிடத்தில் மாதுலக்காரகன், பஞ்சம, ரோக, லாப விரயாதிபதிகளுடன்கூடி மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால், புதன் திசைமுதல் உத்தியோகம், அதில் கலகம், அடிக்கடி இடமாறல் பிதுர்மரணம், ஜாதகனுக்கு அன்னியதேசவாசம் முதலிய பலனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | சனி | ல |
| | | | |
| | | | |
| | பு சு கே | | |

(28)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகன், கேதுவுடன்கூடி, விரையமடைந்த அஷ்டம பாக்கியாதிபதியால், நேரே நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை, ஆதிதாய் மரணம் குடும்ப கலகம், அன்னியதேசவாசம், சகோதர விவாக முதலிய பலனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| | | | |
| | பு கே | | சு |

(29)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகிய, கேதுவுடன்கூடி, ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானுதிபதியான சுக்கிரன், நீச்சம் பெற்றிருந்தால் மாமனில்லை, புதன்திசை, ஆதி தீர்த்தயாத்திரை, பின்பு தாய் கர்மம், கடைசி களத்திரலாபம், தொழில் விர்த்தி முதலிய பலனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | குரு |
| | | | |
| | பு சனி | | |

(30)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன், அஷ்டம பாக்கியாதிபதியுடன் கூடி, த்விதியஸ்தானமேறிய, உச்ச சப்தம, கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன்வர்க்கம் நான்கில் இருவர் விர்த்தி, சனிட்டன் தேசசஞ்சாரமாகப்போவன், மற்றொருவன் மத்தியவயதில் நீரினுல் மரணம், நேத்திரமில்லை யென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| | | | |
| பு குரு | | | |

(31) ஏழாமிடம்.

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் ஸ்வக்ஷேத்திர, சப்தம, கர்மாதிபதியுடன்கூடி, ஒருவரும் நோக்காமல், மாதுலஸ்தானமும சுத்தமாயிருந்தால், தாய் மாமனேகம், விர்த்தியுண்டாம், புதன்திசை முழுதும் ஜாதகனுக்கு ராஜயோகம, விசேஷ பலனென்பர்.




## (32)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் ரோக லாபாதிபதியுடன்கூடி, உச்ச சனியால்நோக்கப்பட்டு, பஞ்சமாதிபதி லக்கினகேந்திரம் பெற்றிருந்தால் மாமனேகன், அலைந்த ஜீவனம், வித்தையில்லை, புதன் திசையில் ஜாதகனுக்குக் கலகத்தால் களத்திரலாப முண்டென்பர்.




## (33)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன், அஷ்டம பாக்கியாதிபதியுடன் கூடி, சதுர்த்த கேந்திரமேறிய ரோகலாபாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால், ஜாதகனுக்குப் புதன் திசை, ஆதி உத்தியோகலாபம், தாசி சேர்க்கை, திசை கடைசி பிதுர், மாதுர் மரணம், தனக்கு ரோகவிர்த்தி, களத்திரமரணமென்பர்.




## (34)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் வாக்குஸ்தானாதிபதியுடன் கூடி, லக்கினகேந்திரம் பெற்ற, சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை, தாயுடன் பெண் மூன்று, புதன் திசையில் ஜாதகன் அன்னிய ஸ்ரீயுடன் கூடி, மறைபடுவனென்பர்.




## (35)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் கேதுவுடன்கூடி, லக்கினகேந்திரம் பெற்ற அஷ்டம பாக்கியாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் ஏழை குடும்பம், வித்தையில்லை, கூலிஜீவனமென்பர்.

## (36) எட்டாமிடம்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | குரு |
| பு சு செ | | | |
| | | | |

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் பஞ்சம, ரோக, லாப விரையாதிபதிகளுடன்கூடி, குடும்பஸ்தானமேறிய சப்தம கர்மாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால், புதன் திசையில் விவாகம், பிதுர் மரணம், கடைசி ஜாதகனு மரணமென்பர்.

## (37)

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | சனி |
| பு குரு செ | | | |
| | | | |

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய பிரைசுதன் திருகிய் ரோக லாபாதிபதிகளுடன் கூடி த்விதியஸ்தானமேறிய அஷ்டம பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் புதன் திசையில் ஆதி வித்தை விர்த்தி உத்தியோகலாபம் கடைசி பிதுர் கெண்டம் சகோதர மரணமென்பர்.

## (38)

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| பு ரா | | | |
| | | | |

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ராகுவுடன்கூடி ஒருவரும் பாராமல் புத்திரஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மாமனில்லை புதன் திசையில் ஜாதகனுக்கு ராஜதண்டனை யுண்டாகி விலங்குடன் மரணம் பின்பு தந்தையுமரிட்டமாவனென்பர்.

## (39)

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| பு | | | |
| | | சனி | |

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ஏகனுய் தனித்து ஒருவரும் பாராமல் பஞ்சம திரிகோணத்தில் சனியிருந்தால், மாமனில்லை, தாயேகம், புதன் திசையில் அன்னியதேசவாசம், கஷ்ட ஜீவனம், நிலைச கடைசி உத்தியோகவிர்த்தி, புத்திரலாபமுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| | | | |
| பு குரு | | | |
| | | செ | |

## (40)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நீச்ச குருவுடன்கூடி, பஞ்சமதிரிகோணமேறிய ரோக, லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமன்வர்க்கநாசம், புதன் புக்தியும் நேர்ந்தால், ஜாதகன் ஓராண்டிலரிட்டமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| பு சு குரு | | | |
| | | | |
| | | | |

## (41) ஒன்பதாமிடம்.

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், பஞ்சம, சப்தம, கர்ம விரயாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் நோக்காமலிருந்தால், புதன்திசை கடைசி, ஜாதகனுக்கு விவாகமுண்டாம், அதுவரை சுகபலன், அதற்குமேல் கஷ்டபலனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | குரு | ல |
| பு | | | பு |
| சு | | | |
| | | | |

## (42)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய, பஞ்சம விரயாதிபதியை, சப்தம கர்மாதிபதியால், ஒன்பதாம பார்வை பார்க்கப்பட்டு, ஜெனனகாலம், புதன்திசை நேர்ந்தால், நாற்பத்தொன்றில் ஜாதகன மரணமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| பு சூ சனி | | | |
| | | | |
| | | | |

## (43)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், திருதிய, அஷ்டம பாக்கியாதிபதிகளுடன் கூடி, லக்கினாதிபன் திசையில், பிறந்தால், திங்களாறில் பிதுர்வகைப்பாட்டன் மரணம், தந்தைக்கு கிராமாதிகாரம், ரொணம் அதிசப்படுமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| பு கே | | | |
| | | | |
| | | சு | |

## (44)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், கேதுவுடன்கூடி, ஒருவரும் பாராமல், மாதுலஸ்தானாதிபதியான சுக்கிரன் சத்துருஸ்தானம், மறைவுபட்டிருந்தால், தாய் மாமனில்லை, புதன் திசை ஆதிபிதாமரணம், உத்தியோகவிர்த்தி, கிரகலாபம், புத்திரநஷ்ட முதலிய பலனென்பர்,

| | | | |
|---|---|---|---|
| சு | | | ல |
| பு சூ | | | |
| | | | |
| | | | |

## (45)

ஒன்பதாமிடத்தில், மாதுலக்காரகனாகிய புதன் திருதியாதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமல், மாதுலஸ்தானாதிபதியான, சுக்கிரன் உச்சம்பெற்றிருந்தால, தாய்மாமனவர் தீர்க்கம், ஏகனை விர்த்தி குறைவு; புதன் திசையில், ஜாதகனுக்கு வித்யாதலாபம், உத்தியோக முயற்சி, சகோதரலாப முதலிய பலனென்பர்

| | | | |
|---|---|---|---|
| பு | | | ல |
| | | | |
| | | | |
| | | செ | சூ சு சனி |

## (46) பத்தாமிடம்,

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன், ஏகனாய் தனித்து சுகசேந்திரமேறிய, சப்தமாஷ்டம, பாக்கிய, கர்மாதிபதிகளால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் குஜனிருந்தால் தாய் மாமனேகன், செல்வமில்லை, விர்த்தியில்லை, கூலிஜீவனமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு சே ச | | | ல |
| | | | |
| சனி | | | |
| | | | |

## (47)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன், நீச்சனாய சந்திரன, கேதுவுடன்கூடி, அஷ்டம பாக்கியாதிபதியால, மூன்றாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால், மாமன் வம்மிசமில்லை, ஜெனித்த அன்று தாய் மரணம், அடுத்த ஜாதகனுமரணமென்பர்.




(48)

பத்தாமிடத்தில், மாதுலக்காரகன் நீச்சனாய், பஞ்சம விரையாதிபதியான, உச்சனோடுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய, தனாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய் மாமன் மூவர், விர்த்தியிலிருப்பரென்பர்.




(49)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன், நீச்சனாய் ஏகனாகநின்று, சுக கேந்திரம்பெற்ற அஷ்டம பாக்கியாதிபதியால், பார்க்கப்பட்டு மாதுலாதிபன், விரையமடைந்திருந்தால் மாமனேகன், விர்த்தியுண்டாம், வித்தையில்லையென்பர்.




(50)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், குஜன், ராகுவுடன்கூடி, ஒருவரும் பாராமல் புத்திரஸ்தானமை, சுத்தமாயிருந்தால், தாய் மாமனிருவரிலொருவன், இளமையில் மரணப், புதன்திசையில், ஜாதகன் தேசாந்திரம் போவனென்பர்.

(51) பதினோராமிடம்.




பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், உச்சராசியுடன்கூடி, உச்சகுஜனாலும், திருதியமேறிய, சப்தம கர்மாதிபதியாலும், நோக்கப்பட்டிருந்தால, புதன் திசை சௌக்கியம், அப்பால் சமயோகம், அவிழ்த மூலம் விர்த்தியென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | பு | | ல |
| | | | |
| | | | |
| | | | |

(52)

பதிஞோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை புக்தியில, உத்தியோகலாபம், விவாகம், மேல்திசை ஸ்தானபிரஸ்டம், தாயாதிவிவகாரம், அப்பால் ஜாதகன் மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| செ | பு | | ல |
| | | | |
| | | | |
| | | | குரு |

(53)

பதிமோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராவல் சதுர்த்தகேந்திரமேறிய பிரகஸ்பதியை, அவரால் நேரே பார்க்கப்பட்டு, புதன் புக்தியும் நேர்ந்தால், உடனே தாயும, அப்பால் ஜாதகனு மரணமென்பர். .

| | | | |
|---|---|---|---|
| | சு பு சூ | | ல |
| சனி | | | |
| | | | |
| குரு | | | |

(54)

பதிமோராமிடத்தில் மாதுலங்காரகனாகிய புதன், திருதிய, பஞ்சம விரையாதிபதிகளுடன் கூடி, ஸ்வக்ஷேத்திரம்பெற்ற, குரு சனி இவர்களால் நோக்கப்பட்டு, புதன் திசை பிற்பாகத்தில் ஜெனித்தால், திருதியமாண்டிற்குள் ஜெனித்தவிடம்விட்டு, மூன்றுமிடம் நிலைக்குமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | பு கே | | ல |
| | | | செ |
| | | | |
| | | | |

(55)

பதிமோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் மோக்ஷகாரகனுடன் கூடி, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானத்தை, நீச்சகுஜனால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை, ஜாதகனுக்கு வித்தையற்பம், சுகமில்லையென்பர்.




## (56) பனிரெண்டாமிடம்,

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஏகனுய் தனித்து ஒருவரும் நோக்காமல் பஞ்சமஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனேகம் சிலநாள் சுகமும் அப்பால் அதிக கஷ்டமுமடைவன் சொல்ப்பவித்தையன் புதன்திசா புக்தியில் ஜாதகன் மரணமென்பர்.




## (57)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஏகனுய் தனித்து ரோகஸ்தானமேறிய திருதியாதிபதியால நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் விர்த்தியில்லை கஷ்டஜீவனம் புதன்திசை முற்பாகம் தாய் மரணம் கடைசி களத்திரலாபம் உத்தியோக விர்த்தியென்பர்.




## (58)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஆரல் பளிங்கு கேது இவர்களுடன்கூடி வீரியஸ்தானமேறிய அஷ்டமபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் உபாதானமெடுப்பன் புதன்திசையில் ஜாதகன் அனேக கர்மங்கள் செய்வனென்பர்.




## (59)

பனிரெண்டாமிடத்தில் மாதுல்க்காரகனுகிய புதன் அஷ்டம பாக்கியாதிபதியுடகூடி ஒருவரும் பாராமல் வாக்குஸ்தானுதிபதியான சந்திரன் கேதுவுடன் மாதுலஸ்தானமேறியிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை வாக்குபேதகம் ஜாதகன் கைத்தொழில் புரிவன் சுகமில்லையென்பர.

| | | | |
|---|---|---|---|
| | | பு | ல |
| | | | |
| | | | |
| | சனி | ரா | |

(60)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து அஷ்டமஷ்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் ராகுவிருந்தால் தாய் மாமன் மூவரிலிருவர் பாலியமரணம் விருத்தியில்லை புதன்திசையில் ஜாதகன் உத்தியோகாமலம் அடிக்கடி இடமாறல் திசை கடைசி பிதுர் மரணம் சகோதரமரணம் புத்திரிகர்மமுதலிய பலனென்பர.

மிதுனலக்கண சக்கரம் (60)

முன் லக்கினம் 2-க்கு (120)

ஆகமொத்த சக்கரம்: 180

**மிதுனபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்**

முற்றிற்று.

# புதகாண்டம்

## கடகபுதன் வித்தையம்மான் வர்க்கப் பலன்.




(1)

உதையத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல், திருதிய விரையாதிபன் திசை சேர்ந்தால் செல்வமுங்கல்வியுண்டாம், கடைசி சகோதர விவாகம், பூமி லாபம், தாய்மாமன் வர்க்கத்தில் விவகாரமுதலிய பலனென்பர்.




(2)

உதையத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் நீச்ச பஞ்சம கர்மாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமலிருந்தால் மாமனேகன், செல்வமில்லை, புதன் திசையில் புத்திரகர்மம் சகோதர மரணம், விவகாரம், பொருள் விரையம் முதலிய பலனென்பர்.




(3)

உதையத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் ராகுவுடன்கூடி, சப்தமகேந்திரம்பெற்ற குடும்பாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம், குடும்பவிலகன், வித்தையில்லை, பிதுரார்ஜிதஞ்சனை யழித்துக்கஷ்டப்படுவனென்பர்.




## (4)

உதையத்தில் மாதுலகாரகனாகிய, புதன் உச்ச குருவுடன் கூடி, சப்தமகேந்திரமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமன் மூன்றில் ஒனிட்டன வேதசாஸ்திர முணர்ந்தவனையும் ஞானம் பரோபகார முடையவனையுமிருப்பனென்பர்.




## (5)

உதையத்தில் மாதுலக்காரகன் ஜென்ம சுக லாபாதிபதிகளுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய ரோக பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமனிருவர் நல்ல நிலமை வித்தை மேன்மையுண்டாம் கனத்த மண்மனையுடையவரென்பர்.




## (6) இரண்டாமிடம்.

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்ம தன பஞ்சம தசமாதிபதிகளுடன் கூடி புதன் புக்தியும் சேர்ந்தால் ஜாதகன் வயதொன்றில் மரணம் அம்மான்கள் குடும்பகலகமுடையவர்கள் மூன்றிலொருவன் தீர்க்கசுகம் மற்றவர்கள் குணமில்லையென்பர்.




## (7)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்தனித்து ஒருவரும் பாராமல் புதன்திசையும் வந்தால் முற்பாதியில் தாய்மரணம் அப்பால் தனக்கு விவாகம் பிதா மரணம் முதல் புத்திர ஜெனனமென்பர்.




(8)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சப்தம அஷ்டமாதிபதியுடன் கூடி ஒருவரும் பாராமல் புதன்திசையும் சேர்ந்தால் புத்திபேதம் ஸ்தானபிரஸ்டம் புத்திரனால் துன்ப மரணமுண்டென்பர்.




(9)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் கேதுவுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய பஞ்சம கர்மாதிபதியால், நேரே நோக்கப்பட்டிருந்தால் புதன் திசையில் புத்திரமரணம் பூமி மூலம் விவகாரம் பொருள் நஷ்டம் மாமன்வகையில் துன்மரண முதலிய பலனென்பர்.




(10)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சப்தம அஷ்டமாதிபதியுடன் கூடி லாபமேறிய பஞ்சம தசமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை மாதாவுக்கு ரோகம் ஜாதகன் நீச்சவித்தைமூலம் சுகப்படுவனென்பர்.




(11) மூன்றுமிடம்.

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் உச்ச ஸ்வக்ஷேத்திரனாய் ரவி கேதுவுடன்கூடி ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் அம்மானேகம் குணமில்லையென்பர்.

78029




(12)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் சுகலாபாதிபதியான நீச்சகோளுடன் கூடி ஒருவரும் பாராதிருந்தால் தாய்மாமனேகம் விர்த்தியுண்டாம் புதன் திசையில் சகோதர விவாகம் வித்தையப்பியாசம் களத்திலாப முதலிய பலனென்பர்.




(13)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய பிரை சுதன் குடும்பாதிபதியுடன் கூடி விரையமடைந்த பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் உபைய மாமன்கள் நாளுக்குநாள் செல்வம் குறைவுபடுமென்பர்.




(14)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சப்தம அஷ்டமாதிபதியுடன் கூடி நவதிரிகோணமேறிய வாக்குஸ்தானதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன வித்தை தேர்ச்சியுடையவனென்பர்.




(15)

மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சம கர்மாதிபதியுடன் கூடி லாபமேறிய ரோக பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் கேது யிருந்தால் மாமனேகன் விர்த்தியில்லை அன்னியரையடுத்து ஜீவனம் செய்வனென்பர்.

## (16) நான்காமிடம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| | | | |
| | | பு சூ | |

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன, வாக்குஸ்தானாதிபதியான, நீச்ச ரவியுடன்கூடி, மற்றெவரும் பாராமலிருந்து, புதன் திசையும் நேர்ந்தால், ஆதி மாமன் கர்மம், ஜாதகன் பத்துநாளிலரிட்டமாவனென்பர்.

## (17)

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| | | | |
| | | பு கே ச சூ | |

நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ரவி, சந்திரன், கேது இவர்களுடன்கூடி, ஒருவரும் பாராமல் திருதிய வியயாதிபன் திசையும் நேர்ந்தால், கெர்ப்பத்தில் மாமனரிட்டப். ஜாதகன் ஜெனித்தவாரத்தில் மரணமென்பர்.

## (18)

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| | | | சனி |
| | | பு கே | |

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், கேதுவுடன்கூடி, த்விதியஸ்தானமேறிய சப்தம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால். மாமனில்லை, புதன்திசை ஆதி சகோதரக்கர்மம், உத்தியோகமூலம் பலவிடம் சஞ்சாரம், திசை கடைசி தாய் மரணமென்பர்.

## (19)

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| | | | |
| | | சு பு சூ | |

நான்காமிடத்தில் மாதுலக்காரகன், தனசுக லாபாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் பாராமலிருந்தால் அம்மான்களிருவரில் ஜேஷ்டன் நோயால் மெலிபடுவன், கனிட்டன் உடையதாரமுடையவனாய், சிலநாள் சுகமும் சிலநாள் கஷ்டமுமனுபவிப்பனென்பர்.




(20)

நான்காமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி, தசம கேந்திரமேறிய லக்கினுதிபதியால், பார்க்கப் பட்டிருந்தால் மாமனேகன், தீர்க்கா, சுகம், விர்த்தியுண்டாம், ஓர் சகோதரன், குணவான், ஏகபுத்திரன் தீர்க்கமென்பர்.




(21) ஐந்தாமிடம்.

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் லக்கின தனுதிபதியுடன்கூடி, த்விதியஸ்தானமேறிய, பஞ்சம கர்மாதிபதியால், நோக்கப்பட்டு புதன் திசையில் ஜெனித்தால அம்மான்களிருவர் கலகமாய் பிரிந்திருப்பார்களென்பர்.




(22)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன் வாக்குஸ்தானுதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், தாய் மாமனிருவர் சுகமாயிருப்பார்கள். ஜாதகனுக்கு இரண்டுவயதில் ஜேஷ்டமாமன் மரணமாவனென்பர்.




(23)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன், அருக்கன் கேதுவுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் மாமனேகன், அபவிர்த்தி, புதன்திசையில் முற்பாகம் பிதுரரிட்டம். குடும்பகலகம் பாகம் பிரிவுபடுமென்பர்.




(24)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, மதிமகன் லக்கினாதிபதியுடன்கூடி லாபஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர அசுர குருவால் நோக்கப்பட்டிருந்தால் தாய் மாமன் நால்வரில் ஜேஷ்டன் இளமையில் நீரில் மரணம் சனிட்டன் வித்தைதேர்ச்சியுள்ளவனாய் அரசர் சேர்க்கையும் அசுவவாகனமுடையவனாயுமிருப்பனென்பர்.




(25)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன், ஜென்மரோக பாக்கியாதிபதிகளுடன் கூடி ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானாதிபதியான குஜன் உச்சம்பெற்றிருந்தால் தாய்மாமனேகன் வித்தையுண்டாம் செல்வமில்லை வம்மிஷம் விர்த்தியில்லையென்பர்.




(26) ஆறாமிடம்.

ஆறாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சூரியன், கேதுவுடன்கூடி 'ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் புதன் திசையில் பிதுர் மரணம் சகல நன்மையுமழிந்துபோகுமென்பர்,




(27)

ஆறாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் திருதிய விரையாதிபதி திசையும் வந்தால் பாட்டன் பாட்டி மரணம் பிதுராக்ஷிதமெல்லாமழிவு, சுகமில்லை ஆதி ஜலகண்டமுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| | | | |
| குரு பு | | | செ |

## (28)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர ரோக பாக்கியாதிபதியுடன்கூடி திருதியஸ்தானமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு குறைவான திருதிய வித்தையுண்டாம் தாய் மாமனேகம் செல்வமுண்டாம் வித்தையில்லையென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| | | | ல |
| | | | |
| குரு பு சு | கே | | |

## (29)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகன் சுக ரோக பாக்கிய லாபாதிபதிகளுடன் கூடி வீரயமடைந்த சப்தம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் மோக்ஷகாரகனாகிய கேதுயிருந்தால் மாமன் வம்மிஷமில்லை பெண்வகையில் தாயைத்தவிர மற்றவர்கள் நாசமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| | | | |
| | சனி | சு | சூ பு |

## (30)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய மதிமகன் குடும்பாதிபதியுடன்கூடி சதுர்த்த கேந்திரமேறிய உச்ச ரவி சுதனால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் சுக்கிரனிருந்தால் தாய் மாமனிருவரில் ஜேஷ்டன் மூன்று தாரங்களுடையவனும் புத்திரவிர்த்தியற்றவனுமிருப்பனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ல |
| பு சூ கே | | | |
| | சனி | | |

## (31) ஏழாமிடம்.

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சூரியன் கேதுவுடன்கூடி பஞ்சமஸ்தானமேறிய சப்தம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டு புதன்திசையில் ஜெனித்தால் தாய்மாமனிருவர் ஜாதகன் சமயோகம் அம்மான்மூலம் கொஞ்சம் சுகமுண்டென்பர்,




(32)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, சுதன், அருக்கன், அங்காரகன், கேது, இவர்களுடன்கூடி பஞ்சமஸ்தானமேறிய, சப்தம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன் புத்திபேதகனாயிருப்பனென்பர்.




(33)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, நீர்ப்பாகன், தன, ரோக பாக்கியாதிபதியுடன் கூடியிருந்தால் மாமனில்லை, புதன் திசையில் வியாபாரமூலம் பொருள்வருத்து, விரையமுண்டாம் லாபமில்லையென்பர்.




(34)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், தன சப்தம அஷ்டமாதிபதிகளுடன் கூடி, லக்கினகேந்திரம்பெற்ற, ஸ்வக்ஷேத்திர ஜென்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன் திசையில், ஜாதகனுக்கு மேன்மையான உத்தியோகவிர்த்தி, பூமி சேர்க்கை, பொருள்லாபம், திசைகடைசி, பிதுர் மாணம் களத்திரகர்மம், மருவிவாகமுண்டென்பர்.




(35)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் ராகுவுடன்கூடி லக்கினகேந்திரம்பெற்ற, நீச்ச பஞ்சம, கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை, புதன் திசையில் களத்திரமரணம், அன்னியதேசவாசம் சகோதரக் கர்மம், விஷகண்டமுண்டாம், திசைகடைசி ஜாதகன் மரணமென்பர்;




## (36) எட்டாமிடம்.

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், வாகருஸ்தானாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய, ரோக பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசை புக்தியில், களத்திரமரணம், மறுபடியும் விவாகம், புத்திரஜெனன முண்டென்பர்.




## (37)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன், ஜென்ம தனாதிபதிகளுடன்கூடி, மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் தாய் மாமனிருவர், அந்த வர்க்கத்தில் விவாகமாகி பின்னால் பகையுண்டாகுமென்பர்.




## (38)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், தன, சுக, லாபாதிபதிகளுடன்கூடி, சப்தம அஷ்டமாதிபதியால், நேரே நோக்கப்பட்டு புதன் திசையினுதித்தால் அம்மான்கள் நால்வர் அதிகாரமேன்மையுண்டாம் ஒருவன் அன்னியதேசமாரலாவனென்பர்.




## (39)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய இந்துபுதல்வன் த்விதியாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய ரோக, பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகனுடனே மரணமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூ சு பு | | | ல |
| | | | |
| சனி | | | |

## (40)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய மாலவன், த்விதிய, சுக, லாபஸ்தானாதிபதிகளுடன்கூடி, ரோகஸ்தானமேறிய சப்தம, அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசையில், ஜாதகன் மரணமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு ச செ | | | |
| | | | ல |
| | | | |
| | | | குரு |

## (41) ஒன்பதாமிடம்.

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், நீச்சனாய் லக்கின, பஞ்சம, கர்மாதிபதிகளுடன்கூடி, திருதியஸ்தானமேறிய, ரோக, பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நான்குவயதில், மரணமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு | | | |
| | | | ல |
| செ சு | | | |
| | | | |

## (42)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானாதிபதியான, அங்காரகன் கவியுடன்கூடி, சப்தமகேந்திரம் பெற்றிருந்தால், மாமனில்லை, தாயுடன் பெண்ணேகமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| பு [illegible] | | | |
| | | | ல |
| சனி | | | |
| | | | செ ரா |

## (43)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், இரண்டாமாதிபுடன்கூடி, செவ்வாய், ராகு நோக்கவும் சப்தமகேந்திரம்பெற்ற லவகேந்திரசனியால், மூன்றும்பார்வையும் பார்க்கப்பட்டிருந்தால் தாயமாமனேகத்தில், ஒருவனுக்கு நேத்திரபின்னம், தனித்தனிபிரிந்திருப்பரென்பர்,




## (44)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், நீச்சம்பெற்று குடும்பாதியுடன் கூடி, ஒருவரும் நோக்காமலிருந்தால், திருதிய விரயாதிபன் திசையில், ஜாதகனுக்கு நான்குவயதில் பிதுர்மரணம், தந்தைக்குத் தாரமிரண்டென்பர்.




## (45)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன், நீச்சமடைந்து மோக்ஷகாரகனுகிய, கேதுவுடன்கூடி, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானத்தில், லக்கினுதிபதியேறியிருந்தால், மாமனில்லை, ஜாதகனுக்கு வித்தையில்லை, செல்வமில்லை, கூலிஜீவனமென்பர்.




## (46) பத்தாமிடம்.

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய, புதன், நேத்திர சுக, லாபாதிபதிகளுடன்கூடி, த்விதியஸ்தானம் பற்றிய ரோக, பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன் புக்தியில் ஜாதகன், அன்னியதேசத்தில் மரணமாவனென்பர்.




## (47)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர நீச்சக்கோள்களுடன்கூடி, மற்றெவரும் பாராமலிருந்து, புதன் திசையும் சேர்ந்தால், திசை ஆதி சகோதரகெண்டம், உத்தியோகமூலம் அன்னியதேச சஞ்சாரம் கடைசி பிதுர் கர்மம், பின்பு ஜாதகனும் அடுத்து மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | பு கே சனி | | செ |
| | | | ல |
| | | | |
| | | | |

## (48)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன், சனி, கேதுவுடன்கூடி, ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானாதிபதி விரயமடைந்திருந்தால் மாமனில்லை, தாயுடன் பெண்மூன்றில்; தாயின் தமக்கை சங்கம ஜாதியுடன்கூடி., அன்னியதேச மாரலாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | பு ச | | |
| | | | ல |
| | | | |
| | | செ | |

## (49)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, தேர்ப்பாகன், லக்கினாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய பஞ்சம கர்மாதிபதியால் கேம்ர நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம், சமயோகம் சொல்பவித்தையன், புதன் திசை சேர்ந்தால், ஜாதகன் வருடமொன்றிலரிட்டமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | பு குரு | | |
| | | | ல |
| | | | |
| | | | செ |

## (50)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, கிலவுசுதன், ரோக, லாபாதிபதியுடன்கூடி, திருதியஸ்தானமேறிய பஞ்சம தசமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன் மூவர் அதிகாரமுள்ளவர்கள், தனித்தனி பிரிந்திருப்பார்களென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | பு ச சனி | |
| | | | ல |
| | | | |
| | | | |

## (51) பதினோராமிடம்.

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன், லக்கின, சப்தம அஷ்டமாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், ஜெனனகாலம், தாய்க்கும் தனக்கும் ரோகமுண்டாகி, ஜாதகன் திங்களொன்றிலரிட்டமாவனென்பர்.




## (52)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நேத்திரஸ்தானுதிபதியுடன்கூடி, பஞ்சமதிரிகோணமேறிய சப்தம, அஷ்டமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், ஜாதகனுடனே மரணமாவனென்பர்.




## (53)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் தன சுக லாபாதிபதிகளுடன் கூடி தேவகுருவால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் மாமனால் வளர்க்கப்படுவன் வர்க்கமூவர் புதன் திசையில் உத்தியோகலாபம் மேகரோகம் ஜலகண்டம் யோகம் சமனென்பர்.




## (54)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் குடும்பஸ்தானுதிபதியுடன்கூடி பஞ்சம திரிகோணமேறிய ஸ்வக்ஷேத்திர பூமகனால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஐம்பத்தைந்தில் புதன் திசையில் ஜாதகன் மரணமாவனென்பர்.




## (55)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி மாதுலஸ்தானமேறிய குரு சந்திரர்களால் நேரே நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை பிற்பகுதி தாய் மரணம் பிதாவுக்கு மறுவிவாகமுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | பு |
| | | | ல செ |
| | | | |
| | ரா | | |

## (56) பனிரெண்டாமிடம்,

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானாதிபதி நீச்சமடைந்து பஞ்சமஸ்தானத்தில் ராகுமிருந்தால் மாமனில்லை ஜாதகன் வியாபாரமூலம் விர்த்தியடைவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | பு. கு |
| | | | ல |
| | | | |
| செ | | | |

## (57)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், நேத்திரஸ்தானாதிபதியுடனே கூடி, ரோகஸ்தானமேறிய பஞ்சம, கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன், விர்த்தியில்லை, புதன் திசையும் நேர்ந்தால் ஜாதகன், நான்குவயதி லிட்டமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | பு ரா |
| | | | ல |
| | | | |
| செ | சனி | | |

## (58)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ராகுவுடன்கூடி, ரோகஸ்தானமேறிய பஞ்சம கர்மாதிபதியால், நேரே பார்க்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் சனி யிருந்தால், மாமனேகம், அங்கயீனமுள்ளவன், வித்தையில்லை, செல்வமில்லையென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | பு |
| | | | ல |
| | | | |
| ச | | | சனி |

## (59)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்திருந்திய, ரோகமேறிய, லக்கின சப்தம அஷ்டமாதிபதிகளால் நோக்கப்பட்டிருந்தால், மாமன், மூவரிலிருவர் விர்த்தியில்லாமல், பாலிய மரணம், புதன் திசையில் ஜாதகனுக்கு, மேலானயோகமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | புச குரு |
| | | | ல |
| | | | |
| | சு | | |

## (60)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்ம, ரோக பாக்கியாதிபதிகளுடன் கூடி, ஒருவரும் பாராமல பஞ்சம திரிகோணத்தில் சுக்கிரனிருந்தால், தாய் மாமனிருவர் விர்த்தியற்பம், செல்வமுண்டாம், புதன் திசையில் ஜாதகன் விசேஷமான ராஜ யோகத்தைப்பெருவனென்பர்.

கடக லக்கண சக்கரம் (60)

முன் லக்கினம் 3-க்கு (180)

ஆகமொத்த சக்கரம் 240

**கடக புதன் வித்தையம்மான் வர்க்கபலன்**

முற்றிற்று.

# புதகாண்டம்.

## சிம்மபுதன் வித்தையம்மான் வர்க்க பலன்.




(1) உதையத்தில் மாதுலக் காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திர வக்கினுதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமல், மாதுலஸ்தானத்தை லாபமேறிய சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிரண்டில் கனிட்டன் விர்த்தி வித்தையில்லை. புதன்யுக்தி தாய் மரணம் ஜாதகன் தீர்க்கமென்பர்.

சிம்மலக்கினத்தில் பு-சூ, 7-ல் குரு.

(2) உதையத்தில் மாதுலக்காரகன் ஜென்மாதிபதியான சூரியனுடன்கூடி, சப்தமகேந்திரம் பெற்ற, பஞ்சமஅஷ்டமாதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனில்லை. தாயுடன் பெண்ணொன்று ஜாதகன் யோகனென்பர்.

சிம்மலக்கினத்தில் பு-சு-சூ, 10-ல் செ.

(3) உதையத்தில் மாதுலக்காரகன் லக்கின திருதிய கர்மாதிபதிகளுடன்கூடி, தசமகேந்திரம்பெற்ற, சுகபாக்கியாதி பதியால் பார்க்கப்பட்டிருந்தால், மாமனுல் விர்த்திக்கப் படுவன். வித்தை மூலம் ஜாதகன் ஜீவனமென்பர்.

சிம்மலக்கினத்தில் பு-சூ, 9-ல் குரு.

(4) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன், லக்கினுதி பதியுடன்கூடி, நவதிரிகோணமேறிய, பஞ்சம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனேகன் விர்த்தியில்லை. தாய்க்கு முன்னவளும் விர்த்தியில்லையென்பர்,

சிம்மலக்கினத்தில் பு-சூ, 7-ல் ச.

**(5)** உதையத்தில் மாதுலக்காரகன், ஜென்மாதிபதியான செங்கதிருடன்கூடி சப்தமகேந்திரம் பெற்ற, விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டு, மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால், மாமனிருவர் விர்த்தியில்லை. புதன்திசை பிற்பாகத்தில் சகோதரம் பிதுர்மரணம். குடும்பகுலைவுண்டென்பர்.




**(6)** (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், உச்சஸ்வக்ஷேத்திரனாய் லக்கினதிருதிய தசமகேந்திராதி பதிகளுடன் கூடி, பஞ்சமதிரிகோணமேறிய ரோக சப்தமாதிபதியால நோக்கப் பட்டிருந்தால், புதன்திசை கடைசி பனிரெண்டு வயதில் ஜாதகன் பிதா மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் பு-சூ, 8-ல் ச.

**(7)** இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், லக்கினாதிபதியுடன்கூடி, அஷ்டமஸ்தானமேறிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம், விர்த்திகுறைவு. புதன்திசை மத்தியயோகமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சூ-பு-ச, 12-ல் சனி.

**(8)** இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஜென்மவிரையாதிபதியுடன் கூடி விரையமடைந்த, ரோக சப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை. புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் திங்களிரண்டில் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் பு-சு-சனி, 5-ல் ரா.

**(9)** இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய அம்புலிசுதன் திருதிய ரோக சப்தம கர்மாதிபதிகளுடன் கூடி, ஒருவரும் பாராமல், ஞானகாரகனாகிய ராகு, மாதுலஸ்தானமேறி யிருந்தால், மாமனிருவரிலொருவனுக்கு வாக்கூனம் விர்த்தியில்லை யென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் பு-ச-செ, 5-ல் குரு.

**(10)** இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சுக பாக்கிய விரையாதிபதிகளுடன் கூடி, ஒருவரும் பாராமல், மாதுலஸ்தானத்தில் குருவிருந்தால் மாமனேகன். விர்த்தியும் மிகுந்த திரவிய முடையவனாயு மிருப்பனென்பர்.




(11)

மூன்றுமிடத்தில்மாதுலக்காரகனாகிய புதன், உச்ச சனியுடன்கூடி ஸ்வக்ஷேத்திர சுக பாக்கியாதி பதியாலும் லாபஸ்தான மேறிய, பஞ்சம அஷ்டமாதி பதியாலும் நோக்கப்பட்டிருந்தால்,தாய்மாமன்மூவர். குடும்பம் தனித்தனி பிரிந்திருப்பார்களென்பர்

சிம்மலக்கினம் 3-ல் பு-சூ-ரா.

(12) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் அருணன், ராகுவுடன் கூடி ஒருவரும் பாராமலிருந்தால். தாய்மாமனேகன். புதன்திசை முற்பாகம பிதுர்கர்மம் சகோதரக்கலகம் குடுமபம் பிரிவென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் பு-சு-ரா.

(13) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சுக்கிரன், ராகுவுடன் மற்றெவரும்நோக்காமலிருந்தால் அம்மான்களிருவரில் ஏகன் விர்த்தி தனலாபாதிபன் திசையில் சகோதரர் விவாகம் தொழில்விர்த்தி வித்தைலாபம் திசைகடைசி குடும்பம் பிரிவென்பர்.

சிம்மலக்கினம் - 3-ல் செ-பு-சூ.

(14) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்ம சுக பாக்கியாதிபதிகளுடன் கூடி, மற்றெவரும் பாராமல், மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மாமனேகன். புதன்திசை ஆதிஜாதகன் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் குரு-சு-பு.

(15) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், உபையகுருவுகளுடன்கூடி மற்றெவரும் பாராமல், மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் தாய்மாமன் மூவரிலேகன் விர்த்தியில்லை. அம்மான்கள் வித்தைமூலம் அரசர்களையடுத்து ஜீவிப்பனென்பர்.




(16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகன் ஜென்மாதி பதியுடன்கூடி, ஆயுள் ஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர பஞ்சம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் தீர்க்கவயதுடையவன்வருமையையடைந்திருப்பனென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் பு-சூ-செ,

**(17)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின சுக பாக்கியாதிபதிகளுடன் கூடி மற்றெவரும் பாராமலிருந்தால், மாதர்வர்க்க மைந்து. புதன் திசை ஆதி நாற்பத்தைந்துவயதில் ஜாதகன் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் -4-ல் பு-செ. 5-ல் சனி-10-ச.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர சுக பாக்கியாதிபதியுடன் கூடி உச்சசந்திரனால் பார்க்கப்பட்டு, மாதுலஸ்தானத்தில் சனியிருந்தால் மாமனேகன் நல்லவிர்த்தியும் மேன்மையுமுடையவனா யிருப்பனென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் பு-கே-ச.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் சந்திரன் கேதுவுடன் கூடி ஒருவரும் பாராமலிருந்து, மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மாமனில்லை. பதினொன்றில் புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் பு-சூ. 10-ல் சனி.

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய பண்டிதன் லக்கினாதிபதியுடன் கூடி தசமகேந்திரமேறிய ரோகசப்தமாதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன் மூவரிலேகன். விர்த்தியென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து, த்விதிய லாபஸ்தானங்களலர்ந்த குஜன், சோமனிவர்களால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசையில் அன்னகஷ்டம்தரித்திரம் ஜாதகனுக்கு மரணமுண்டாகுமென்பர்.

சிம்மலக்கினத்தில் குரு 5-ல் பு.

**(22)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் நின்று லக்கின கேந்திரம்பெற்ற, பஞ்சம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்,மாமன் தபசிபோலிருப்பன் பொருந்தான் ஜாதகன் கெணித சாஸ்திரவல்லவனாய் இளமையில் மரணமாவனென்பர்.

சிமமலக்கினம் 5-ல் பு-சூ.

(23). ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், லக்கினுதிபதியுடன்கூடி, மற்றெந்த பாவாதிபர்களும் நோக்கப்படாமலிருந்தால் தாயுடன் பெண்களைந்து, மாமனில்லை ஜாதகன் தீர்க்கமுண்டாம் வித்தை யற்பமென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் பு-சு-ச. 10-ல் செ.

(24) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் திருதியகர்மவிரையாதிபதிகளுடன் கூடி தசமகேந்திரமேறிய, சுக பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன் ஏழில்தீர்க்கம் ஐந்துவிர்த்தி மூன்று. ஒருவன் குன்மரோகத்தினுல் மெலிபடுவனென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் பு-சு 11-ல் செ-சனி.

(25) ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகனுகியபுதன் திருதியரோக சப்தம கர்மஸ்தானுதி பதிகளுடன் கூடி, லாபஸ்தானமேறிய சுக பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் விர்த்தியிலொருவன் புதன்திசையில் களத்திரலாபம் உத்தியோக லாபம் சுகபலனென்பர்.




(26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் மாதுலக்காரகன் சுக பாக்கியாதிபதியுடன்கூடி நீச்ச ஸ்வக்ஷேத்திர சனி, மதியிவர்களால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் பிதாவுக்கு வியாபாரமூலம் லாபமுண்டாம் இரண்டுவயதில் ஜாதகன் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 6-ல் பு.

(27) ஆருமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனுய் தனித்து, ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மாமனேகம். ரோணத்தால் துன்பமடைவன் ஜாதகன் இருபதுவயதிலரிட்டமாவனென்பர்.

சிம்மலக்கினம் 6-ல் பு-சூ-குரு. 12-ல் ச.

(28) ஆருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கினபஞ்சம அஷ்டமாதி பதிகளுடன் கூடி ஸ்வக்ஷேத்திர விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம். புதன்திசை கடைசி பிதா மரணமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் சனி, 6-ல் பு-செ-கே-சூ, 12-ல் ச.

**(29)** ஆறாமிடத்தில் மாலக்காரகன் ரவி, குஜன் கேது. இவர்களுடன்கூடி சுகஸ்தானமேறிய சனியாலும் ஸ்வக்ஷேத்திரவிரையாதிபதியாலும நோக்கப்பட்டிருந்தால், மாமனிரண்டிலொருவன் தீர்க்கம் அவனும் துன்பமடைந்திருப்ப னென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் குரு, 6-ல் பு-சனி-சூ-சு.

**(30)** ஆறாமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்ம திருதிய ரோக சப்தம சர்மாதிபதிகளுடன் கூடி குடும்பஸ்தான மேறிய, பஞ்சம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்தாய்மாமனிரண்டிலொருவன் தீர்க்கமாய் கஷ்டப்படுவ னென்பர்.




**(31)** (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் லக்கினாதிபதியுடன்கூடி, திருதிய ஸ்தானமேறிய பஞ்சம அஷ்டமாதிபதியாலபார்க்கப்பட்டிருந்தால் இருபத்தேழில் புதன் திசையில் ஜாதகன் பிதாவுக்குக் காருண்ணியம் செய்வனென்பர்.

சிம்மலக்கினம் 7-ல் பு-சு-சனி, 11-ல் குரு.

**(32)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் திருதிய ரோக சப்தம தசமாதிபதிகளுடன்கூடி பஞ்சம அஷ்டமாதிபதியால் ஒன்பதாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால், ஜாதன் வியாபாரமூலம் ஜீவனம்செய்து ஐம்பத்தைந்தில் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 4-ல்செ, 7-ல் பு-ச-ரா.

**(33)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் சந்திரன் ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர சுக பாக்கியாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் அற்பஜீவனம்புதன்திசையில் தாய்மரணம் களத்திரக்கண்டம் நிவர்த்தியென்பர்.

சிம்மலக்கினம் 7-ல் செ-பு, 12-ல் குரு.

**(34)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய பிரைசுதன் சுகபாக்கியாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் பஞ்சமாதிபதி விரையமடைந்திருந்தால் மாமனிருவரில் கனிட்டன் அரசர்மூலம் சேர்க்கையாய் மிகுந்த திரவியலாபமிருப்பனென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் சனி, 7-ல் பு-கே.

(35) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன்கேதுவுடன்கூடி பஞ்சம திரிகோணமேறிய ரோக சப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன் விர்த்தியில்லை உபயதார முண்டென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன் நீச்சம்பெற்று ஜென்மரோக சப்தமாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் புதன்திசையில் உததியோகமிருந்தும் சுகமிராது நாற்பத்தைந்தில் ஜேஷ்டன் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் குரு, 8-ல் பு-சு, 11-ல் செ.

(37) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய மதிமகன் உச்சகோளுடன்கூடி பஞ்சமதிரிகோணம்பெற்ற ஸ்வக்ஷேத்திர தேவகுருவால் லாபகுஜனால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் செல்வமிருந்தும் சுகமிராமல் விவகாரமூலம் அலைவார்களென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சனி, 8-ல் பு

(38) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீச்சம் பெற்று, ஏகனுய் தனித்து ரோக சப்தமாதிபதியால்நேரே பார்க்கப்பட்டிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை. புதன்திசை முற்பாதி தனவிரையம் ரோகத்தொடர்ச்சி பிற்பாகம் குடும்பகலகம் ஜாதகன்மரணமென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் கே, 8-ல் பு-ச-சனி.

(39) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ரோக சப்தம விரையாதிபதிகளுடன் கூடி ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானத்தில் கேதுபிருந்தால் தாய்மாமனில்லை. புதன்திசையும் சேர்ந்தால் ஜாதகன் பிறந்தவன்றே மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் செ, 8-ல் பு-ரா.

(40) எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் ராகுவுடன்கூடி வாக்குஸ்தானமேறிய சுக பாக்கியாதிபதியால் நோக்கப் பட்டிருந்தால் தாய்மாமனிருவர் வருமையடைவார்கள் புதன்திசையில் ஜாதகன் வித்தைமூலம் அனேகதேசங்கள் சுற்றித் திரிவனென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின திருதிய ரோக சப்தமகர்மாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் நோக்காமலிருந்தால் மாமனேகம் இருந்தித சுகமில்லாண புத்திரதோட முள்ளவனென்பர்.

சிம்மலக்கினம் 9-ல் பு-சூ.

(42) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் உச்ச லக்கினாதிபதியுடன் கூடி மற்றெவரும் நோக்காமலிருந்தால், புதன்புக்தியில் பிதுர்ரோகம் மாதுர்கர்மம். திசைகடைசி ஜாதகனுக்குவிவாகமுண்டென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் சனி, 9-ல் பு-சூ.

(43) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்மாதிபதியான உச்ச ரவியுடன்கூடி திருதியமேறிய ரோக சப்தமாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை பதினேழில் விவாகம் அம்மானாலும் களத்திரமூலம் சுகமுண்டென்பர்.

சிம்மலக்கினம் 9-ல் பு-சனி.

(44) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ரோக சப்தமாதிபதியான நீச்ச முடவனுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால், மாமனேகம் நோயால் துன்பப்படுவன் விர்த்தியில்லையென்பர்.

சிம்மலக்கினம் 7-ல் சனி, 9-ல் கே-பு.

(45) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி சப்தமகேந்திரம பெற்ற ஸ்வக்ஷேத்திர ரோக சப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமனில்லை. புதன்திசைஆதி பிதுர்கர்மமென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஏகனாய் தனித்து, சதுர்த்தகேந்திரமேறிய ரோகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசையில் உத்தியோக விர்த்தி களத்திர லாபமுண்டென்பர்.

சிம்மலக்கினம் 6-ல் குரு,10-ல் செ-பு.

**(47)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் சுக பாக்கியாதிபதியாகிய பூமகனுடன்கூடி, ரோகஸ்தானமேறிய நீச்சகுருவால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவரில் கனிட்டன், ஸ்ரீமூலம் அரசரால்தண்டிக்கப் படுவனென்பர்.

சிம்மலக்கினம் 10-ல் பு-சு-ச-சூ.

**(48)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், லக்கினதிருதிய கர்ம விரயாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் பார்க்காம லிருந்தால் தாய்மாமனேழில் விர்த்தி மூன்று இருவர் பெண்மூலம் பிரிவர் பின்னுமிருவர் பிதுராக்ஷிதங்களை யிழந்து கீழ்திசைநாடி கஷ்டப்படுவர் குணமில்லையென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் குரு. 10-ல் செ-கே-பு.

**(49)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் குஜன் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல், மாதுலஸ்தானாதிபதி திருதியமேறி யிருந்தால், மாமனேகன் விர்த்திக்கமாட்டான். புதன் திசையில் சகோதரக் கலகம் பாகப்பிரிவு சகோதரி மரணமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் செ. 10-ல் சனி-பு.

**(50)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய தூதுவன் ரோகசப்தமாதிபதியுடன் கூடி, ஸ்வக்ஷேத்திர சுக பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன். வித்தையில்லை. சுகஜீவனம் விசேஷபூமிகளுடையவனா யிருப்பனென்பர்.




**(51)** (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில்மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரனாய் திருதியசுகபாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், புதன், புக்தி, ரோகம், ரொணம், கஷ்டம் முதலியபல அசுபபலன்களுண்டென்பர்.

சிம்மலக்கினம் 11-ல் பு-சு-சூ-கே-செ.

**(52)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன்,ரவி, குஜன், சுக்கிரன், கேது இவர்களுடன் கூடியிருந்தால், புதன் திசையில் விவாகம். யோகம் அதிகாரம் அடிக்கடி இடமாறல் புண்ணியதீர்த்தமாடல் முதலிய பலனென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் சனி-குரு 11-ல் பு-செ-கே.

**(53)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் குஜன், கேதுவுடன் கூடி, பஞ்சம திரிகோணமேறிய புண்ணிய ரோக சப்தம அஷ்ட மாதிபதிகளால் நேரே நோக்கப் பட்டிருந்தால், மாமன்வர்க்கம் க்ஷீணமடையும் ஜாதகன் தீர்க்கமென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் ச. 11ல் பு-ரா.

**(54)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய் ராகுவுடன்கூடி பஞ்சம திரிகோணமேறிய, விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம். புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் திங்களொன்பதி லரிட்டமாவனென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் கே. 11-ல் பு-சனி.

**(55)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ரோக சப்தமாதிபதியுடன்கூடி மோக்ஷகாரகனாகிய கேது பஞ்சமதிரிகோணமேறி யிருந்தால் மாமன்விர்த்தியில்லை. புதன்திசையில் ஜாதகன் ஞானியாய் மறைவுபடுவனென்பர்.




**(56)** பனிரண்டாமிடம்.)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய, புதன் ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராமல் புதன்திசையும் வந்தால், இருபத்துமூன்றில் ஆதிவிவாகம் வடதேசங்களில் அலைந்து கஷ்டப்படுவன். திசைகடைசி களத்திரமரணம் கர்மம் செய்வானென்பர்.

சிம்மலக்கினம் 8-ல் குரு 12-ல் பு-செ.

**(57)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் நீச்சகுஜனுடன் கூடி' ஸ்வக்ஷேத்திர பஞ்சம அஷ்டமாதிபதியால் ஐந்தாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன்மூவர் விர்த்தி மேன்மையடைவார்கள் தாரங்கள் நிலைபடாதென்பர்.

சிம்மலக்கினம் 6-ல் கு. 12-ல் பு-ச,

**(58)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர விரையாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய லக்கினாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனிருவரி லொருவன். விர்த்தி மற்றவன் மணமுடிந்தோராண்டில் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 6-ல் குரு-ச, 12-ல் பு-செ.

(59) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சுகபாக்கியாதிபதியுடன்கூடி, ரோகஸ்தானமேறிய குரு, சந்திரர்களால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனிருவர் விர்த்தியில்லை செல்வமுமில்லையென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் ச, 12-ல் பு-சு.

(60) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் திருதியகர்மாதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமல், மாதுலஸ்தானத்தில் சந்திரனிருந்தால் மாமனேகன் வித்தை மேன்மையுண்டாம். ஜாதகன் கெணிதவித்தை அப்பியாசிப்பன் தேர்ச்சியிராதுமாமனுல் சுகப்படுவனென்பர்.

சிம்மலக்கின சக்கரம் (60)

முன்லக்கினம் 4-க்கு (240)

ஆகமொத்த சக்கரம் - 300.

சிம்மபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்

முற்றிற்று.

# புதகாண்டம்.

## கன்னிபுதன் வித்தையம்மான் வர்க்க பலன்.




**(1)** உதையத்தில் மாதுலக்காரகனாகிய மதிமகன்ஸ்வக்ஷேத்திர வுச்சனாய், விரையாதிபதியுடன்கூடி, மற்றெவரும்பாராமலிருந்தால் புதன்திசைமுழுதும் கஷ்டம் ஆதிதாய்மரணம். அம்மான்களிருவர் ரொணத்தினால் பூமிகளையிழந்து இடமாரலாவார்களென்பர்.

கன்னிலக்கினத்தில் பு-செ, 4-ல் சனி.

**(2)** உதையத்தில் மாதுலக்காரகன் திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய பஞ்சமரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் விர்த்தியில்லை. ஜாதகன்தீர்க்கம். பூமிமூலம் ஜீவனம் புதன்திசையில் சகோதரக்கர்மம் புத்திரமரணம் வித்தைலாபமுதலிய பலனெனபர்.

கன்னிலக்கினத்தில் பு-சனி, 5-ல் குரு.

**(3)** உதையத்தில் மாதுலக்காரகனாகிய பஞ்சம ரோகாதிபதியுடன்கூடி மாதுலஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கனாசம். புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமாவனென்பர்.

கன்னிலக்கினத்தில் பு-சு-கே, 7-ல் சனி.

**(4)** உதையத்தில் மாதுலக்சாரகனாகிய புதன், சுக்கிரன் கேதுவுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற, பஞ்சமரோகாதி பதியால் பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகம் விர்த்தியில்லை. புதன்திசையில் ஆதிபிதுர்கண்டம் பாகம்பிரிதல் திசைகடைசி சுகபலனென்பர்.

கன்னிலக்கினத்தில் செ-பு, 5-ல் சனி,9-ல் குரு.

(5) உதையத்தில் மாதுலக்காரகன், திருதிய அஷ்டமாதிபதியுடன் பிதுர்ஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டு, மாதுலஸ்தானத்தில் சனியிருந்தால், மாமன்மூவர் விர்த்தியுண்டாம் ஜேஷ்டன் கெணிதசாஸ்திர வல்லவனு யிருப்ப னென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் கேதுவுடன் கூடி புத்திரஸ்தான மேறிய, ஸ்வக்ஷேத்திர பஞ்சமரோகாதி பதியால், நோக்கப்பட்டிருந்தால். புதன்திசை தனக்குவிவாகம் களத்திரமரணம் புத்திர உற்பத்தியுண்டென்பர்.

கன்னிலக்கினம் 2-ல் பு.

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன், ஏகனுய்தனித்து ஒருவரும் பஞ்சமஸ்தானமும் சுத்தமாயிருந்தால், மாமன்வர்க்கனுசம் புதன்திசையும் வந்தால் முதல்தாயும் பிந்தி பிதாவுமரணமென்பர்.

கன்னிலக்கினம் 2-ல் பு-குரு, 7-ல் செ.

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சுக சப்தமாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற, திருதிய அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசை ஆதிசகோதரவிவாகம் கடைசி ஜாதகன் மரணமென்பர்.

கன்னிலக்கினம் 2-ல் பு-சூ-ச-ரா, 3-ல் செ-சு.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ரவி, சந்திரன், ராகு இவர்களுடன்கூடி பிதுர்ஸ்தானத்தை சதுர்த்தகேந்திரமேறிய குஜன் புகரிருவரால் நோக்கப்பட்டிருந்தால் பிதாபகையுளன் ஜாதகன் அம்மான் வீட்டைவனென்பர்.

கன்னிலக்கினம் 2-ல் பு-சு.

(10) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ஸ்வக்ஷேத்திர தன பாக்கியாதிபதியுடன்கூடி, மற்றெந்த பாவாதிபதிகளும் நோக்காமல் புதன்திசையும் சுக்கிரபுத்தியுமாக கூடினுல் ஜாதகன் வயிற்றுநோயால் மரணமாவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | குரு | |
| சனி | ராசி | | |
| | | | |
| | பு செ | | ல |

**(11)** (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில்மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி தெய்வமந்திரியால் நேரே நோக்கப்பட்டு மாதுலஸ்தானாதிபதி ரோகஸ்தானமேறியிருந்தால், ஜாதகன ஜெனித்தவுடனே அரிட்டமாவனென்பர்.

கன்னிலக்கினம் 3-ல் பு-சு-கு, 9-ல் சனி.

**(12)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன் தனபாக்கியவிரையாதிபதிகளுடன்கூடி, நவதிரிகோணமேறிய பஞ்சமரோகாதி பதியால் நேரே பார்க்கப்பட்டிருந்தால் மாமனேகம் விர்த்திபில்லை. அலைந்த ஜீவனம் வித்தையுண்டென்பர்.

கன்னிலக்கினம் 3-ல் பு-ச-குரு.

**(13)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சுகசப்தம லாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் மாமனேகம் வம்ஷனாஸ்தி தேர்ந்தவித்தையன். ஜாதகன் திருதியவித்தைகளில் தேர்ச்சியுள்ளவன். புதன்திசையில் அரசர்களால் வெகுமதி பெருவன் சௌக்கியமென்பர்.

கன்னிலக்கினம் - 3-ல் செ-பு-ரா, 11-ல் குரு.

**(14)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், பூமகன் ராகுவுடனகூடி லாபஸ்தானமேறிய உச்சகுருவால் நோக்கப் பட்டிருந்தால் தாய்மாமனிருவரிலொருவன் விர்த்தியில்லை. கனிட்டன்யோகனாய் பெண்மூலம் வடதிசைநாடி சுகப்படுவன். ஜாதகன் கிருஷிமூலம் அற்பஜீவனம் செய்வனென்பர்.

கன்னிலக்கினம் 3-ல் பு-சனி.

**(15)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சம ரோகாதிபதியான சனியுடனகூடி மற்றெவரும் பாராமலிருந்தால். புதன்திசை முற்பாகம் உத்தியோகலாபம்விவாகம் பூமிசேர்க்கை திசைகடைசி பிதுர்கர்மம் அரசர்மூலம் பொருள் விரையமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | ராசி | | |
| | | | |
| பு | | | ல |

**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து, ஒருவரும்பாராமலிருந்து புதன்திசையும்வந்தால் பிதுர் மாதுர்மரணம். ஜாதகனுக்கு உத்தியோக விர்த்தி களத்திரலாபம் புத்திர விர்த்தி. ஞானோபதேசமுதலிய சுபபலனென்பர்.

கன்னிலக்கினம் 4-ல் பு-சூ. 10-ல் சனி

**(17)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் விரயாதிபதியிடன்கூடி தசமகேந்திரம்பெற்ற பஞ்சமரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் யோகம். பிற்பாகம் களத்திரரோகம் அன்னியசேர்க்கை யுண்டென்பர்.

கன்னிலக்கினம் 4-ல் செ-பு, 10-ல் சூ.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன் திருதியஅஷ்டமாதிபதியுடன்கூடி கர்மஸ்தானமேறிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், அம்மான்கள் மூவரிலிருவர் விர்த்தியில்லை வருமையுடையவர்களா யிருப்பரென்பர்.

கன்னிலக்கினத்தில் குரு, 4-ல் பு-சனி 10-ல் ச.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சமரோகாதிபதியுடன்கூடி லாபாதியால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தை லக்கினகேந்திரம்பெற்ற தேவகுருவால் பார்க்கப்பட்டிருந்தால, மாமனேகன் விர்த்தி மேலான உத்தியோக முடையவனென்பர்.

கன்னிலக்கினத்தில் சனி. 4-ல் பு-கே.

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல்ஐந்தாமாதி லக்கினகேந்திரம் பெற்றிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை தாயுடன் பெண்கள் நான்கில் தாயைத்தவிர மற்றவர்களும் விர்த்தியில்லையென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சுகசப்தம லாபாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் பாராமலிருந்தால், மாமன் வர்க்கனுசம், ஜாதகனுக்கு முப்பத்தேழில் புதன்புக்தியில் உத்தியோகவிர்த்தி புத்திர மரணம் அடுத்து மாமன்கர்மம் களத்திர மரணமென்பர்.

கன்னிலக்கினம் 5-ல் சனி-குரு-பு, 11-ல் செ.

**(22)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சுகபஞ்சமரோக சப்தமாதிபதிகளுடன் கூடி லாபஸ்தானமேறிய நீச்சகுஜனுல் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் வித்தைதேர்ச்சி யில்லாதவர்ள் குறைவானதொழில் மூலம் ஜீவனம் சுகமில்லையென்பர்.

கன்னிலக்கினம் 5-ல் கே-சனி-பு.

(23) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் சனி, கேதுவுடன்கூடி மற்றெவரும் பார்க்காமலிருந்தால், மாமனேகன். ஏகனேத்திரம் பின்னமுண்டாம் புதன்திசையில் தொழில்விர்த்தி புத்திரநஷ்டம் திசைகடைசி பிதாவரிட்டம் ஜலகண்டமென்பர்.

கன்னிலக்கினம் 5-ல் சு-பு-செ, 11-ல் ச.

(24) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய மாவலன் தன திருதிய அஷ்டமபாக்கியாதி பதிகளுடன்கூடி, ஸ்வக்ஷேத்திர லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் விதனை மேன்மையுண்டாம். புதன்திசை பிற்பாகம் பிதுர்மரணம் உத்தியோக விர்த்தி சௌக்கிய பலனென்பர்.

கன்னிலக்கினம் 2-ல் செ, 5-ல் பு, 8-ல் சனி.

(25) ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகன் ஏகனாய்தனித்து, வாக்குஸ்தானமேறிய அங்காரகனால் நோக்கப்பட்டு பஞ்சமாதிபதி நீச்சம் பெற்றிருந்தால் மாமனில்லை. புதன்திசையில் யோகபலன் திசை கடைசி பிதுர்மரணமென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் விரயாதிபதியுடன்கூடி நீச்சம் பெற்ற திருதிய அஷ்டமாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை அதிகலாபம். பூமி மனைவிர்த்தி சகோதரவர்க்கசுபம் ஜாதகனுக்குக் குன்மரோக முண்டென்பர்.

கன்னிலக்கினம் 6-ல்பு-செ.

(27) ஆறுமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல், மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் அம்மான்களிருவர் புதன்திசை முற்பாகத்தில் விவாகமாகி சிறந்துக்காட்டி சீக்கிரமறைந்து கடைசிவரையில் துக்கமுண்டென்பர்.

கன்னிலக்கினம் 6-ல் பு-ச, 12-ல் செ.

(28) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லாபாதிபதியுடன்கூடி விரயஸ்தானமேறிய திருதிய அஷ்டமாதிபதியால்நேரே பார்க்கப்பட்டிருந்தால், புதன்திசையில் உத்தியோகம், அசுவவாகனம் சகோதரவிவாகம் பெரருள்சேர்க்கை பிற்பாகம் பலன்குறைவு படுமென்பர்.

கன்னிலக்கினம் 6-ல் ச-பு-சூ-சு.

(29) ஆறுமிடத்தில் மாதுலக்காரகன் தனபாக்கியலாபவிரையாதிபதிகளுடன்கூடி, ஒருவரும்பாராமல், பஞ்சமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மாமனேகன் புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன்பதினொருதிங்களி லரிட்டமாவனென்பர்.

கன்னிலக்கினம் 6-ல் பு-சு, 12-ல் சனி.

(30) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், தனபாக்கியாதிபதியுடன்கூடி விரையமடைந்த பஞ்சமரோகாதிபதியால், நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் சமயோகமுடையன். புதன் திசையில் முற்பாதிசுகமும் பிற்பாதிகஷ்டமும் ரோகமுமுண்டென்பர்




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் தனசுக பஞ்சமரோக சப்தம பாக்கியாதிபதிகளுடனகூடி மற்றெவரும் பாராம லிருந்தால் புதன்திசையில் மேலான உத்தியோகம் விவாகமுண்டென்பர்.

கன்னிலக்கினம் 7-ல் பு-செ.

(32) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன்திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், புதன் புக்தியில், களத்திரமரணம் மருபடிவிவாகம், ஜாதகனுக்கு க்ஷயரோகம் தொழில்பேதம் இடம்பேர்க்கை மரணமுண்டென்பர்.

கன்னிலக்கினம் 3-ல்சனி, 7-ல் பு-சூ.

(33) ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் விரையாதிபதியுடன்கூடி, ஒருவரும்பாராமல், மாதுலஸ்தானாதிபதியானசனி திருதியஸ்தானமேறியிருந்தால் மாமனேகன ஜாதகனுக்கு ஆறுவயதுமுதல் அம்மான் பெண்மூலம் கொஞ்சநாள் சுகமடைவனென்பர்.

கன்னிலக்கினம் 5-ல் ச, 7-ல் கே-சனி-பு

(34) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல், லாபாதிபதியான சந்திரன் பஞ்சமதிரிகோணமேறியிருந்தால் மாமனேகன் விர்த்தியில்லை, புதன்புக்தியும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

கன்னிலக்கினம் 4-ல் செ. 7-ல் குரு-பு,

**(35)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய பண்டிதன் ஸ்வக்ஷேத்திர சுக சப்தமாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய் திருதிய அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், அம்மான்கள் மூவரில் கனிட்டன் களத்திரமூலம் துன்பப்படுவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | பு-சு சே | | |
| | ருசி | | |
| | | | |
| | | ச | ல |

**(36)** (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் ரவி கேதுவுடன் வாக்குஸ்தானமேறியலாபாதிபதியால் நேரே நோக்கப் பட்டிருந்தால், யுதன்திசை ஆதி தாய்மரணம். அப்பால் திசைமுழுதும் ஜாசகனுக்கு சோகம் சர்மம் தரித்திரம் புத்திரவிர்த்தி ஸ்தானப்ரஸ்டம் களத்திரமூலம் துன்பம் கஷ்டப்படுவனென்பர்.

கன்னிலக்கினம் 8-ல் பு-சு-சூ.

**(37)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் தனபாக்கிய விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால் புதன் திசை முறபாகத்தில் புத்திரவிவாகம் தனக்குக்காலில் ரோகவிர்த்தி புத்திரசோகம் குடும்பம் பிரிவுண்டாகுமென்பர்,

கன்னிலக்கினம் 2-ல் சனி, 8-ல் பு-சு.

**(38)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் விரையாதிபதியான உச்சரவியுடன்கூடி பஞ்சமரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டு புதன் திசையில் ஜெனித்தால் மனை அக்கினிமூல மழிந்துபோய்தாய் வர்க்கம் சேர்வனென்பர்.

கன்னிலக்கினம் 8-ல் சனி-கே-பு.

**(39)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் சனிகேதுவுடன் கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், மாமனைகன் வர்க்கனாசம் புதன் திசையில் ஜெனித்தால் கெர்ப்பகாலம் பிதாவரிட்டம் ஜாதகன் ஜெனித்த மாதத்தில் மரணமென்பர்.

கன்னிலக்கினம் 4-ல் குரு, 8-ல் பு-ச-ரா.

**(40)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சந்திரன்ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமனிருவரில் ஜேஷ்டன், கோபியாயும் உபையதாரமுடையவனுயும் வித்தையாப்பியாச மில்லாதவனுயு மிருப்பனென்பர்.




## (41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சமரோக விரையாதிபதிகளுடன்கூடி திருதியஸ்தானமேறிய நீச்சலாபாதிபதியால் நேரே நோக்கப் பட்டிருந்தால் புதன்திசைகடைசி ஜாதகனுக்குவிவாகமுண்டென்பர்.

கன்னிலக்கினம் 9-ல் பு-செ.

**(42)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் திருதியஅஷ்டமாதிபதியுடன்கூடி மற்றெவரும்பாராமல், மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனிருவர் புதன்திசையில் ஜாதகன் மரணமாவனென்பர்.

கன்னிலக்கினம் 3-ல் சனி, 9-ல் பு-கே.

**(43)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன்கேதுவுடன்கூடி திருதியமேறிய பஞ்சமரோகாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகன். விவாகமில்லை அலைந்த ஜீவனமென்பர்

கன்னிலக்கினம் 9-ல் பு-சு-சூ, 12-ல் சனி.

**(44)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் தனபாக்கிபவிரையாதிபதிகளுடன்கூடி பஞ்சமரோகாதிபதியால் பத்தாம்பார்வை நோக்சப்பட்டிருந்தால், மாமனிருவரில் கனிட்டன். சுவீகாரமாவனென்பர்.

கன்னிலக்கினம் 9-ல் சனி-பு-சூ.

**(45)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சமரோக விரையாதிபதிகளுடன்கூடி, ஒருவரும் புதன்திசையில்,ஜெனித்தால் மாமனேகன். கைத்தொழில்புரிவன் களத்திரம் துன்மார்க்கமுடையவளா யிருப்பளென்பர்.




## (46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் தன பாக்கியாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறியபஞ்சமரோகாதிபதியால் பார்க்கப் பட்டிருந்தால் மாமனிருவர் சிறந்தவித்திமேன்மையுண்டென்பர்.

கன்னிலக்கினம் 10-ல் பு-சனி-சூ-கே.

(47) பத்தரமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரனாய் சூரியன், சனி, கேது இவர்மூவருடன்கூடி மற்றெவரும் நோக்காமல், புதன்திசையும் நேர்ந்தால் பிதுர்கண்டம் நிவர்த்தி ஜாதகனுடனே மரணமென்பர்.

கன்னிலக்கினத்தில் சனி,10-ல் பு-ச.

(48) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், லாபாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம்பெற்ற பஞ்சமரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன் விர்த்தி மற்றொருவன் மணமில்லாதவனாய் துஷ்டனாக அலைந்துத் திரிவனென்பர்

கன்னிலக்கினம் 4-ல் குரு 8-ல் சனி, 10-ல் சூ-பு.

(49) பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் விரையாதி பதியுடன்கூடி ஸ்வக்ஷேத்திர சுக சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு மாதுலாதிபன் நீச்சம்பெற்றிருந்தால் தாய்மாமன் மூவரிலேகன். விர்த்தி சனிட்டன் தேசமாரல பின்னொருவன் திருதியதாரததிலும் புத்திரனில்லாக்கவலையுடையவனா யிருப்பனென்பர்.

கன்னிலக்கினம் 7-ல் செ, 10-ல் குரு-ச-பு.

(50) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சுகசப்தமலாபாதிபதிகளுடன்கூடி கிருதிய அஷ்டமாதிபதியால் நாலாம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் அம்மான்வர்க்கம். ஜாதகன் வளர வளர க்ஷீணமடையுமென்பர்.




(51) (பதினோராமிடம்.)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் விரையாதிபதியுடன்கூடி,நவதிரிகோணமேறிய பஞ்சமரோகாதி பதியால் பார்க்கப்பட்டிருந்தால் தாய்மாமன் மூவரிலொருவன் ஞானியா யிருப்பனென்புர்.

கன்னிலக்கினம் 3-ல் குரு, 11-ல் பு-கே.

(52) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி திருதியஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால், புதன் திசையில் பிதுர்மாதுர் முதலியமரணம் சோகமுண்டென்பர்.

கன்னிலக்கினம் 11-ல் பு-சு-சூ.

(53). பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய மதிமகன், தன பாக்கிய விரையாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் பாராதிருந்தால், புதன்திசையில் ஜாதகன் மரணமாவனென்பர்.

கன்னிலக்கினம் 5-ல் ச. 11-ல் பு-கே.

(54) பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் கேதுவுடன்கூடி, பஞ்சமதிரிகோணமேறிய லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை புதன்திசையும் சேர்ந்தால் ஜாதகன் ஆண்டொன்றி லரிட்டமாவனென்பர்.

கன்னிலக்கினம் 5-ல் ச, 11-ல் குரு-பு.

(55) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகியபிரைசுதன்உச்ச குருவுடன்கூடி புண்ணியஸ்தானமேறிய தன பாக்கியாதிபதியால், பார்க்கப்பட்டிருந்தால் மாமன்விர்த்தி. தீர்க்கமுண்டாம் ஜாதகன் அம்மானால் சுகப்படுவனென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர விரையாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய லாபாதிபதியால் நோக்கப் பட்டிருந்தால், தாய்மாமன்மூவர் விர்த்தியில்லை யென்பர்.

கன்னிலக்கினம் 12-ல் பு-ச-செ.

(57) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் திருதியாஷ்டம் லாபாதிபதிகளுடன் சேர்ந்திருந்து ஒருவரும் நோக்காமலிருந்தால் மாமனில்லை. இளமையில் ஏகன் மரணம் பின்விர்த்தியில்லையென்பர்.

கன்னிலக்கினம் 10-ல் சனி. 12ல் செ-பு-சு.

(58) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் தன திருதியஅஷ்டம பாக்கியாதிபதிகளுடன்கூடி கர்மஸ்தானமேறிய பஞ்சமரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன் தரித்திரமடைவனென்பர்.

கன்னிலக்கினம் 12-ல் சூ-பு-சு-ச.

(59) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய மதிமகன் தனபாக்கிய லாப விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், மாமனிருவர் செல்வமுண்டாம் வித்தையற்பம விர்த்தி குறைவுபடுமென்பர்.

கன்னிலக்கினம் 3-ல் சனி, 12-ல் சூ-பு-ரா.

(60) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சூரியன் ராகுவுடன்கூடி திருதியஸ்தானமேறிய பஞ்சம ரோகாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகன் விர்த்தியில்லை. புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் பதினெட்டு மாதத்தில் மரணமாவனென்பர்.

கன்னியாலக்கின சக்கரம் (60)

முன்லக்கினம் 5-க்கு (300)

ஆகமொத்த சக்கரம் - 360

கன்னியாபுதன் வித்தையம்மான்வர்க்கபலன்

முற்றிற்று.

---

# புதகாண்டம்.

## துலாலக்கினம்.

### துலாபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்.




(1) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஜென்மசுக பஞ்சம அஷ்டமாதிபதிகளுடன்கூடி ஒருவருமபாராமல் இருந்தால், புதன்திசைமத்தியில் ஜாதகன் மரணமாவனென்பர்.

துலாலக்கினத்தில் பு-கே-சூ

(2) உதையத்தில் மாதுலக்காரகன் ரவிகேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஐந்தாமிடம் சுத்தமாயிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை கஷ்டஜீவனம் புதன்திசை ஆகிபிதுர்மரணம் ஸ்தான பிரஸ்டம் உத்தியோகமூலம் அலைந்தஜீவனமென்பர்.

துலாலக்கினத்தில்-பு-சு-சூ. 10-ல் செ.

(3) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கின அஷ்டம லாபாதிபதிகளுடன்கூடி தசமகேந்திரமேறிய நீச்சகுஜனுல் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் பிதுராக்ஷிதங்களை கடன்மூலமிழந்து கஷ்டப்படுவார்கள் திர்க்கமென்பர்.

துலாலக்கினத்தில் பு-சனி, 7-ல் -சு.

(4) உதையத்தில் மாதுலக்காரகன் சுகபஞ்சமாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற லக்கின அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கம் விர்த்திசுகமுண்டாம். புதன்திசையில் ஜாதகனுக்கு வித்தைவிர்த்தி உத்தியோகம் களத்திரலாபம்மண்மனை பூமியுண்டென்பர்.

துலாலக்கினத்தில் பு-ச, 7-ல் சனி.

(5) உதையத்தில் மாதுலக்காரகனுகிய தேர்ப்பாகன் தசமகேந்ராதிபதியுடன்கூடி நீச்சசனியால் நேரே நோக்கப் பட்டிருந்தால், மாமனேகன் விர்த்தியில்லை. சுகமில்லை வித்தைமூலம்உபாயஜீவனம் செய்வனென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லாபாதிபதியுடன் கூடி ஒருவருமபாராமலிருந்தால் புதன்திசையில் களத்திரமரணம் ஸ்திரீசேர்க்கை ராஜாங்கத்து சுகமடைவனென்பர்.

துலாலக்கினம் 2-ல் பு-சு-ரா.

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சுக்கிரன் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனேகம் புதன்புக்தி சுகமில்லை கஷ்டம் பிதுர்மரணமென்பர்.

துலாலக்கினம் 2-ல் பு-கே-ச.

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய மதிமகன்சந்திரன் கேதுவுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் மாமன்வர்க்கனுசம். புதன் முற்பாசம் பிதுர் மாதுர்மரணம் பொருள்நஷ்டம் விவகாரம் குடும்பம் பிரிவுபடுமென்பர்.

துலாலக்கினம் 2-ல் செ-பு-ச 10-ல்- குரு.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் தன சப்தம கர்மாதிபதிகளுடனகூடி தசமகேந்திரம்பெற்ற உச்சகுருவால் நோக்கப்பட்டிருந்தால் அம்மான்வர்க்கம் விர்த்தி சுகமுண்டாம் ஜாதகன் கெணிதசாஸ்திரத்தில் தேர்ச்சியுள்ளவனு யிருப்பனென்பர்.

துலாலக்கினம் 2-ல் சனி 8-ல் பு-சு.

(10) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சுகபஞ்சமாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானமபெற்ற லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் புதன்திசையோகம் சகலவித நன்மையுமுண்டென்பர்.




(11) (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில்மாதுலக்காரகன் லாபாதிபதியான சூரியனுடன்கூடி நவதிரிகோணமேறிய சுக பஞ்சமாதி பதியால், நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் விர்த்தியில்லை. தாயும்மாமனும் பொருந்தமாட்டார்கள் புதன்புக்தி விவாகமுண்டென்பர்

துலாலக்கினம் 3-ல் பு-சூ.

**(12)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால், புதன்புக்தி இருபத்தொன்றில் புத்திரிஜெனனம் அதுமுதல் கஷ்டமான பலன்களென்பர்.

துலாலக்கினம் - 3-ல் பு-சூ-ரா.

**(13)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சூரியன் ராகுவுடன்கூடி மற்றெந்த பாவாதிபதிகளும் நோக்காமலிருந்தால், பாக்கியவிரையாதிபதி திசையில் ஜாதகன் பிதுர், மாதுர், மூவருமிறந்துசொத்துகள் அழிந்துபோகுமென்பர்.

துலாலக்கினம் 3-ல் பு-குரு-சனி 9-ல் சூ.

**(14)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புலவன் திருதிசுகபஞ்சம ரோகாதிபதிகளுடன்கூடி பிதுர்ஸ்தானமேறிய லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் வித்தையற்பம் கைத்தொழில்மூலம் உபாயஜீவனம் செய்வரென்பர்.

துலாலக்கினத்தில் சனி, 3-ல் பு-ச.

**(15)** மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய பண்டிதன் தசமகேந்திராதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற, சுகபஞ்சமாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகம் விர்த்தியில்லை. வித்தைமூலம் ஜீவனம் செய்வனென்பர்.




(16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகன் ரவிசுக்கிரனுடன்கூடி தசமகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர உச்சநீசர்களால், நோக்கப்பட்டிருந்தால், புதன்புக்தி உத்தியோகலாபம் பின்பொருள்நஷ்டம் சகோதரிவிவாகம் சுகமுண்டாம் மாமனேகம் விர்த்தியில்லை ஜாதகன் கெணிதசாஸ்திரவல்லவனாய் புவியெங்கு மிசைபெருவனென்பர்.

துலாலக்கினம் 4-ல் பு-ரா-சனி, 10-ல் சு.

**(17)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் சனி, ராகுவுடன்கூடி லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனில்லை. தாயுடன் பெண்மூன்று புதன்புக்தி பிதுர்மரணம். உத்தியோகநஷ்டம் பொருள்விரயம் பின் உத்தியோகலாபமென்பர்.

துலாலக்கினம் 2-ல்சனி, 4-ல் கே-பு.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன் கூடி த்விதிய ஸ்தானமேறிய சுகபஞ்சமாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால் மாமனில்லை. புதன் திசையும் நேர்ந்தால் ஜாதகன்உடனே மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 4-ல் பு-ச, 5-ல் செ, 10-ல் சு.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கர்மாதிபதியுடன்கூடி லக்கின அஷ்டமாதிபதியால் நேரே பார்க்கப்பட்டு, மாதுலஸ்தானத்தில் குஜனிருந்தால், மாமனிருவரில் ஜேஷ்டன். அங்கவீனமுள்ளவன் மணமில்லை. அற்பஜீவனன் சுகமில்லையென்பர்.

துலாலக்கினம் 4-ல் குரு-பு, 10-ல் ச.

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய ரோகாதிபதியான நீச்சகுருவுடன்கூடி, ஸ்வக்ஷேத்திர கர்மாதிபதியால், நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை. வித்தையுண்டாம் வறுமையடைவனென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் சந்திரன் ராகுவுடன்கூடி, தசமகேந்திரமேறிய நீச்சகுஜனால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் புத்திரவிர்த்தியில்லை. புதன்திசையில் மாதுர்கர்மம் புத்திரக்கவலை குடும்பகலகமென்பர்.

துலாலக்கினம் 5-ல் சூ-பு-ச, 11-ல் சனி.

**(22)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கின அஷ்டம லாபாதிபதிகளுடன்கூடி சுகபஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால். மாமனேகம் புதன்திசையில்விவாகம்கிரகவிர்த்தி உத்தியோகலாபம் புகழ்பிரசித்தியென்பர்.

துலாலக்கினம் 2-ல் செ, 5-ல் பு-கே.

(23) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன்கேதுவுடன்கூடி த்விதிய ஸ்தானமேறிய,ஸ்வக்ஷேத்திர பூமகனுல் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை. சுவீகாரமாமனுண்டாம் புதன்புக்தியும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 5-ல் பு-சு. 11-ல் ச,

(24) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி லாபஸ்தானமேறிய தசமகேந்திராதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் விர்த்தியுண்டாம், இருவரும் உத்தியோகமூலம் மேன்மை யடைவார்களென்பர்.

துலாலக்கினம் 5-ல் பு-சூ, 11-ல் சனி.

(25) ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகனுகிய புதன் லாபாதிமதியுடன்கூடி சுக பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப் பட்டிருந்தால், மாமனேகன் வித்தையுண்டாம். புதன்திசையில் வித்தைலாபம் களத்திரலாபம் உத்தியோகலாபம் முதலிய சுபபலனென்பர்.




(26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் மாதுலக்காரக னுகிய புதன் நீச்சனுய் லக்கின அஷ்டம லாபாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் பாராமலிருந்தால், புதன்புக்தி எழுவயதில்பிதுர்மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 6-ல் பு-சூ-சு-செ-கே.

(27) ஆருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன்,சூரியன்,குஜன் சுக்கிரன், கேது இந்நால்வருடன் கூடியிருந்தால், புதன திசை ஆதி சகோதாம். பிதா இவர்கள்மரணம் அப்பால் சிலமனைகள் கைவிட்டுப்போகுதல் விவாகம் அதுமுதல் சுகமுண்டென்பர்.

துலாலக்கினம் 6-ல் பு.12-ல் சனி

(28) ஆருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீச்சம்பெற்று ஏசனுய் தனித்து, விரையமேறிய சுகபஞ்சமாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் மாமன்வர்க்கனுசம் புதன்புக்தி பிதுர்கர்மமென்பர்.

துலாலக்கினம் 3-ல் செ, 6-ல் பு-சு.

(29) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய அம்புலிசுதன் உச்ச கோளுடன்கூடி திருதியஸ்தானமேறிய த்விதிய சப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் வித்தையுண்டாம். ஜாதகன் அம்மான்புத்திரியை மணமுடிப்பனென்பர்.

துலாலக்கினம் 6-ல் பு-ச, 10-ல் குரு

(30) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புந்தி தசமகேந்திராதிபதியுடன்கூடி உச்சகுருவால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை ஆதி உத்தியோகலாபம், விவாகம் புத்திரவிர்த்தி பிற்பாகம் பிதுர் கர்மம் சகோதரக் கர்மமுண்டென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமலிருந்தால் புதன்திசை, ஆதி பிதுர்சுகம் உத்தியோக விர்த்தி விவாகமுண்டாம். திசைகடைசி பிதுர்மரணம் வடதிசை குடிபோதல் முதலிய பலனென்பர்.

துலாலக்கினதில் ச, 7-ல் பு-செ.

(32) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரதன சப்தமாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற தசமகேந்திராதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமன் ஆறுபேரென்பர்

துலாலக்கினம் 7-ல் பு-சு-ச-கு. 10-ல் சனி, 12-ல் செ.

(33) ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின அஷ்டமகர்ம லாபாதிபதிகளுடன்கூடி, கர்மமேறிய சனியாலும் விரையமடைந்த குஜனாலும், நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம் ரோணத்தால் வாதைபடுவனென்பர்.

துலாலக்கினம் 5-ல் சனி, 7-ல் கு-பு.

(34) ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் லாபஸ்தானாதிபதியாகிய உச்சரவியுடன்கூடி, ஸ்வக்ஷேத்திர சுகபஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் ஜெனித்த மூன்றுமாதம் வரையிலும் ரோகம், அப்பால் நிவர்த்தியென்பர்.

துலாலக்கினம் 7-ல் பு-ச-செ.

(35). ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் த்விதிய சப்தம கர்மாதிபதிகளுடன கூடியிருந்தால், புதன் திசை ஆதி சுயார்ச்சியம் விட்டு வேறிடம்போய் பொருள்விரையம் செய்து மனைவிர்த்திசெய் வன் குடும்பகவலையுண்டாம் பின்னுல் பிரிவினையென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன் லாபாதிபதியுடன் கூடி, ஒருவரும் பாராதிருந்து, பஞ்சமஸ்தானம் சுத்தமாயிருந்தால் அம்மான்கள்மூவர் தனித்தனி பிரிந்து கஷ்டப்படுவார்கள் விர்த்தியில்லை. சுகமிலலையென்பர்.

துலாலக்கினம் 8-ல் பு-சு.

(37) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திர லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி, ஒருவரும்பாராமலிருந்தால் புதன்திசைமுழுதும் அன்னியதேசவாசம் பிதுர்வர்க்கக்கர்மம் சில நாள்சுகம் திசைகடைசி அகஸ்மாத்தாய் பொருள்விரையம் விவகார மூலம் ஜெயமென்பர்.

துலாலக்கினம் 6-ல் சனி, 8-ல் கே-பு.

(38) எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் கேதுவுடன்கூடி, ரோகஸ்தானமேறிய சுக பஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் விர்த்தியில்லை புதன்திசை ஆதி, பிதுர்மரணம். தாய்வர்க்ககர்மம் பின்புஜாதகனு மரணமென்பர்.

துலாலக்கினம் 5-ல் செ, 8-ல் சனி-பு,

(39) எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் சுக பஞ்சமாதிபதியுடன்கூடி புத்திரஸ்தானமேறிய த்விதிய சப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை. ஜாதகன் ஐந்துவித பாஷைகள் கற்பன் தேர்ச்சியில்லையென்பர்.

துலாலக்கினம் 2-ல் செ, 8-ல் பு-ரா-ச.

(40) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய மாலவன், சந்திரன் ராகுவுடன்கூடி, தன சப்தமாதிபதியால் நேரே பார்க்கப்பட்டிருந்தால், தாய்மாமனேகன் மத்தியகாலம் நோயால் மெலிபட்டுமரணம் விர்த்தியில்லையென்பர்.




## (41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் லாபாதிபதியுடன்கூடி, சுகபஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாதி சுகமில்லை. ஸ்ரீசேர்க்கை பொருள் விவரயமென்பர்.

துலாலக்கினம் 9-ல் பு-குரு-ச.

**(42)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் திருதிய ரோககர்மாதி பதிகளுடன்கூடி, மற்றெவரும் நோக்காமலிருந்தால், அம்மான்களிருவர் உததியோக முண்டாம். ஜாதகன் ஆயுள்வரையிலும் சுகப்படுவனென்பர்.

துலாலக்கினம் 9-ல் பு.

**(43)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஏகனுய்த் தனித்து, ஒருவரு பாராமல்,மாதுலஸ்தானமும் சுத்தமாயிருந்தால் மாமன்வர்க்கம் விர்த்தி சுகமுண்டாம புதன்திசைமுழுதும் யோக பலனென்பர்.

துலாலக்கினம் 9-ல் பு-ச.

**(44)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் கர்மாதிபதியாகிய சந்திரனுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் புதன்திசையில்உன்னதமான கிரகவிர்த்தி களத்திரலாபம் பூமி பொருள்சேர்க்கை. புத்திரலாப முதலிய பலன்களென்பர்.

துலாலக்கினம் 3-ல் செ, 9-ல் பு-சனி.

**(45)** ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் சுகபஞ்சமாதிபதியுடன்கூடி திருதிய ஸ்தானமேறிய த்விதிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் மரித்துப் பிறப்பனென்பர்.




## (46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக்காகனுகிய புதன் நீச்சகுஜனுடன் கூடி, மற்றெவரும் நோக்காம லிருந்தால், புதன்திசை, ஆதி விவாகம் விவாகத்திற்கு எத்தினப் பட்டு கெர்ப்பத்தால் தடைபடும் கெர்ப்பம்விர்த்திக்காதென்பர்,

துலாலக்கினம் 10-ல் பு-குரு-சு-கே-சனி.

**(47)** பத்தாமிடத்தில் மாதுலக்காரககிய பண்டிதன் சூரியன் குரு சனி கேது இந்நால்வர்களுடன் கூடியிருந்தால் புதன்திசை முற்பாதி ஞானோபதேசம் ஞானிசேர்க்கையுண்டாம் தேருமனம் சமயோகம் வாயுரோகமென்பர்.

துலாலக்கினம் 10-ல் பு-சு-சூ.

**(48)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின அஷ்டம லாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் வித்தையற்பம்அம் மான்களிருவர், மாமனுல் நன்மையுண்டாம், இரபத்திரண்டு வரையிருப்பரென்பர்.

துலாலக்கினம் 4-ல் சூ-ச, 10-ல் பு-சனி.

**(49)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சுகபஞ்சமாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய கர்மலாபாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசைமில் ஜாதகன்ஞானியாய் மறைந்து போவனென்பர்.

துலாலக்கினம் 4-ல் ச, 10-ல் பு-சு-ரா.

**(50)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சுக்கிரன் ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய தசமாதிபதியாய் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் செல்வமில்லை புதன்திசையில் ஜாதகன் ஞானமார்க்கங்களை அனுசரிப்பனென்பர்.




**(51)** (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர லாபாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய உச்ச தன சப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன் எழில்தீர்க்கம், நான்கு விர்த்தியில் உபாயமென்பர்.

துலாலக்கினம் 11ல் -பு-சு-ச.

**(52)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், லக்கின அஷ்டமகர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால், மாமனேகம் வித்தைமூலம் சுகப்படுவன் துடையில் மச்சமென்பர்

துலாலக்கினம் 5-ல் குரு, 11-ல் பு-சனி.

(53) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சுகபஞ்சமாதிபதியுடன்கூடி மாதுலஸ்தானமேறிய திருதிய ரோகாதிபதியால் நேரே பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகம் பெருந்தனமுள்ளவன் அனேக வாளடிமைகளுண்டென்பர்.

துலாலக்கினம் 5-ல் சு, 11-ல் சூ-ச-பு-சனி.

(54) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சுகபஞ்சமகர்ம லாபாதிபதிகளுடன்கூடி, அசுரமந்தியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் குடும்பங்கலைந்து வருமைசூழ்ந்து குணகேடராவாரென்பர்.

துலாலக்கினம் 5-ல் செ 11-ல் பு-குரு.

(55) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் திருதிய ரோகாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய த்விதிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனைந்தில் தீர்க்கமிரண்டு விர்த்தியிலேகனென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர உச்சனாய் சுக பஞ்சமஸ்தானாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காதிருந்தால், புதன்புக்தி இருபத்துமூன்றில் சகோதராவிவாகம் புதன்திசை எழுபத்தைந்தில் ஜாதகன் மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 6-ல் செ, 12-ல் பு-சு-சூ.

(57) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன்லக்கின அஷ்டம லாபாதிபதிகளுடனகூடி, த்விதிய சப்தமாதிபதியால், நேரே பார்க்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கனாசம். புதன்திசை ஆதி கிரகவிர்த்தி சகோதர விவாகமென்பர்.

துலாலக்கினம் 9-ல் செ, 12-ல் பு-கே.

(58) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர உச்சனாய் கேதுவுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய த்விதியசப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் வம்ஷம் க்ஷீணமடையுமென்பர்.

துலாலக்கினம் 8-ல் குரு, 12-ல் பு-சூ.

(59) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கின அஷ்டமாதிபதியான நீச்சபுகருடன்கூடி, ரோகஸ்தானமேறிய சனி, சந்திரனால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை. ஜாதகன் மத்தியவயதில் மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 6-ல் சனி-ச, 12-ல் பு-சு.

(60) பனிரெண்டா மிடத்தில் மாதுலக்காரகனாகிய மாவலன், லாபாதிபதியுடன் அஷ்டமஸ்தானம்பெற்ற திருதிய ரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் பூமிமூலம் உபாய ஜீவனம் செய்வரென்பர்.

துலாலக்கினம் முற்றிற்று.

---

## விருக்ஷகலக்கினம்.

### விருக்ஷகபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்.




(1) உதையத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து, ஒருவரும் பாராமல் சதுர்த்தகேந்திரத்தை திருதிய சுகாதிபதியால் மூன்றாம் பார்வை நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் இருபத்தெட்டில். புதன்திசை புக்தியில் தாய்மரணமென்பர்.

விருக்ஷகலக்கினத்தில் பு-சூ-செ-குரு-கே.

(2) உதையத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சூரியன், குஜன், குரு, கேது இவர்களுடன்கூடியிருந்தால் புதன்திசைபுக்தியில்சகோதரனால் மனதுன்பமடைந்து ஜாதகன் மரணமாவனென்பர்.

விருக்ஷலக்கினத்தில்-பு-சு-சனி-குரு.10-ல் செ.

(3) உதையத்தில் மாதுலக்காரகன் தன்திருதிய சுகபஞ்சம சப்தம விரையாதிபதிகளுடன்கூடி கர்மஸ்தானமேறிய ஜென்மரோகாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால் புதன்திசையில் சுயவியாபாரம் அதிகலாபம் பிற்பாதி தாய்மரணம் குடியிருப்பு கஷ்டமென்பர்.

விருக்ஷலக்கினத்தில் பு-சூ-குரு, 4-ல் சனி,

(4) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன் தன பஞ்சம கர்மாதிபதிகளுடன்கூடி சுகஸ்தானத்தி லாக்ஷிபெற்ற கதிர்மகனுல், நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் சலதுவாரத்தில் உஷ்ண ரோகம் பூமிசேர்க்கை திசைகடைசி களத்திரமரணம் விரதங்களனுஷ்டிப்பனென்பர்.

விருக்ஷலக்கினத்தில் பு-சூ.

(5) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன் தசமகேந்திராதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை அன்னியதேசவாசம் மத்தியில் விவகாரமூல. பொருள் விரையம் சுயதேசத்தில் மனைவிர்த்தி, பிதாவுக்கு சுகமாரல் பெண்மூலம் மனதுன்பமுதலிய பலனென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் தசமாதிபதியுடன்கூடி ஆயுஸ்தானமேறிய திருதிய சுகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால். புதன் திசையில் சூரியபுக்திவருங்கால் பிதுர்வர்க்கத்தில் சுலகப்பட்டுவிலகிபந்துவைச்சேர்ந்து இரண்டுமணங்களுடன்ஜாதகனுக்குவிவாக முடியுமென்பர்.

விருக்ஷலக்கினம் 2-ல் சூ-பு. 12-ல் சனி.

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன், கர்மாதிபதியுடன்கூடி விரையமடைந்த உச்சதிருதிய சுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்,குறைவித்தைபுதன்திசைமுற்பாதி சுகமில்லை.கஷ்டப்படுவன் காலில் பித்தரோகம் சிலகாலத்தில் மாறிப்போகுமென்பர்.

விருக்ஷலக்கினத்தில் குரு, 2-ல் செ-பு. 8-ல்ச.

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன், ஜென்மரோகாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானுதிபதி லக்கினகேந்திரம் பெற்றிருந்தால் மாமன்வர்க்கம் ஐந்தில் இருவர் வியாதியுடையவர்களா யிருப்பரென்பர்.

விருக்ஷலக்கினம் 2-ல் சூ-பு-செ.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் ஜென்மரோக கர்மாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் பார்க்காமலிருந்தால் மாமனிருவர் குடும்பங்குலைந்து கஷ்டப்படுவர் புதன்திசை ஆதிஜாதகன் றிணங்கண்டு மரணமாவனென்பர்.

விருக்ஷலக்கினம் 2-ல் ரா-பு,5-ல் செ, 8-ல் சனி.

(10) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ராகுவுடன்கூடி திருதிய சுகாதிபதியால் நேரே நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் ஜென்ம ரோகாதிபனேறியிருந்தால் மாமனில்லை ஜாதகன் புதன்திசை முற்பாதி கஷ்டம் பிற்பாதி சுகமென்பர்.




(11) (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில்மாதுலக்காரகனாகிய புதன், உச்சகுஜனுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகம். அனேகபூமிகளுண்டாம் விர்த்தியில்லை புதன்திசை முற்பாதி பிதுர்கர்மமென்பர்.

விருக்ஷலக்கினம் 3-ல் சூ-பு, 9-ல் சனி.

(12) மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் தசமகேந்திராதிபதியுடன்கூடி நவதிரிகோணமேறிய திருதியசுகாதி பதியால் நோக்கப் பட்டிருந்தால், மாமனேகன் விர்த்தியில்லை குறைந்தசெல்வம் புதன்திசை ஆதிஜாதகன் உத்தியோகமூலம் கஷ்டம் சுகமிரண்டும் அனுபவிப்பனென்பர்.

விருக்ஷலக்கினம் 3-ல் சூ-சனி-பு, 12-ல் செ.

(13) மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய இந்துபுதல்வன்திருதிய சுககர்மாதிபதிகளுடன்கூடி விரையமடைந்த ஜென்மரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை புதன்திசை முற்பாகம் அனேக கர்மங்களுண்டென்பர்.

விருக்ஷலக்கினம் 3-ல் கே-பு, 9-ல் சனி.

(14) மூன்றாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி நவதிரிகோணமேறிய திருதிய சுகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் விஷத்தால்மரிப்பன், விர்த்தியில்லை களத்திரப் பகையென்பர்.

விருக்ஷகலக்கினம் 3-ல் சூ-பு-கே-சு.

**(15)** மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் ரவி, சுக்கிரன் கேது இவர்களுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் மாமனில்லை தாயுடன் பெண்களதிகமுண்டாம். புதன்திசையில் பிதுர்மரணம் களவுபோதல் கஷ்டம் உத்தியோகபங்கம் பிற்பாதி கொஞ்சம் சுகமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகனாகிய புதன் தசமகேந்திராதிபதியுடன் கூடி ஒருவரும் நோக்காமல் மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் மாமனிருவர் ஜெனன காலம் புதன்திசையும் நேர்ந்தால்ஜாதகன் ரொம்பவும்கஷ்டப்பட்டுபதினேந்துநாளில் மரிப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 4-ல் பு-சு, 10-ல் சனி-செ.

**(17)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் சப்தம விரயாதிபதியான சுக்கிரனுடன்கூடி தசமகேந்திரம்பெற்ற குஜன், சனி இவர்களால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை ஆதிரோகம் கஷ்டம்வியாபாரம் சிலநாள் அதிகாரம் அப்பால் மாரல் விவகாரமுண்டென்பர்.

விருக்ஷகலக்கினம் 4-ல் பு-செ, 10ல் குரு.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஜென்மரோகாதிபதியுடன்கூடி, கர்மஸ்தானமேறிய தன பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், முன்பட்டகஷ்டங்கள்நிவர்த்தியாகி சுயதேசம் வந்துசேருவன் துன்பமில்லை சௌக்கியமென்பர்.

விருக்ஷகலக்கினம் 4-ல் சூ-பு-செ. 10-ல் சனி.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்மரோகதசமாதிபதிகளுடன்கூடி கர்மஸ்தானமேறிய திருதிய சுகாதிபதியால் நேரே பார்க்கப்பட்டு புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன்றிணத்தால் துன்பப்பட்டு திங்கள் மூன்றிலரிட்டமாவனென்பர்.

விருக்ஷகலக்கினம் 4-ல் பு-சனி. 10-ல் சூ,

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புலவன் ஸ்வக்ஷேத்திர திருதிய சுகாதிபதியுடன்கூடி கர்மஸ்தானமேறிய ஆதித்தனால் நேரே நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் ஜுரத்தால் இளமையில் மரணமாவனென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீச்சமடைந்து கர்மாதி பதியுடன் கூடி லாபஸ்தானமேறிய பாக்கியாதி பதியால் பார்க்கப்பட்டிருந்தால், ஐம்பத்தெட்டுவயதில் புதன்திசாபுக்தியில் அதிசாரரோகத்தினல் ஜாதகன் மரணமாவனென்பர்.

விருக்ஷகலக்கினம் 5-ல் பு-சு-சு, 11-ல் செ-குரு-ரா.

(22) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீச்சனுய் ரவி சுக்கிரனுடன்கூடி லாபஸ்தானமேறிய குஜன், குரு, ராகு மூவரால் நோக்கப்பட்டிருந்தால், புதனதிசாபுக்தியில் வியாபாரம் லாபமுண்டென்பர்.

விருக்ஷகலக்கினம் 5-ல் பு.

(23) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீச்சம்பெற்று ஏகனுய் தனித்து, ஒருவரும் நோக்காமலிருந்தால் புதன்திசாபுக்தி கடைசி ரொணவாதை கஷ்டம் தரித்திரம் பூமிகள் கைவிட்டுப்போகுமென்பர்.

விருக்ஷகலக்கினம் 5-ல் பு-கே, 11-ல் சனி.

(24) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் நீச்சனுய் கேதுவுடன் கூடி லாபஸ்தானமேறிய திருதியசுகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை புதன்திசை முற்பாகம் பிதுர்கர்மம் சகோதரமரணம் ஜனவிரோதம் ஸ்தானப்ரஷ்டம் தரித்திரமுண்டாம் திசைகடைசி கொஞ்சம் சுகமென்பர்.

விருக்ஷகலக்கினம் 2-ல் செ, 5-ல் பு-குரு

(25) ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகனுகியபுதன் ஸ்வக்ஷேத்திர தன பஞ்சமாதிபதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய ஜென்ம ரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமன்மூவரில் கனிட்டன், மேலான உத்தியோகமுடையவன் மற்றிருவரும் சயயோகமுள்ளவர்கள் சுகம் விர்த்தியென்பர்.




(26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய சுகாதிபதியான நீச்சசனியுடன் கூடி மற்றெவரும்பாராமலிருந்தால்மாமனில்லை வர்க்கனுசம புதன்திசையில் பிதுர்மாதுர் கர்மம்மத்தியில சகோதரக்கர்மம் அடுத்து ஜாதகனு மரணமென்பர்.

விருக்ஷகலக்கினம் 6-ல் பு-ச-சு.

(27) ஆறாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன், சப்தமபாக்கிய விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால், தாய்மாமன் மூவரிலொருவன் இளமைமரணம். ஜேஷ்டன் விவாகமூலம பொருள்களை விரையம்செய்துகடைசியாய் களத்திரமூலம்தெத்துபோல் காலவ கழிப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 6-ல் பு-ச. 12-ல் செ.

(28) ஆறாமிடத்தில் மாதுலக்காரகனாகியபண்டிதன் பாக்கியாதிபதியுடன்கூடி விரையமடைந்த ஜென்ம ரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் தீர்க்கம் சமயோகம் கல்வியில்லையென்பர்,

விருக்ஷகலக்கினம் 6-ல் பு-சு, 12-ல் ச.

(29) ஆறாமிடத்தில் மாதுலக்காரகன் சப்தம விரையாதிபதியுடன்கூடி பாக்கியஸ்தானாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவரிலொருவன் விர்த்தியில்லை மத்தியகாலம் விவாகமாகி ஓராண்டில் மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 6-ல் சூ-பு-சு, 9-ல் சனி,

(30) ஆறாமிடத்தில் மாதுலக்காரகன் சப்தம கர்ம விரையாதிபதிகளுடன்கூடி நவதிரிகோணமேறிய திருதியசுகாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் கடனால் முறிவார்கள் ஜாதகனை வித்தை தேர்ச்சியில்லாதவனாய் வியாபாரமூலம் உபாயஜீவனம்செய்வன் பிதுர்ப்பகையனென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர சப்தம விரையாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற பாக்கியாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், ஜாதகன் மத்தியவயதில் வடதிசை போய் கணிதம் விவசாயம் களத்திர சொத்தாலும் ஜீவித்து சகோதரனால்கர்மம்செய்யப் படுவனென்பர்.

விருக்ஷகலக்கினம் 7-ல் பு-சூ.

(32) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் தசமகேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்து புதன்திசைவந்தால், ஆதிவிவாகம் அதுமுதல் சௌக்கிய பலனென்பர்.

விருக்ஷகலக்கினத்தில் சு, 7-ல் பு-ச.

(33) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நவதிரிகோணுதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம்பெற்ற சப்தமவிரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கம் விர்த்தியுண்டாம். புதன்திசைமுழுதும் ராஜயோக பலனென்பர்.

விருக்ஷகலக்கினத்தில் சூ, 7-ல் பு-சனி.

(34) ஏழாமிடத்தில் மாதுலக்காரககியபுதன் திருதியசுகாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன் வித்தையால் ஜீவனம் உஷ்ணதேகியா யிருப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 4-ல் செ, 9-ல் கே-ச.

(35) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சந்திரன் கேதுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய ஜென்ம ரோகாதி பதியால், நோக்கப்பட்டிருந்தால் மாமன் வர்க்கனுசம் புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் ஒருவரும் பாராமல் புதன் திசையிலேயே ஜெனித்தால் ஜாதகன் ஐந்துவயதில் தாயைப்பிரிந்து கர்மதினத்தில் சாண்பான் பொய்யனுய் வாய்பிரட்டால் ஜீவிப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 8-ல் பு-சு.

(37) எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரனுய் கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை புக்தி நேருங்காலம் ஜாதகன் மூன்றுவயதில் உஷ்ணரோகத்தால் மரணமாவனென்பர்.

விருக்ஷகலக்கினத்தில் செ, 8-ல் பு-ச.

(38) எட்டாமிடத்தில் மாதுலக்காரனுகிய புதன் நவதிரிகோணுதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற ஸ்வக்ஷேத்திரஜென்மரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் புதன்தியில் மண்மனைவிர்த்தி உத்தியோகலாபம் யோகபலனென்பர்.

விருக்ஷகலக்கினம் 2-ல் கு, 8-ல் பு--சனி.

(39) எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய சுகாதிபதியுடன்கூடி, த்விதிய ஸ்தானமேறிய தசமகேந்திராதிபதியால் நோக்காமலிருந்தால், மாமனேகன் உபயதாரம் வித்தைமூலம் ஜிவனம் புதன்திசை சுபாசுபமிரண்டு முண்டென்பர்.

விருக்ஷகலக்கினத்தில் செ, 6-ல் சனி, 8-ல் பு.

(40) எட்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து, நீச்ச சனியாலும் லக்கினகேந்திரம்பெற்ற ஜென்ம ரோகாதிபதியாலும் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் ஜெனனமுதல் நோயால் மெலிபட்டு நான்குவயதில் மரணமாவனென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் உபையமந்திரிகளுடன்கூடி ஒருவரும் பாராமல், மாதுருஸ்தானத்தில்சனியிருந்தால் மாமனேகம் பொருந்தான் ஜாதகன் ராஜயோகமுடையவனா யிருப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 5-ல் சனி, 9-ல் -பு-செ.

(42) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நீச்சகுஜனுடன்கூடி ஒருவரும பாராமல் மாதுப்ஸ்தானத்தில்சனியிருந்தால் மாமனேகம் விர்த்தியில்லை முன்னிருவர்மரணம் அவர்களும்விர்த்தியில்லையென்பர்.

விருக்ஷகலக்கினம் 7-ல் சனி, 9-ல் கு-பு.

(43) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன்கர்மாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரம் பெற்ற திருதிய சுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவரில் ஜேஷ்டன் சுவிகாரமாவன் கனிட்டன் வித்தைமூலம் உபாயஜீவனம் செய்வனென்பர்.

விருக்ஷகலக்கினம் 9-ல் பு-குரு, 12-ல் சனி.

(44) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சமாதிபதியான உச்சகுருவுடன்கூடி விரையமடைந்த திருதிய சுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன்நால்வர் விர்த்தியிலிருப்பர்ஜாதகன் ஆயுள்வரை மேன்மையாயிருப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 6-ல் செ. 9-ல் பு-சு-சூ

(45) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் சப்தமகர்ம விரையாதிபதிகளுடன்கூடி ரோகஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திராபூமகனால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் தீர்க்கம்விர்த்திகுறைவு தாழ்ந்த செல்வமென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சப்தம விரையாதிபதியுடன்கூடி, சுக கேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திரபூமகனால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாதிவரை ஜாதகன் ஒன்றிலும் நிலைக்காமல் அலைவன் மேல்திசையில் விவாகமான பிறகு நிலைப்பனென்பர்.

விருக்ஷகலக்கினம் 2-ல் செ. 10-ல் பு-சு-சூ.

(47) பத்தாமிடத்தில் மாதுலக்காரககிய மதிமகன்சப்தமகர்ம விரையாதிபதிகளுடன்கூடி திருதியஸ்தானமேறிய ஜென்மரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் நிறைந்த செல்வம் குறைந்தவித்தை ஜாதகன் மாமனால் சுகப்படுவனென்பர்.

விருக்ஷகலக்கினம் 4-ல் சூ, 10-ல் சனி-பு.

(48) பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய சுகாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் மேன்மையில்லை புதன்திசையில் ஜாதகன் ஞானோபதேசம் பெருவனென்பர்.

விருக்ஷகலக்கினம் 5-ல் ச, 8-ல் சனி. 10-ல் செ-கே-பு.

(49) பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் குஜன்கேதுவுடன் கூடி அஷ்டமஸ்தானமேறிய திருதிய சுகாதிபதியால் பார்க்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் சந்திரனிருந்தால் மாமனேகம் ஜாதகனுடனே மரணமாவனென்பர்.

விருக்ஷகலக்கினத்தில் 4-ல் ச-செ,-10ல் கே-பு.

(50) பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் கேதுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய ஜென்மரோக பாக்கியாதிபதிகளால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் நிலைக்கான் புதன்திசை புக்திகாலம் ஜாதகன் அரிட்டமாவனென்பர்.




## (51) (பதினோராமிடம்.)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் உச்சஸ்வக்ஷேத்திரனை ஜென்மரோககர்மாதிபதிகளுடன்கூடி சப்தகேந்திரம பெற்ற தனபஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசைமுற்பாகம்கடைசி பிதுர்மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 11-ல் பு-சூ-ரா.

(52) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சூரியன் ராகுவுடன்கூடி ஒருவரும் பாராமல் புதன் திசையில் பிறந்தால் ஜாதகனுக்கு இபற்கை கெஜகெர்ப்பமுடைய பெண்ணுண்டென்பர்.

விருச்சிகலக்கினம் 9-ல் சனி, 11-ல் -பு-சூ-சு-செ.

(53) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கின ரோகசப்தம கர்மவிரயாதி பதிகளுடன்கூடி பாக்கிய ஸ்தானமேறிய திருதிய சுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கம் பெருங்குடும்பம் ஜாதகனுக்கு முப்பதாண்டிற்குள் யெல்லாம் கலைந்து நசித்துப் போகுமென்பர்.

விருச்சிகலக்கினம் 5-ல் சு, 11-ல் பு-சனி.

(54) பதினோராமிடத்தில் மாதுலக்காரகன்உச்சஸ்வக்ஷேத்திரனாய் திருதிய சுகாதிபதியுடன்கூடி, பஞ்சமதிரிகோணம் பெற்ற உச்ச சுக்கிரனால் நோக்கப்பட்டிருந்தால், அம்மான்கள் எட்டில்தீர்க்கம் ஐந்து விர்த்தியில்மூன்று ஒருவன் இளமைமரணம் மற்றொருவனுக்குப் புத்திரனில்லையென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் செ, 11-ல் பு-சூ.

(55) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் தசமகேந்திராதிபதியுடன்கூடி சுகஸ்தானமேறிய ஜென்மரோகாதிபதியால் நோக்கப்பட்டு புதன் திசையிலுதித்தால் மாமனேகன் தீர்க்கம் மற்றதுமரணம் கெர்ப்பகாலம் பிதாவுக்கு உத்தியோகவிர்த்தி பூமிலாபமுண்டென்பர்.




## (56) (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய சுக கர்மாதிபதிகளான, உச்ச நீச்சகோள்களுடன்கூடி பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், முப்பத்துநான்கில் புதன்திசாபுக்தியில் சளததிர மரணம் புத்திரன்கிலேப்புண்டாகுமென்பர்

விருக்ஷகலக்கினம் 3-ல் சனி, 12-ல் பு-சு-குரு.

(57) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் தனபஞ்சமகர்ம விரையாதிபதிகளுடன்கூடி ஸ்வக்ஷேத்திர திருதிய சுகாதிபதியால் பத்தாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால, நான்குவயதில்புதன்திசா புக்தியில் ஜாதகன் மரணமென்பர்.

விருக்ஷகலக்கினம் 9-ல் செ. 12-ல் பு.

(58) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய்தனித்து, நவதிரிகோணமேறிய ஜென்ம ரோகாதிபதியால் நோக்கப்பட்டு, புதன்திசை கடைசியில் ஜெனித்தால் சகோதரம் பின்விர்த்தியில்லை. விகலப்ப தமையனென்பர்.

விருக்ஷகலக்கினம் 6-ல் குரு, 12-ல் பு-சு-சனி.

(59) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் திருதிய சுக சப்தம விரையாதிபதிகளுடன்கூடி ரோகஸ்தான மேறிய தன பஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர்தீர்க்கம் அதிகாரமுண்டாம். ஜாதகன் மத்தியவயதில் மரணமென்பர்.

விருக்ஷகலக்கினம 10-ல் சனி 12-ல் பு சு கு.

(60) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன், சப்தம கர்ம விரையாதிபதிகளுடன்கூடி தசமகேந்திரமேறிய திருதிய சுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனிருவர் விர்த்திசுகமில்லை பூர்வாசிதங்களை இழந்து கஷ்டப்படுவார்களென்பர்.

விருக்ஷகலக்கினம் முற்றிற்று.

# தனுசுலக்கினம்.

## தனுசுபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்.




(1) உதையத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ரோகபாக்கிய லாபாதிபதிகளுடன்கூடி நவதிரிகோணமேறிய ஜென்மசுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் கொஞ்சநாள்சுகமும் நீண்டகாலம் கஷ்டப்படுவன் புதன்திசையில் ஜாதகன் அரசர்மூலம் சுகப்படுவனெனபர்.

தனுசுலக்கினத்தில் பு-சூ 9-ல் குரு.

(2) உதையத்தில் மாதுலக்காரகன் நவதிரிகோணாதி பதியுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய லக்கின சுகாதிபதியால பார்க்கப்பட்டிருந்தால், புதன்திசைகடைசி விவாகமரண முண்டென்பர்.

தனுசுலக்கினத்தில் பு-ச, 7-ல் செ.

(3) உதையத்தில் மாதுலக்காரகன் அஷ்டமாதிபதியாகிய சந்திரனுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற, பஞ்சம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனிருவர் புதன்திசை ஆதி விவாகம் சகோதரவிர்த்தி உத்தியோகாரம்பம் சுகபொருள்சேர்க்கையென்பர்.

தனுசுலக்கினத்தில் பு-கே. 11-ல் சனி.

(4) உதையத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி லாபஸ்தானமேறிய த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம விர்த்தியில்லை. முன்னிருவர்மரணம்புதன்திசையில ஜாதகன் மரணமாவனென்பர்.

தனுசுலக்கினத்தில் பு-ச-சு. 4-ல் சனி,

(5) உதையத்தில் மாதுலக்காரகன் ரோகஅஷ்டம லாபாதிபதிகளுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை முற்பாதியில் களத்திர லாபம் பொருள்சேர்க்கை சகோதரவிவாகம் விவகாரமூலம் பொருள்விரையம் பிற்பாதி பாகப்பிரிவினை அன்னிய ஸ்திரீசேர்க்கை தாய்மரணமென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ராகுவுடன்கூடி.விரையமடைந்தத்விதிய திருதியாதிபதியால்நோக்கப்பட்டு மற்றெவரும் பாராமலிருந்தால், புதன்திசை முறபாகம் பிதாவுக்குத் தென்திசையில் அரசர்மூலமேன்மை ஓராண்டில்மாரும் அப்பால் கஷ்டஜீவனமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் பு-சு-செ-ச.

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சஞ்சமரோக சப்தமலாப விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால்,புதன் புக்தி களத்திரரோகம் அதனல் அதிகவிரையம் நஷ்டபலன் சகோதரன் ரோகியென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் பு-செ-சூ-கே, 12ல் சனி.

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ரவி, குஜன், கேது இவர்களுடன்கூடி விரையமடைந்த இரவிபுதல்வனல் நோக்கப்பட்டிருந்தால் புதன்புக்தி சகோதரமாரல் ஸ்தானபேதம் களத்திர புத்திர மரணம் அலேச்சலான ஜீவனமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் பு- 10-ல் குரு.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய பண்டிதன் ஏகனய்நின்று தசமகேந்திரம்பெற்ற லக்கின சுகாதிபதியால் ஐந்தாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால ஜாதகன் கவிதத்துவமுண்டா யிருப்பனென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் பு, 4-ல் சு, 8-ல் ச.10-ல் சனி.

(10) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனய்தனித்துஸ்வக்ஷேத்திர அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டு உச்சம்பெற்ற அசுரகுருவை கர்மமேறிய ரவிசுதனுலும் பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகன் ஏழுவயதில் தாய் மரணமென்பர்.




(11) (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன் நவதிரிகோணுதி பதியைக்கூடி, ஒருவர்திருஷ்டியும் பெருமலிருந்தால, மாமன்வர்க்கமெல்லாம் இளமையிலேயே மரணம் புதன்புக்திமாதுர்பிதுர்மரணமபுதன்திசை ஆதி சிரசில்ரோகமுண்டாம் கடைசி விவாகமென்பர்.

தனுசுலக்கினம் 3-ல் பு-சு-சனி.

(12) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் த்திவிதிய திருதியரோகலாபாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் பாராமலிருந்தால், அம்மான்களிருவர் வித்தையுண்டாம். மேன்மை சுகமுடையவர்களாயிருப்பரென்பர்.

தனுசுலக்கினம் 3-ல் பு-ரா-சூ-செ.

(13) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சூரியன், செவ்வாய், ராகு மூவருடன்கூடி ஒருவரும்பாராவல், மாதுலஸ்தானமும சுத்தமாயிருந்தால் மாமனேகன் உபாயஜீவனம் புதன திசையில மேன்மையுண்டென்பர்.

தனுசுலக்கினத்தில் சனி.3-ல் பு-சு-கே,

(14) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ரவி கேதுவுடன்கூடி லக்கினகேந்திரம்பெற்ற த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிலலே புதன் திசை முற்பாசம் பிதுர்கர்மம் சகோதரகலகம் பொருள்நஷ்டம் தரித்திரம் ஸ்தானப்ரஸ்டமென்டர்.

தனுசலக்கினம் 3-ல் குரு-பு-சனி. 9-ல் செ.

(15) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் லக்கின தன திருதிய சுகாதிபதிகளுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய பஞ்சம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன்வர்க்கம் ஐந்தில்விர்த்தி. யிரண்டுஜேஷ்டன் ஞானியாய் ஜாதகனுக்கு இருபதிற்கு மேல் மறைபடுவனென்பர்.




(16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகன் அஷ்டம பாக்கியாதிபதியுடன்கூடி, தசமகேந்திரமேறிய பஞ்சமவிரையாதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் புதன் திசை ஆதிவிவாகம் மரணமுண்டென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் செ-பு, 7-ல் சனி.

(17) நான்காமிடத்தில் மாதுலக்காரகன் நீச்சனாய் பஞ்சமவிரையாதிபதியாகிய குஜனுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற த்விதியதிருயாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமன்வர்க்கனைசம் ஜாதகன் இளமையில் றிணங்கண்டு மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் சனி. 4-ல் சூ-பு-செ,

(18) நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பஞ்சம நவ விரையாதிபதிகளுடன்கூடி குடும்பஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திரக் கரியவனால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் இளமையில் அக்கினி மூல மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 4-ல்செ-பு-ச, 8-ல் குரு.

(19) நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பஞ்சமாஷ்டம விரையாதிபதிகளுடன்கூடி, ஜென்மசுகாதிபதியாகிய உச்சகுருவால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் தீர்க்கம் வித்துவான் உபைய தாரமென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் குரு-பு. 5-ல் செ.

(20) நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் நீச்சனாய்ஸ்வக்ஷேத்திர ஜென்மசுகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல், மாதுலஸ்தானத்தில குஜனிருந்தால் அம்மான்கள் பதினொன்றில் தீர்க்கம், எட்டு விர்த்தியில் ஆறு, கனத்த குடும்பமென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் உபையமந்திரிகளுடன்கூடி, உதயத்திற்கு முன்மூன்றும் பின்மூன்றும் ராசிகளிலமர்ந்த சனி குஜனிவர்களின் பார்வை பெற்றிருந்தால் புதன்திசை முற்பாகம் ஜாதகன்மரணம் பிதாமரணத்தால் துன்பப்படுவன் குடும்பத்தில சுபங்களுண்டென்பர்

தனுசுலக்கினம் 3-ல் சனி. 5-ல் பு.

(22) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனாய்தனித்து, திருதியஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர தனவீரியாதிபதியால நோக்கப்பட்டு ஜென்னகாலம் புதன்திசையுமானால் சுகமில்லை தொழிலில்லை. பிதாவரிஷ்டமென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் பு-சு-சூ, 9-ல் குரு.

(23) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ரோகபாக்கிய லாபாதிபதிகளுடன்கூடி நவதிரிகோணமேறிய லக்கினசுகாதிபதியால் நோக்கப்பட்டு புதன்திசையில் பிறந்தால் விர்த்தியில்லை மூன்றும்வயதி லரிட்டமாவனென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் செ.5-ல் பு-ரா.

**(24)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ராகுவுடன் கூடி த்விதியஸ்தானமேறிய பஞ்சம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் ஜாதகன மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் செ-பு, 11-ல் சு.

**(25)** ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகனாகியபுதன் ஸ்வக்ஷேத்திர பஞ்சம விரையாதிபதியுடன்கூடி லாபஸ்தானமேறிய அசுரகுருவால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமனிருவர் சமயோகம் வித்தையுண்டாம் ஆசர்மூலம் சுகப்படுவரென்பர்.




**(26)** (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமலிருந்தால் புதன்திசை சமயோகம் சகோதர விர்த்தியில்லை வித்தை அற்பம் களத்திரரோகம் வியாபாரத் தொழிலென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் சனி 6-ல் பு-சு.

**(27)** ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஸ்வக்ஷேத்திர ரோக லாபாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் வித்தையுண்டாம் ஜாதகன் மாமனால் நிந்திக்கப்படுவனெனபர்.

தனுசுலக்கினம் 6-ல் சூ-பு-கே. 12-ல் செ.

**(28)** ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சூரியன் கேதுவுடன்கூடி விரையமடைந்த பஞ்சம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் இளமையிலமரணம் புதன் திசையும் நேர்ந்தால் ஜாதகன் ஒருபக்ஷத்தில் அரிட்டமாவனென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் செ-சூ-பு, 9-ல் சனி.

**(29)** ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பஞ்சம நவ விரையாதிபதிகளுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன்இளமையில்மரணம் பின்விர்த்தியுண்டாம் மாமனேகம் உபாயஜீவன்மென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் சனி-பு-.

(30) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகிய மாலவன் த்விதியதிருதியாதிபதியுடன் ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை முற்பாகம் களத்திரமரணம் மருவிவாகம் பிதுர்ரோகம்ரோணபாதைசகோதரக்கலகம் பாகம் பிரிவினையென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரக னுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் த்விதிய திருதிய ரோக விரையாதிபதிகளுடன்கூடி மறறெவரும் நோக்காமலிருந்தால், மாமனேவர்விர்த்தியிலிரண்டு புதன்திசையில் ஜாதகன் களத்திரமரணம் பின் மருவிவாகம அதுவு மரணம் அப்பால்திசை அந்தியத்தில்மூன்ருவதுவிவாகம் செய்வனென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் சனி, 7-ல் பு-குரு,

(32) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஜென்மசுகாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய நீச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் ஜாதகனுக்கு உத்தியோக மேன்மையும் அன்னியஸ்ரீகள் சங்கமும் பந்துஜனகேள்வி விலாசமுதலிய பலனுண்டென்பர்.

தனுசுலக்கினம் 7-ல் பு-கு.

(33) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் பாக்கியாதிபதியுடன் கூடி லக்கினகேந்திரம் பெற்ற த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், யாமனிரண்டிலொருவன் கொலையுண்டு மரணம் புதன்திசை முற்பாகம்கஷ்டம் பிற்பாதி சமபலனென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் செ, 7-ல் பு-சு-ரா.

(34) ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் அருக்கன் கரும்பாம்புடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய பஞ்சம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் தீர்க்கம் விர்த்தியில்லை கைத்தொழில்மூலம் ஜீவிப்பனென்பர்.

தனுசுலக்கினத்தில் சனி, 7-ல் பு-ச-குரு.

(35) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கினசுகஅஷ்டமாதிபதிகளுடன்கூடி லக்கினகேந்திரம்பெற்ற த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்,ஜாதகனேகம் மாமனில்லைபுதன் புக்தி முப்பத்தொன்பதில் ஜாதகன் மரணமென்பர்-




(36) (எட்டாமிடம்)

எட்டா மிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர அஷ்டமாதிபதியுடன் கூடி, பஞ்சம விரையாதிபதியானஉச்சபூமகனால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் விர்த்தி தீர்க்கமுண்டாம் பூமிமூலம் ஜீவனம் தேர்ச்சி வித்தையில்லை யென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் சனி, 8-ல் பு-ரு.

(37) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நவதிரிகோணாதிபதியுடன்கூடி சத்ருஸ்தானமேறிய ஆயுர்க்காரகனால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசைஆதி மாமன்மரணம் பிதுர்வர்க்க கர்மம் அன்னியதேசமால் ராஜக்குரூரம் கஷ்டபலனென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் குரு. 8-ல் ரு-சு-பு

(38) எட்டாமிடத்தில் மாதுலக்காரனாகிய புதன் ரோகபாக்கியலாபாதிபதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய நீச்சகுருவால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கம் நாளுக்குநாளாய் க்ஷீணமடையுமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் குரு, 8-ல் பு.

(39) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்தனித்து, நீச்சகுருவால் நோக்கப்பட்டு ஜெனனகாலம் சப்தகர்மாதிபதியான மதிமகன்திசையில் பிறந்தால் ஜாதகன் மூன்றுண்டில் அனாதியாய் மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 8-ல் பு-ச-செ.

(40) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பஞ்சமாஷ்டம விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் மாமனிரண்டில் ஏகன் தீர்க்கம் செல்வமில்லை கஷ்டஜீவனமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதா மிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சம நவவிரையாதிபதிகளுடன்கூடி லக்கின கேந்திரப்பெற்ற ஸ்வக்ஷேத்திர ஜென்மசுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை ஆதிஜாதகன் திவாந்திரம்போய் சுகமடைவனென்பர்.

தனுசுலக்கினம் 9-ல் பு-சூ-செ,

(42) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ரவிகுஜனிவர்களுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் புதன்திசை ஆதி ஜாதகன் அன்னியதேசம்போதல் மேன்மை சுகமுண்டாம் தாய்கர்மம் அப்பால் ஜாதகன் ரோகத்துடன் சுயதேசம்வந்து மத்தியில் மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 9-ல்-பு-ச-சனி.

(43) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் த்விதிய திருதிய அஷ்டமாதிபதிகளுடன்கூடி மற்றெவரும் பாராமல் பஞ்சமாதிபதி நீச்சம்பெற்றிருந்தால் மாமனில்லை புதன்திசை பிதுர்மரணம் அடுத்து ஜாதகனும் ஜலத்தில் மரணமாவனென்னர்.

தனுசுலக்கினம் 9-ல் பு-சு-கே.10-ல் செ,

(44) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் சுக்கிரன் கேதுவுடன் கூடி ஒருவரும் நோக்காமல பஞ்சம விரையாதிபதியான குஜன் கர்மஸ்தானமேறியிருந்து புதன்திசையுமானல் கெர்ப்பகாலம் மாமனரிட்டம் ஜெனித்தவன்றே ஜாதகனு மரணமென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் ச, 9-ல் -பு-குரு.

(45) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன்லக்கினசுகாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமல் அஷ்டமாதிபதியாகிய சந்திரன் பஞ்சமதிரிகோணமேறியிருந்தால் மாமன்நால்வர் உத்தியோக முறமையிலிருப்பரென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன்ஸ்வக்ஷேத்திரவுச்சனாய் ஏகனாகநின்று அஷ்டமஸ்தான மேறிய ஆதவன் புதல்வனால் நோக்கப்பட்டிருந்தால் புதன் திசையில் பிதுராக்ஷிதமனை மாரல் செய்து விவாகம் செய்துக்கொள்வன்சுகமில்லையென்பர்

தனுசுலக்கினம் 7-ல் செ, 10-ல் பு.

(47) பத்தாமிடத்தில் மாதுலக்காரககிய புதன் ஏகனாய் தனித்து சப்தமகேந்திரமேறிய பஞ்சமவிரையாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் பழதொழிலைநாடுவன் மலைநாடுசேருவன் பின்னும் சுயதேசம் சுகமில்லை சித்திரவேலை செய்வனென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் குரு-ச. 10-ல் பு.

(48) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்தனித்து சதுர்த்தகேந்திரமேறிய குரு சந்திரர்களால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் ஜாதகனுக்கும் சகோதரங்களுக்கும் விவாகம் உத்தியோகம் நாளுக்குநாள்மேன்மை அதிகார முண்டென்பர்.

தனுசுலக்கினத்தில்-சனி, 7-ல் செ, 10-ல் பு-சு-.

(49) பத்தாமிடத்தில்மாதுலக்காரகனாகியபுதன்நீச்சகோளுடன் கூடி ஜென்மசனியாலும் சப்தமகுஜனாலும் நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமனேகம் ஜாதகன் கெர்ப்பகாலத்திலேயே அம்மானரிட்டமென்பர்.

தனுசுலக்கினத்தில்-சனி-10-ல் பு.

(50) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம்பெற்ற த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் இளமையில் ஸ்தலசஞ்சாரம் செய்து வித்தியாப்பியாசம்செய்து வருவனென்பர்.




(51) (பதினோராமிடம்.)

பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் அஷ்டமபாக்கியாதி பதியுடன் கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால்புதன் திசைமுற்பாதி விரோதிகளும் விவகாரங்களுமுண்டாகி பொருள்விரையம் கீர்த்திக்குக் குறைவுண்டாம் அப்பால் அனுகூலம் சுகமுண்டென்பர்.

தனுசுலக்கினம் 8-ல் செ, 11-ல் பு-சு-சனி.

(52) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், த்விதிய திருதியரோக லாபாதிபதிகளுடன்கூடி அஷ்டமஸ்தானம் பெற்ற பஞ்சம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன் மூவரிலொருவன் பொருள்களையழித்துக் குணகேடனாய் தேசமாரலாவனென்பர்.

தனுசுலக்கினம் 7-ல் குரு, 11-ல் பு-ச-ரா.

(53) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சந்திரன் ராகுவுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற, லக்கினசுகாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் கனிட்டன் வித்தையால் ஜீவனம் புதன்திசை முற்பாகம் தாய் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 9-ல் சனி, 11-ல் பு-சு.

**(54)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நவதிரி கோணதிபதியுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய த்விதிய திருதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாகம் பிதுர் மரணம் வியாபாரமூலம் தீவாந்திரம் போவனென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் சனி. 11-ல் செ-பு.

**(55)** பதினோராமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சம விரையாதிபதியுடன்கூடி நீச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் விர்த்தியில்லை ஜெனனகாலம் புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமமென்பர்.




**(56)** (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டா மிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சூரியன், சுக்கிரன், ராகு, இவர்களுடன் கூடி ஒருவரும் பாராமல், புதன்திசையும்வந்தால்முற்பாகத்தில்பிதுர் மரணம் களத்திரபுத்திரன்மரணம் மருபடி விவாகம் அப்பால் தாய்மரணம் சூரியபுக்தியில் கொடுப்பனென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் ச. 12-ல் பு-செ.

**(57)** பனிரெண்டாமிடத்தில்மாதுலக்காரகனுகியபுதன்ஸ்வக்ஷேத்திர பஞ்சம விரையாதிபதியுடன்கூடிரோகஸ்தானமேறியஉச்சசந்திரனுல் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசைமுழுதும் உத்தியோக மூலம் அன்னியதேசவாசமென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் செ. 12-ல் பு-சு-ரா,

**(58)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சூரியன் ராகுவுடன்கூடி பஞ்சம விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை தாயேகம் புதன்திசைமுற்பாதி அனேக கஷ்ட நஷ்ட துன்பம் பிற்பாதி கொஞ்சசௌக்கியம் அந்தியம் ஜாதகன் மரணமென்பர்.

தனுசலக்கினம் 8-ல் குரு, 12-ல் பு-செ.

**(59)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் பூமகனுடன்கூடி அஷ்டமஸ்தானம் பெற்ற, உச்ச ஜென்ம சதுர்த்தகேந்திராதிபதியால்நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன்பூமிமூலம் சுகவான்புதன் புக்தி சகோதரவிவாகம் உத்தியோகலாபம் தொழில்விர்த்தி யென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் ச. 8-ல் குரு. 12-ல் பு.

**(60)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக் காரகனாகிய புதன் ஏகனாய்த் தனித்து உச்சஸ்தானம்பெற்ற குரு சந்திரர்களால் நோக்கப்பட்டிருந்தால், மாமனைவரில் தீர்க்கமூன்று பூமி வியாபாரமூலம் ஜீவனம் ஜேஸ்டன் உத்தியோகமூலம் பிரிந்திருப்பனென்பர்.

தனுசுலக்கினம் முற்றிற்று.

## மகரலக்கினம்.

### மகரபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்.




**(1)** உதையத்தில் மாதுலக்காரகன் அஷ்டமாதிபதியுடன் கூடி சப்தமகேந்திரம்பெற்ற ஸ்வக்ஷேத்திர உச்ச நீசக்கோள்களால், நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை ஆதிஜாதகன் தேசமாரல் பின்னும் சுயதேசம்வருதல் ரோகமுண்டென்பர்.

மகரலக்கினத்தில் பு. 4-ல் சனி

**(2)** உதையத்தில் மாதுலக்காரகன் ஏகனாய் தனித்து ஒருநான்கில் நீச்சமடைந்த ஜென்ம த்விதியாதிபதியால் நோக்கப்பட் டிருந்தால் மாமனேகன் வித்தையால்ஜீவனம் உபையபாஷையன் தேர்ச்சியில்லையென்பர்.

மகரலக்கினத்தில் பு-கே, 11-ல் சனி.

**(3)** உதையத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி லாபஸ்தானமேறிய லக்கின த்விதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனில்லை தாயின்பிதா சுவீகாரபுத்திரன் ஜாதகன்வித்தையைக் கருதானென்பர்.

மகரலக்கினத்தில் பு-குரு. 9-ல் சு.

(4) உதையத்தில் மாதுலக்காரகனாகிய புலவன் திருதிய விரையாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமல், பஞ்சமாதிபதி நீச்சம்பெற்றிருந்தால், மாமன்வர்க்கம் க்ஷீணமடையும் ஜாதகனுக்கு வித்தையுண்டாம் பின்சகோதரவிர்த்தியில்லை யென்பர்.

தனுசுலக்கினத்தில் பு-சு. 5-ல் குரு,

(5) உதையத்தில் மாதுலக்காரகன் பஞ்சம கர்மாதிபதியானசுக்கிரனுடன்கூடி மாதுலஸ்தானமேறிய திருதியவிரையாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் சிறந்த வித்தையுடையவர்களாயிருப்பரென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் அஷ்டமாதிபதியுடன்கூடி விரையமடைந்த லக்கினதனாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் புதன் திசையில்ரொணத்தின்மூலம் பிதுராக்ஷித சொத்துகள்பாரல் குடும்பகலகம் உத்தியோகபங்கம் அன்னியதேச வாசமென்பர்.

தனுசலக்கினம் 2-ல் பு-சு, 8-ல் ச.

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் அசுரகுருவுடன்கூடி அஷ்டமஸ்தானம்பெற்ற சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் மாமன்வர்க்கம் பதினொன்றில்தீர்க்கம் ஒன்பது விர்த்தியில் ஐந்து, ஒருவனுக்கு நான்கு தாரங்களென்பர்.

தனுசுலக்கினத்தில் 2-ல் பு-சனி. 6-ல் சு,

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர ஜென்ம த்விதியாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் மாதுலஸ்தானாதிபதி ஆறில் மறைந்திருந்தால் மாமன்வர்க்கமிருவர் குணமில்லை பலர் தூஷிக்க வாழ்வார்களென்பர்.

தனுசலக்கினம் 2-ல் பு-செ. 10-ல் குரு.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சுகலாபாதிபதியுடன்கூடி தசமகேந்திரமேறிய திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்க மூவரில்ஜேஷ்டன் குடும்பத்தில் கலகனாய் அன்னியஸ்திரீயுடன் வேறுபடுவனென்பர்.

மகரலக்கினம் 2-ல் பு, 3-ல் சு. 8-ல் குரு.

**(10)** இரண்டாமிடத்தில் மாதுலக்காரசனுகிய புதன் ஏகனுய் தனித்து அஷ்டமஸ்தானம் பெற்ற திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டு பஞ்சமாதிபதி உச்சனுயிருந்தால் மாமனிருவர் சுக தனமுண்டாம் ஜாதகன் சதுர்வேதங்களையு மாராய்சிப்பனென்பர்.




**(11)** (மூன்ருமிடம்)

மூன்ருமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன் நீச்சனுய் ஜென்ம த்விதிய அஷ்டமா திபதியுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் புதன்திசை ஆதிதாய்மரணம கடைசி பதினன்குமுதல் உத்தியோக முண்டென்பர்.

மகரலக்கினம் 3-ல் பு-சூ-கே. 12-ல் செ.

**(12)** மூன்ருமிடத்தில் மாதுலக்காரகன் நீச்சனுய் சூரியன், கேதுவுடனகூடி விரையமடைந்த சுகலாபாதிபதியால் பாரக்கப்பட்டிருந்தால் மாமன்வர்க்கனுசம் புதன்திசை முற்பாகம் பிதுர்மரணம் சகோதரக்கலகம் ஸ்தானப்ரஸ்டமென்பர்.

மகரலக்கினம் 3-ல் பு-ச, 9-ல் சு.

**(13)** மூன்ருமிடத்தில் மாதுலக்காரகன் சப்தமாதிபதியான சந்திரனுடன்கூடி நவதிரிகோணமேறிய நீச்சபுகரால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கமூவர் வறுமையடைவார்கள். சுகமில்லை வித்தையில்லை கூலிவேலையென்பர்.

மகரலக்கினம் 3-ல் புசு-. 9-ல் செ.

**(14)** மூன்ருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், உச்ச பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசைஆதிசகோதரவிவாகம்பூமி சேர்க்கை பிதுர்சுகம் உத்தியோக மேன்மையென்பர்.

மகரலக்கினம் 3-ல் பு-ச-சூ. 8-ல் செ.

**(15)** மூன்ருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீசனுய் சப்தம அஷ்டமாதிபதிகளுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய சுகபஞ்சமாதிபதிகளால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசைமுற்பாதிவிவாகம் பொருள்நஷ்டம் பிதுர்மாதுர்கர்மம் சகோதரமரணம் களத்திரரோகம் புத்திரிகர்மம் நாற்கால்நஷ்ட முதலியக்கொடிய பலன்களாம் பிற்பாதி ஜாதகனு மரணமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகன் ஏகனாய்த்தனித்து, லக்கினகேந்திரம்பெற்ற சுகலாபாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசையில் சகோதரங்கள் மரணம் பெண்களால் குடும்பகலகம் சமயோகம் அம்மானொருவன்குணகேடனென்பர்

மகரலக்கினம் 4-ல் பு-சு.

**(17)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி மற்றெவரும் நோக்காமலிருந்தால், புதன் திசை ஆதி சுகமில்லை. வீண்காரியங்களில் பிரவேசித்தல் ரொணப்படுகை பின்னால் சௌக்கியமென்பர்.

மகரலக்கினம் 4-ல் சூ-பு. 10-ல் சனி.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் அஷ்டமாதிபதியுடன் கூடி தசமகேந்திரம்பெற்ற, லக்கின தனாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் அதிகாரமுடையவர்களா யிருப்பரென்பர்.

மகரலக்கினம் 4-ல் சூ-பு-சனி, 10-ல் செ.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் லக்கினதன அஷ்டமாதிபதிகளுடன்கூடி கர்மஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன் திசை முற்பாகம் பிதுர்மரணம்சகோதரக் கர்மமென்பர்.

மகரலக்கினம் 4-ல் கே-பு-ச. 10-ல் சு.

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் சந்திரன் கேதுவுடன்கூடி தசமகேந்திரமேறிய, பஞ்சம கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் விர்த்தியில்லை. ஜாதகனுக்குப் பதினொன்றில் வெள்ளத்தில் அனாதியாய் மரணமாவனென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில்மாதுலக்காரகன் அஷ்டமாதிபதியுடனகூடி ஒருவரும் பாராமலிருந்தால், ரோகபாக்கியாதிபன் திசையில் ஜாதகன்மரணம்பின்விர்த்தியுண்டாம் மாமனேகம் விர்த்தியில்லையென்பர்.

மகரலக்கினம் 2-ல் செ, 5-ல் பு-சு. 11-ல் ச.

**(22)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் ஆயுர்ஸ்தானாதி பதியுடன்கூடி லாபமேறிய நீச்சமதியாலும், குடும்பம்பற்றியசெந்திவண்ணனாலும் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் ஜாதகனுக்கு விவாகம் பிதுர்மரணம் மிருகத்தினால் பயமுண்டென்பர்.

மகரலக்கினம் 5-ல் பு-சு-செ. 11-ல் ச.

**(23)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சுகபஞ்சம கர்ம லாபாதிபதிகளுடன்கூடி சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் விவாகமாகி ஜாதகன் மாணமாவனென்பர்.

மகரலக்கினம் 5-ல் பு-சு.

**(24)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால், மாமனேகம், ரோகிதக்கமனேயுண்டாம் புதன்திசை பிற்பாகத்தில்பிதா அதிகாரம்ஒழிந்து செல்வமாரி ஜேஷ்டபிதாவை அடுப்பனென்பர்.

மகரலக்கினம் 5-ல் பு-சு. 11-ல் சனி,

**(25)** ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகனாகிய புதன் ஆதித்தனுடன்கூடி லாபஸ்தானமேறிய லக்கின தனாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் மாமன்வர்க்கத்தில் விவகாரம் பொருள்விரையம் பிரிவினையுண்டாகல் மாமனிருவரில் கனிட்டன் குணமில்லையென்பர்.




**(26)** (ஆறாமிடம்)

ஆறாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய் அஷ்டமாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய நீச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாதிவஸ்ர விவகாரம், பொருள் நஷ்டம் பிதுர்வர்க்கக்கர்மம் உத்தியோக பங்கம் களத்திரமரணம் பிற்பாதிமுதல் கொஞ்சம் சுகமென்பர்.

மகரலக்கினம் 6-ல் சு-பு-ச, 9-ல் சனி.

**(27)** ஆறாமிடத்தில் மாதுலக்காரகன் சப்தம அஷ்டமாதிபதிகளுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய ஜென்ம தனாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் செல்வமில்லை மத்தியவயதில் கனிட்டன் ஹீனமரணமாவனென்பர்.

மகரலக்கினம் 3-ல் செ. 6-ல் பு-சனி,

(28) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ஸ்வக்ஷேத்திரனுய் ஜென்ம தனுதிபதியுடன்கூடி, திருதியஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் யாந்திரீகமறிவன் கனிட்டரில்லை யென்பர்.

மகரலக்கினம் 6-ல் சு-பு. 8-ல் சனி.

(29) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய ஜென்ம தனுதிபதியால், மாதுலஸ்தானத்தை நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் குணமில்லை யென்பர்.

மகரலக்கினம் 4-ல் சனி, 6-ல் ரா-பு,

(30) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன் கரும்பாம்புடன் கூடி சதுர்த்தகேந்திரம்பெற்ற, நீச்சசனியால் நோக்கப்பட்டு புதன் திசையும் நேர்ந்தால் உடனே ஜாதகன் மரணமென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சமாஷ்டம தசம கேந்திராதி பதிகளுடன் கூடி ஒருவருநம்நோக்காமலிருந்தால், புதன் திசையில் விவகாரம் பூமி பொருள் நஷ்டமென்பர்.

மகரலக்கினம் 7-ல் பு-சூ.

(32) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன் அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும் நோக்காமல், புதன்திசையில் பிறந்தால்குடும்பபிரிவு பிதா அன்னியதேசமாரல் திரேகரோகம் சுகமில்லையென்பர்.

மகரலக்கினம் 7-ல் பு-சு-ச.

(33) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சம சப்தம கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமல் புதன்திசையில் பிறந்தால் மூன்றுவயதுவரை மிகுந்ததுன்பம் வித்தையால் மேன்மையுண்டாம் விளங்குமென்பர்.

மகரலக்கினம் 7-ல் செ-பு. 10-ல்சனி,

(34) ஏழாமிடத்தில் மாதுலக்காரகன் சுக லாபாதிபதியாகிய, நீச்சகுஜனுடன்கூடி தசமகேந்திரமேறிய, லக்கின தனாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் சொற்பவித்தைமூலம் ஜீவனம்செய்வன் நேத்திரரோகியென்பர்.

மகரலக்கினம் 7-ல் குரு-பு.12-ல் சு.

(35) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் திருதிய விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல், பஞ்சமாதிபதிவிரையமடைந்திருந்தால் தாய்மாமன்மூவர் விர்த்தி சுகமுடையவர்களா யிருப்ப ரெனபர்.




(36) (எட்டாமிடம்)

எட்டா மிடத்தில் மாதுலக்காரகனாகிய புகன் சுகசப்தம லாபாதிபதிகளுடன்கூடிரோகஸ்தானமேறியலக்கினதனாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், சாதகன் மூன்றுநாளி லரிட்டமாவனென்பர்.

மகரலக்கினம் 8-ல் பு-கு, 11-ல் சனி.

(37) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர அஷ்டமாதிபதியுடன்கூடி லாபமேறிய லக்கின த்விதியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் நிறைந்தகஷ்டப் படுவனென்பர்.

மகரலக்கினம் 8-ல் பு-ரா.

(38) எட்டாமிடத்தில் மாதுலக்காரனாகிய புதன் ராகுவுடன்கூடி மற்றெந்தஸ்தானாதிபதிகளும்நோக்கப்படாமலிருந்தால்,புதன் முற்பாகம் பிதுர்கர்மம் களத்திரமரணம் குடும்பகுலைவு மருகளத்திரமுண்டாம் பிற்பாகம் ரோகபீடை விவகாரமூலம் பொருள்நஷ்டமென்பர்.

மகரலக்கினம் 8-ல் ச-பு. 12-ல் குரு.

(39) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சப்தமாதிபதியுடன்கூடி விரையமேறிய ஸ்வக்ஷேத்திர தெய்வமந்திரியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசையில் களத்திரமரணம் விவகாரம் பொருள்நஷ்டம் சகோதரவிவாகம் திசைகடைசி ஜாதகன்மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல் குரு. 8-ல் பு.

(40) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்தனித்து, திருதியவிரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், அம்மானிருவர் நீண்டகாலம் ரொணமுள்ளவர்களா யிருப்பரென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரவுச்சனாய் பஞ்சம கர்மாதிபதியாகிய நீச்சபுகருடன்கூடி, சுகலாபாதிபதியால் நான்காம்பார்வை நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கம் வித்தை செல்வமுண்டென்பர்.

மகரலக்கினம் 3-ல் சனி. 9-ல் சூ-பு.

(42) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் அஷ்டமாதிபதியுடன்கூடி திருதியஸ்தானமேறிய, லக்கினதனாதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாகம் பிதுர்கர்மம் அம்மான்வர்க்கனாச மடையுமென்பர்.

மகரலக்கினம் 9-ல் பு,

(43) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் நின்று ஒருவரும் பாராமலிருந்து மதிமகன்திசையும் நேர்ந்தால் திசைமுழுதும் ராஜயோகம பிதுர்மாதுர்வர்க்கசுகம் ஞானக்கேள்வி இந்திரபோகமென்பர்.

மகரலக்கினம் 2-ல் செ. 9-ல் சூ-பு-கே.

(44) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சூரியன் கேதுவுடன்கூடி த்விதிய ஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், புதன்திசையில் பிதுர்மரணம் சகோதரக்கர்மம் குடும்பபிரிவினை பூர்வபூமிகள்மாரல், அக்கினிபயம் ஜாதகனுக்கு ரோகத்துடர்ச்சி யென்பர்.

மகரலக்கினம் 5-ல் ரா. 9-ல் பு-ச-குரு.

(45) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரவுச்சனாய் திருதியசப்தம விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமல மாதுலஸ்தானத்தில் ராகுயிருந்தால் தாய்மாமனிருவர் விர்த்தியில்லை சல்வி சுகமுண்டென்பர்.




## (46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக் காரகன் குரு, கேதுவுடன்கூடி லக்கின கேந்திரம் பெற்ற ஆயுர்க்காரகனால் நோக்கப்பட்டிருந்தால், புதன்புக்தி ஜாதகனிரண்டு திங்களில் மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 10-ல் பு-குரு,

**(47)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் திருதியவிரையாதிபதியுடன்கூடி மற்றெந்த பாவாதிபதிகளும் நோக்காமல் 'புதன்திசை மத்தியில் ஜெனித்தால் ஜாதகன் எட்டுநாளில் அரிட்டமாவனென்பர்

மகரலக்கினம் 10-ல்-பு-சு.

**(48)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசைகடைசி;களத்திரமரணம் பின் அடுத்து ஜாதகனு மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 10-ல் பு-சூ-சு-செ,

**(49)** பத்தாமிடத்தில்மாதுலக்காரகனாகிய புதன் சுகபஞ்சமாஷ்டம கர்ம லாபாதிபதிகளுடன்கூடி, மற்றெந்தகோள்களும் நோக்காமலிருந்தால் புதன்திசை வருங்காலம் ஜாதகன் மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 10-ல் -பு-ச-சனி.

**(50)** பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கின தன சப்தமாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், மாமனில்லை. தாயுடன் பெண்களில்லை புதன்திசையுமானால் ஜாதகனுடனே மரணமென்பர்.




## (51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில்மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர சுகலாபாதிபதியுடன் கூடி பஞ்சமதிரிகோணமேறிய அசுரகுருவால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கம் தீர்க்கமூன்று விர்த்தியுண்டாம் அரசர்மூலம் சுகப்படுவரென்பர்.

மகரலக்கினம் 11-ல் பு-சூ-ச-ரா.

(52) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ரவி, சந்திரன், ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல், புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் ஜெனனமுதல் பிணியால்மெலிந்து ஒன்பது திங்களிலரிட்டமாவனெனன்பர்.

மகரலக்கினம் 5-ல் சூ, 11-ல்செ-பு-சனி.

(53) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், லக்கின தன சுக லாபாதிபதிகளுடன்கூடி அஷ்டமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் தீர்க்கம் வித்தையில்லை பூமிமூலம் ஜீவனமென்பர்.

மகரலக்கினம் 5-ல் சூ-ச, 11-ல் பு.

(54) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்த் தனித்து, பஞ்சமதிரிகோணமேறிய சப்தம அஷ்டமாதி பதிகளால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிரண்டில் ஜேஷ்டன் களத்திரசுகமில்லாதவனாய் ரோகத்தால் துன்பப்படுவனென்பர்.

மகரலக்கினம் 5-ல்செ. 9-ல் சனி, 11-ல் பு.

(55) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்த் தனித்து, நவதிரிகோணமேறிய முதுமகனால் நோக்கப்பட்டு பஞ்சமதிரிகோணத்தில் குஜனிருந்தால் புதன்திசை முற்பாகம் ரோகம் சகோதரமரணம் திசைமத்தியில் ஜாதகனு மரிட்டமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டா மிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஸ்வக்ஷேத்திர திருதியவிரையாதி பதியுடன்கூடி தசமகேந்திரம் பெற்ற, உச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் கனத்த மண்மனையுடையவர்களாயும் அதிகாரமேன்மை சுகமுள்ளவர்களாயு மிருப்பரென்பர்.

மகரலக்கினம் 6-ல் சனி. 12-ல் கே-பு.

(57) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி ரோகஸ்தானமேறிய லக்கின த்விதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை ஜாதகன் கூலிஜீவனம் வித்தையில்லை களவுநடத்தையு முண்டென்பர்.

மகரலக்கினம் 6-ல் ச. 12-ல் பு-சு-சனி,

**(58)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், லக்கின தன அஷ்டமாதிபதிகளுடன்கூடி ரோகஸ்தானமேறிய சப்தமாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், ஜாதகன் ஆண்டொன்றில் துன்மரண மாவனென்பர்.

மகரலக்கினம் 4-ல் குரு, 12-ல் பு-சு.

**(59)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி, சதுர்த்தகேந்திரமேறிய திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், அம்மான்வர்க்கம் சுகமேன்மையுண்டாம் விர்த்தியில்லையென்பர்.

மகரலக்கினம் 3-ல் சனி. 12-ல் செ-பு.

**(60)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக் காரகனுகிய புதன் சுகலாபாதிபதியுடன்கூடி, ஆயுள்க்காரகனுல் பத்தாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் ஆயுள்வரையிலும் ரோகமுண்டாம் குரளன் விர்த்தியில்லையென்பர்.

மகரலக்கினம் முற்றிற்று.

---

மகரலக்கின சக்கரம் (60)

முன்லக்கினம் 9-க்கு (540)

ஆகமொத்த சக்கரம் - **600**.

மகரபுதன் வித்தையம்மான்வர்க்கபலன்

முற்றிற்று.

---

# கும்பலக்கினம்.

## கும்பபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்.




(1) உதையத்தில் மாதுலக்காரகனுகியபுதன் ரோகாதிபதியுடன் கூடி தசமகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர திருதிய கர்மாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமனிருவர் கனிட்டன் விர்த்தியில்லை வித்தைமூல மேன்மை யடைவனென்பர்.

கும்பலக்கினத்தில்-பு-சனி 7-ல் குரு.

(2) உதையத்தில் மாதுலக்காரகனுகியபுதன் ஸ்வக்ஷேத்திர ஜென்ம விரையாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற, தனலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசையில் பிதாவுக்கு உத்தியோகமூலமேன்மை பொருள்சேர்க்கை சௌக்கியமென்பர்.

கும்பலக்கினத்தில் பு-சூ-சனி, ௫-ல் குரு.

(3) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கின சப்தம விரையாதிபதியுடன்கூடி, பஞ்சமதிரிகோணமேறிய தனலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்புக்தி தாய்மரணம் திசையில் ஜாதகன் வயிற்போக்கால் மரணமென்பர்.

கும்பலக்கினத்தில் பு-சூ-ச-சு.

(4) உதையத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சுகரோக சப்தம பாக்கியாதிபதிகளுடன் கூடியிருந்தால், புதன்திசையில் தமையன் மகன் பிரமைகொண்டு ஜாதகனுக்கு வாயுரோகத்தால் மரணமும் சம்பவிக்குமென்பர்.

கும்பலக்கினத்தில் பு-சனி-சூ-கே.

(5) உதையத்தில் மாதுலக்காரகன் சூரியன், சனி, கேது, இவர் மூவருடன்கூடி ஒருவரும் பாராமல் ஜெனனகாலம் புதன்திசையுமானல் ஜாதகன் தெய்வஉபாதியால் இடமாரலாய் ஜெனனம் பின்னுமிடமாரல் தாய்க்குப்பிரிவு பால் இல்லாமல் ஜாதகன்மெலிந்துபோவனென்பர்.




## (6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் நீசனாய் சுகபாக்கியாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமலிருந்தால், புதன் திசையில் நல்லவரும்படிகளும் காலில் ரோகமுண்டாம் திசைகடைசி களத்திரமரணம் அப்பால்ஜாதகன் மதபேதனாய் தேசம் சுற்றி அலைவனென்பர்.

கும்பலக்கினம் 2-ல் பு-சு-செ. 11-ல் சனி,

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நீசனாய்திருதிய சப்தம கர்மாதிபதிகளுடன்கூடி லாபமேறிய ஜென்ம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கனாசம்புதன்திசை முற்பாதிவரை அனேககர்மங்களும் விவகாரங்களும் பொருள்கள் நஷ்டம் கஷ்டம் குடும்பகலக முதலிய தாப்பலனென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி-பு. 7-ல் ச. 8-ல் சு.

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் லச்கினவிரையாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானமேறியரோகாதிபதியால்நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் விர்த்தியில்லை ரோகத்தால் துன்பப்படுவனென்பர்.

கும்பலக்கினம் 2-ல் பு-கே. 8-ல் சு.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன் கூடி ஆயுர்ஸ்தானமேறிய சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை புதன்திசை ஆதி பிதுர்மரணம் களத்திரரோகப் ஸ்தானப்ரஷ்டமெனபர்.

கும்பலக்கினம் 2-ல் பு-சு-செ. 12-ல் சனி.

(10) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நீசனாய் திருதியசப்தம கர்மாதிபதிகளுடன்கூடி. விரையமடைந்த ஸ்வக்ஷேத்திர ஜென்ம தியாகஸ்தானாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் இளமையில் மரணமாவனென்பர்.




## (11) (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில்மாதுலக்காரகன் சுகபாக்கியாதிபதியுடன் கூடி, நவதிரிகோணமேறிய உச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவரில் ஜேஷ்டன் இளமையில் சன்னாசம்பெருவன் கனிட்டன் சமயோகம் வித்தையுண்டென்பர்.

கும்பலக்கினம் 3-ல் பு-சனி. 9-ல் குரு.

(12) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் நீச்சசனியுடன்கூடி, நவதிரிகோணமேறிய தனலாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டு புதன்திசையும்நேர்ந்தால், ஜாதகன் ஜெனித்தவுடனேமரணமாவனென்பர்

கும்பலக்கினம் 3-ல் பு-கே-ச. 12-ல் செ.

(13) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகன் சந்திரன், கேதுவுடன்கூடி விரையமடைந்த உச்ச திருதியகர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை. ஜெனித்தவுடன் தாய்மரணம் பின்பு ஜாதகனும் அரிட்டமாவனென்பர்.

கும்பலக்கினம் 3-ல் பு-ச-.குரு

(14) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், தனரோகலாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், தாய்மாமன் மூன்றில் தீர்க்கமேகம் வித்தையுண்டாம் தேர்ச்சியில்லையென்பர்.

கும்பலக்கினம் 3-ல் பு-சு. 7-ல் குரு,

(15) மூன்றுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புலவன் சப்தமாதிபதியுடன்கூடி, களத்திரஸ்தானமேறிய தனலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் தீர்க்கம் சிறந்தஉத்தியோகம் ஜேஷ்டன் நான்குபாஷையன் தேர்ச்சியென்பர்.




(16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகனுகிய புதன் லக்கினசுக சப்தமபாக்கியவிரையாதிபதிகளுடன்கூடி மற்றெந்த கோள்களும் நோக்காமலிருந்தால புதன்திசைஆகி சகோதரனும் பின்பு தாய் மரணமென்பர்.

கும்பலக்கினம் 4-ல் பு, 10-ல் செ.

(17) நான்காமிடத்தில் மாதுலக்காரகன் ஏகனுய் நின்று தசமகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர திருதிய கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை மருவிவாகம் களத்திரவர்க்க ரோகம் உத்தியோகலாபம் மேகரோகம் தொழில்நீங்கி சுகமில்லாமல்மரணமென்பர்.

கும்பலக்கினம் 4-ல் பு-சூ-சனி.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கின சப்தம விரையாதிபதிகளுடன் ஒருவரும் பாராமலிருந்தால்புதன் திசை ஆதி பிதுர்மரணம் தாய்க்குரோகம் கிரகஞசம் இடமாறல் மாமன் வர்க்கக்கர்மம் வருமை சூழுமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி, 4-ல் பு-ச-ரா.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் சந்திரன், ராகுவுடன் கூடி வாக்குஸ்தானமேறிய ஜென்ம விரையாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், ஜெனனகாலம் தாய்க்குரோகம் அம்மான்வர்க்கக் கர்மம் பிதா பகைஞரால் பொருள் விரையப்படுவ னென்பர்.

கும்பலக்கினம் 4-ல் பு-குரு. 10-ல் ச.

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் தனலாபாதிபதியுடன் கூடி தசமகேந்திரமேறிய ரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமன்சுகவான் ராஜபூஜிதன் ஜாதகன் அம்மானுல் விர்த்திக்கப் படுவனென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில்மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரனுய் சப்தமாதிபதியுடன் கூடியிருந்து ஒருவரும் நோக்காம லிருந்தால், புதன்திசைமுழுதும் சுகமில்லை அடிக்கடி சஞ்சாரம் குடும்பபிரிவு புத்திரபேதம் விவகாரம் பொருள் செலவென்பர்.

கும்பலக்கினம் 3-ல் சு-ரா. 5-ல் பு-சூ. 9-ல் செ.

**(22)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திரனுய் சூரியனுடன்கூடி ஒருவரும்பாராமல் பஞ்சமத்திற் கைந்தாமிடமேறிய குஜ்னே சுக்கிரன் ராகுவால் நோக்கப்பட்டுபுதன்திசையில் பிறந்தால்ஜாதகனுக்கு திசைமுழுதும் கல்வியும் பிதாவால் சகல செல்வமும் பெருகிவருமென்பர்.

கும்பலக்கினம் 5-ல் பு, 11-ல் சு-சூ-ச.

**(23)** ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன் ஏகனுய்நின்று லாபஸ்தானமேறிய சுக ரோக சப்தம பாக்கியாதிபதிகளால்நோக்கப்பட்டிருந்தால் தாய்மாமன்மூவர் விர்த்தி மேன்மையி லிருப்பர். ஜாதகன் செர்ப்பகாலம் பிதாவுக்கு அரசரால் மேன்மையுண்டென்பர்.

கும்பலக்கினம் 5-ல் பு-சனி, 11-ல் செ.

(24) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரனாய் லக்கின விரையாதிபதியுடன்கூடி லாபஸ்தானமேறிய திருதியகர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம்விர்த்திக்கான் புதன்திசை மத்தியில் ஜாதகன் அன்னியதேசத்தில் மரணமாவனென்பர்.

கும்பலக்கினம் 3-ல் சனி, 5-ல் பு-ச..

(25) ஐந்தாமிடத்தில் மாதுருக்காரகனாகிய புதன் ரோகாதிபதியுடன்கூடி வீரியஸ்தானமேறிய நீச்சமுடவனால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் வம்மிஷனாஸ்தி புதன்திசையும்நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமாவனென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய கர்மாதிபதியாகிய நீச்ச குஜனுடன் கூடி மற்றெவரும் நோக்காமலிருந்தால், தாய்மாமனேகம் வித்தையில்லை பூமிசேர்க்கையுள்ளவனா யிருப்பனென்பர்.

கும்பலக்கினம் 6-ல் பு-கே, 12-ல் ச.

(27) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய மாலவன் கேதுவுடன் கூடி விரையமடைந்த ரோகாதிபதியால் நோக்கப்பட் டிருந்தால், புதன்திசையில் புத்திரவுற்பத்தி ஜாதகனுக்கு ரோகம் கஷ்டம்மரணமுண்டாகுமென்பர்.

கும்பலக்கினம் 6-ல் பு-செ-குரு.

(28) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன், த்விதிய திருதிய கர்மலாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காமலிருந்தால்புதன்திசை ஆதிவிவாகம் அப்பால்தென்திசை மிலேத்து சுகமுண்டாகுமென்பர்.

கும்பலக்கினம் 6-ல் பு-சு-கு, 12-ல்சனி.

(29) ஆறுமிடத்தில் மாதுலக்காரகன் சுக சப்தம பாக்கியாதிபதிகளுடன்கூடி விரையமடைந்த ஸ்வக்ஷேத்திர ஜென்மசயனாதிபதியால் பார்க்கப்பட்டு புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் பத்து நாளில் அரிட்டமாவனென்பர்.

கும்பலக்கினம் 6-ல் பு-ச-சூ-ரா.

**(30)** ஆறுமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சூரியன்,சந்திரன், ராகு மூவருடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஜெனனகாலம. பஞ்சம அஷ்டமாதிபதியின் திசையுமானல் செல்வபேதம் பிதாவுக்கு ராஜதண்டனை ஜாதகன் பிறந்தவுடனே மரணமாவனென்பர்.




**(31)** (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சூரியன், சுக்கிரன், ராகு இவர்மூவருடன்கூடி லக்கினகேந்திரம்பெற்ற, தனலாபாதிபதியால் நோக்கப்பட்டு புதன்திசையில்பிறந்தால்பிதா இளமையில்மரணம். பின்பு ஜாதகன் மேல்திசைநாடி சுகிப்பன் சமயோகமென்பர்.

குய்பலக்கினம் 7-ல் பு-ச-சு. 12-ல் செ,

**(32)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் சுகரோக பாக்கியாதிபதிகளுடன்கூடி விரையமடைந்த உச்சபூமகனுல் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் விர்த்தியுண்டாம். ஜாதகன் வித்தைதேர்ச்சியால் அரசாங்கத்தையடுத்து ஜீவிப்பனென்பர்.

கும்பலக்கினம் 7-ல் பு-சூ.

**(33)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திர சப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமல், புதன்திசையில் பிறந்தால் உடனே ஜாதகன்மரணம் பின்விர்த்தியுண்டாம. பிதுர்கண்டமுண்டாகி நிவர்த்தியென்பர்.

கும்பலக்கினம் 7-ல் பு-ச-செ, 10-ல் சனி.

**(34)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் திருதிய ரோக கர்மாதிபதிகளுடன்கூடி தசமகேந்திரமேறிய ஜென்ம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர்திர்க்கம்வித்தையுண்டென்பர்.

கும்பலக்கினம் 4-ல் செ. 7-ல் -பு-ரா-ச.

**(35)** ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சந்திரன், ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய திருதிய கர்மாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால், மாமனேகன் தீர்க்கம்விர்த் திசுகமில்லையென்பர்




## (36) (எட்டாமிடம்)

எட்டா மிடத்தில் மாதுலக்காரகனு கிய புதன் ஸ்வக்ஷேத்திர வுச்சனாய் சுகசப் தம பாக்கியாதிபதிகளுடனகூடிஒருவரும் பாராமல் புதனதிசை நேர்ந்தால் முற்பா கம் பிதுர்மாதுர்மரணம் அப்பால்ஜாதகன் அன்னியதேசமாரலாகிதிசைமுழுதும்கஷ் டப்படுவனென்பர்.

கும்பலக்கினம் 6-ல் சனி. 8-ல் பு-சு-செ.

**(37)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் திருதியசுக பாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி ஜென்மவிரயாதிபதியால் மூன் றும்பார்வை நோக்கப்பட்டு புதனதிசையுமானுல் ஜாதகனுடனே மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் ச. 8-ல் பு-சே.

**(38)** எட்டாமிடத்தில் மாதுலக்காரனாகிய புதன் கேதுவுடன் கூடி த்விதியஸ்தானமேறிய ரோகாதிபதியால் நேரே நோக்கப்பட் டிருந்தால், மாமனேகன் விர்த்தியில்லை கஷ்டப்படுவன் ஏழைகுடும் பமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சூ. 8-ல் பு-சு.

**(39)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நீச்சகோளா கிய சுக்கிரனுடன்கூடி சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந் தால், புதன்திசை முற்பாகம் பிதுர்மாதுர்கர்மம் களத்திரமரணம் புத்திரிரோகம் குடும்பம்பிரிதல் பின்னு மருவிவாக முண்டென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி-சு. 5-ல் குரு. 8-ல் பு-சூ.

**(40)** எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சப்தமாதி பதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய ஜென்மசுக பாக்கியவிரயா திபதிகளால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் குருவிருந்தால் மாமன்வர்க்கம் பெருங்குடும்பம் ஒற்றுமையாய் வாழ்வரென்பர்.




## (41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதா மிடத்தில் மாதுலக்காரகனா கிய புதன் ஜென்ம விரயாதிபதியுடன் கூடி சுகபாக்கியாதிபதியால் நேரேநோக் கப்பட்டிருந்தால், தாய்மாமன் ஒன்பதில் தீர்க்கம் ஏழு கல்வியுண்டாம் உதகியோக மூல மேன்மையடைவார்களென்பர்.

கும்பலக்கினம் 3-ல் ச. 9-ல் பு-கே-குரு

(42) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், வியாழன் கேதுவுடன்கூடி திருதியஸ்தானமேறிய சத்துருஸ்தானாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவரில் கனிட்டன் விர்த்தியில்லை. தீர்க்கமில்லை மத்தியவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 7-ல் சனி. 9-ல் பு-சூ.

(43) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சப்தமாதிபதியுடன்கூடி களத்திரஸ்தானமேறிய ஜென்ம விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை பிற்பாகம் ஜாதகன் மரணமாவனென்பர்.

கும்பலக்கினம் 5-ல் குரு, 9-ல்பு-ச-செ.

(44) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் திருதியரோக கர்மாதிபதிகளுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய தனலாபாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால், அம்மான்கள்நால்வர் வித்தை செல்வமுண்டென்பர்.

கும்பலக்கினம் 5-ல் சு, 9-ல் பு-ச.

(45) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ரோகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் மாதுலஸ்தானத்தில் சுகபாக்கியாதிபனிருந்தால், தாய்மாமனிருவர் சுகமுண்டாம் ஜாதகன் அம்மான்களால் மேன்மை யடைவனென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக் காரகன் தனதிருதிய சப்தம கர்மலாபாதி பதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் புதன் திசை புக்தி பிதுர்மரணம் களத்திரம் நீங்கல் தனக்கு ரோகமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் குரு. 10-ல் பு-சூ.

(47) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் சப்தமாதிபதியுடன்கூடி ஸ்வக்ஷேத்திர தன லாபாதிபதியால் ஒன்பதாம்பார்வை நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் வாரத்தில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 10-ல் பு-ரா-சூ-ச.

(48) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ரவி, சந்திரன், ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால், புதன்திசை முற்பாகம் கஷ்டத்திற்கு ஆரம்பம் வித்தைபேதம் தாயின் வர்க்கனாசமடையுமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் சனி, 10-ல் செ-பு-கே.

(49) பத்தாமிடத்தில்மாதுலக்காரகனாகிய புதன், குஜன், கேதுவுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய ஜென்ம விரையாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் நிலமைகெடுவர் சுகமில்லை புதன் திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

கும்பலக்கினம் 4-ல் குரு, 5-ல் சனி. 10-ல் பு.

(50) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து த்விதிபலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் சனியிருந்தால் மாமனிருவர் சிறந்தவித்தையுண்டாம். புதன திசையில் பிதாவுக்கு மேன்மை யுண்டாகுமென்பர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில்மாதுலக்காரகனாகிய புதன் ஜென்ம விரையாதிபதி யுடன்கூடி பஞ்சமதிரிகோணம் பெற்ற திருதிய ரோக கர்மாதிபதிகளால் நோக்கப்பட்டிருந்தால், மாமன்மூவர் புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

கும்பலக்கினம் 9-ல் சனி. 11-ல் செ-பு.

(52) பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் திருதிய கர்மாதிபதியுடன்கூடி நவதிரிகோணமேறிய உச்சசனியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் புதன்திசை பிற்பாகம் கதித்திரரோகம் சகோதரக்கர்மம் பூமிலாபமுண்டென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி. 11-ல் சூ-பு-.

(53) பதினோராமிடத்தில் மாதுலக்கரரகன்சப்தமாதிபதியாகிய மார்த்தாண்டனுடன்கூடி த்விதியஸ்தானமேறிய ஜென்மவிரையாதிபதியால் பார்க்கப்பட்டு புதன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் சிரங்கினால் வாதைபட்டு பிறந்தாண்டில் மரணமாவனென்பர்

கும்பலக்கினம் 11-ல் பு-சூ-சு-சனி,

**(54)** பதினொராமிடத்தில் மாதுலக்காரகன் லக்கினசுக சப்தம பாக்கிய விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், மாமனேகன் தீர்க்கம் புதன்திசையில் ஜாதகன் மேலானஉத்தியோகமூலம் சுகமடைவனென்பர்.

கும்பலக்கினம் 5-ல் ச. 11-ல் பு-குரு.

**(55)** பதினொராமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திர தனலாபாதிபதியாகிய பிரகஸ்பதியுடன்கூடி பஞ்சமதிரிகோண மேறிய அம்புலியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் தீர்க்கம் வித்தை செல்வமுண்டென்பர்.




**(56)** (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் சுகபாக்கியாதிபதியுடன்கூடி, ரோகஸ்தானமேறிய நீச்ச திருதிய கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகத்தில் தீர்க்கமொன்று வித்தையில்லையென்பர்.

கும்பலக்கினம் 10-ல் சனி. 12-ல் பு-சு-சூ.

**(57)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் சுகசப்தம பாக்கியாதிபதிகளுடன்கூடி. தசமகேந்திரம் பெற்ற, ஜென்மவிரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், பதினேழில் புதன்திசை முற்பாகம் ஜாதகன் மரணமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் குரு. 12-ல் பு-சனி.

**(58)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஸ்வக்ஷேத்திர ஜென்ம விரையாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானம் பெற்ற தனலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன். உபாயஜீவனம் வித்தையற்பமென்பர்.

கும்பலக்கினம் 9-ல் செ.12-ல் பு-குரு.

**(59)** பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், நீச்சகுருவுடன்கூடி நவதிரிகோணமேறிய திருதிய கர்மாதிபதியால், நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முழுதும் அன்யதேசவாசம். பிதுர்சகோதரமரணம் உத்தியோகபங்கம் விவகாரமூலம்பெருந்தனநஷ்டமுதலிய கஷ்டபலனென்பர்.

கும்பலக்கினம் 5-ல் குரு 11-ல் சு, 12-ல் பு.

(60) பனிரெண்டாமிடத்தில் மாதுலக் காரகனாகிய புதன் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் மாதுலஸ்தானமேறிய தனலாபாதிபதியை சுகபாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன்மூவர் கனத்த மண்மனை தனமுண்டாம் கனிட்டனுக்கு நேர்ஜேஷ்டன் மேலான அதிகாரமுள்ளவன் திருதியதாரமென்பர்.

கும்பலக்கினம் முற்றிற்று.

---

## மீ ன ல க் கி ன ம்.

### மீனபுதன் வித்தையம்மான் வர்க்கபலன்.




(1) உதையத்தில் மாதுலக்காரகனாகியபுதன் நீசனாய் ரோகஸ்தானாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஐந்தாமிடம் சுத்தமாயிருந்தால் மாமன்மூவர் வருமையில்லை புதன்திசைஆதி பிதுர்மரணம் குடும்பம்குலைந்து பிறந்தமனைவிட்டு அன்னியர்மனை குடியிருப்பனென்பர்.

மீனலக்கினத்தில் சூ-பு-சு.

(2) உதையத்தில் மாதுலக்காரகன் நீசனாய் திருதியரோக அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால் புதன்திசை ஆதி ஜாதகன் மரணமாவனென்பர்.

மீனலக்கினத்தில் பு-சு, 10-ல் செ.

(3) உதையத்தில் மாதுலக்காரகனாகிய புதன் நீசனாய் திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி தசமகேந்திரமேறிய த்விதிய பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் வித்தையுண்டாம் திருதியபாஷை தேர்ச்சியென்பர்.

மீனலக்கினத்தில் பு-சனி. 9-ல் குரு.

(4) உதையத்தில் மாதுலக்காரகன் லாப விரையாதிபதியாகிய முடவனுடன்கூடி, நவதிரிகோணமேறிய ஜென்மகர்மாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனிருவர் வித்தையுண்டாம் புதன்புக்தி ஜாதகனுக்குவிவாகம் கிரகவிர்த்தி பொருளும் லாபமென்பர்.

மீனலக்கினத்தில் சூ-பு-ச. 7-ல் சு.

(5) உதையத்தில் மாதுலக்காரகன் நீசனாய் பஞ்சமரோகாதிபதிகளுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற திருதியாஷ்டமாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகம் விர்த்தியில்லை வித்தையற்பம் களத்திரசுகமில்லாதவனென்பர்.




(6) (இரண்டாமிடம்)

இரண்டாமிடத்தில் மாதுலக்காரகன் ரோகாதிபதியாகிய உச்சரவியுடன் கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை சகூடசி தாய்மரணம் குடும்பபேதம் தந்தையு மரிட்டமென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி-பு, 8-ல் சூ.

(7) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லாப விரையாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய நீச்சரவியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாகம் பிதுர்மாதுர்மரணம்அடுத்து ஜாதகனும் ஜுரம்கண்டு மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 2-ல் பு-சு-குரு.

(8) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் லச்கின திருதிய அஷ்டம கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காமல்பஞ்சமஸ்தானமும் சுத்தமாயிருந்தால், தாய்மாமன்மூவர் வித்தையுண்டாம் ஒற்றுமையில்லை தனித்தனிப்பிரிந்து உத்தியோகத்தை நாடுவார்களென்பர்.

மீனலக்கினம் 2-ல் பு-ரா. 7-ல் செ.

(9) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ராகுவுடன் கூடி சப்தமகேந்திரம்பெற்ற தனபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை புதன்திசை முற்பாகம் ஜாதகன் வித்தை மூலம் அன்னியதேசமாரல் சகோதரமரணம் குடும்பபேதமென்பர்

மீனலக்கினம் 2-ல் பு-ச. 8-ல் சூ.

(10) இரண்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சமாதிபதியுடன்கூடி ஆயுர்ஸ்தானமேறிய ரோகாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் தனித்தனிப் பிரிந்திருபப ரென்பர்.




(11) (மூன்ருமிடம்)

மூன்ருமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன் ஸ்வக்ஷேத்திர திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி நவதிரிகோணமேறிய லக்கின தசமாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன் ஏழில்தீர்க்கம் நான்குசெல்வமுண்டாம் ஒற்றுமையில்லையெனபர்.

மீனலக்கினம் 3-ல் பு-சூ-ரா. 6-ல் சனி.

(12) மூன்ருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், சூரியன், ராகுவுடன்கூடி சத்துருஸ்தானமேறிய லாப விரையாதிபதியால் நோக்கப்பட்டு புதன்திசை பிற்பாகமானுல் ஜாதகன் ஜெனித்தவுடனே மரணமென்பர்.

மீனலக்கினம் 3-ல் பு-சனி. 9-ல் சூ.

(13) மூன்ருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லாபவிரையாதிபதியுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய ரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மாமனேகன் வித்தையில்லை கைத்தொழில் ஜீவனம் களத்திரமில்லையென்பர்.

மீனலக்கினம் 3-ல் பு 5-ல் ச. 7-ல்குரு.

(14) மூன்ருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ஏகனுய் தனித்து சப்தமகேந்திரம் பெற்ற ஜென்ம கர்மாதிபதியால் நோக்கப்பட்டு பஞ்சமத்தில் சந்திரனிருந்தால் தாய்மாமன்மூவர் தீர்க்கம் சிறந்தவித்தை செல்வம் பூமிகளுண்டென்பர்.

மீனலக்கினம் 3-ல் பு-குரு. 9-ல் செ,

(15) மூன்ருமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் லக்கின தசமாதிபதியுடன்கூடி பிதுர்ஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர தனபாக்கியாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால் புதன்திசை முழுதும் கல்விவிர்த்தி செல்வவிர்த்தி களத்திரலாபம் பிதுர்சுகம்சகோதரவிவாகம் மண்மனை சேர்க்கையென்பர்.




## (16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் மாதுலக் காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய் செந்நாகனுடன்கூடி ஒருவரும்பாராமல் மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால் புதன் திசையில் ஜாதகன் மரணமாவமென்பர்.

மீனலக்கினம் 4-ல் பு-கே, 12-ல் குரு.

**(17)** நான்காமிடத்தில் மாதுலக்காரகன் ஸ்வக்ஷேத்திரனாய் ரோகாதிபதியுடன்கூடி விரையமடைந்த ஜென்ம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசையில் ஜாதகன் சலயாத்திரை செய்து சுகப்படுவனென்பர்.

மீனலக்கினம் 4-ல் பு-ச-ரா. 7-ல் சனி.

**(18)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய சந்திரன் ராகுவுடன்கூடி சப்தமகேந்திரம் பெற்ற, லாபவிரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை முற்பாகமந்தியம் தாயும்பின்பு ஜாதகனு மரிட்டமென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி, 4-ல் பு-சு.

**(19)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய லாபவிரையாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவரில் ஏகன் தீர்க்கம் சொற்பவித்தையுண்டாம் சமயோகமென்பர்.

மீனலக்கினம் 4-ல் பு-கே-சனி. 10-ல் சூ.

**(20)** நான்காமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரனாய் சனி, கேதுவுடன்கூடி தசமகேந்திரமேறிய ரோகஸ்தானாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசை முற்பாகம் பிதுர்மாதுர் சமோதரமரணம ஸ்தானப்ரஸ்டம் பிற்பாகம் களத்திரமரணம் கஷ்டபலனென்பர்.




## (21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் சுகசப்தமாதிபன் திசையில்பிறந்தால் ஜாதகன் மத்தியவயதிற்குமேல் கடைசிவரையிலும் நல்லயோகத்தை அனுபவிப்பனென்பர்.

மீனலக்கினம் 2-ல் செ. 5-ல் பு-ச,

(22) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன்ஸ்வக்ஷேத்திர பஞ்சமாதிபதியுடன்கூடி வாக்குஸ்தானமேறிய த்விதியபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு புதன்திசையில் பிறந்தால் சர்ப்பகாலம் பிதாவுக்கு பூமிலாபம் அதன்மூலம் தனப்ராப்தி யுண்டென்பர்.

மீனலக்கினம் 5-ல் பு-செ. 11-ல் குரு.

(23) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகன் த்விதிய பாக்கியஸ்தானாதிபதியாகிய நீச்சகுஜனுடன்கூடி ஜென்ம கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை புதன் திசையில் மாதர் கர்மம் சகோதரமரணம் களத்திரரோகம் தொழில்பங்கம்கஷ்டபலனென்பர்.

மீனலக்கினம் 5-ல் பு-குரு., 11-ல் சூ.

(24) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லக்கின கர்மாதிபதியுடன்கூடி சூரியனால் நேரே நோக்கப்பட்டிருந்தால், தாய்மாமன் மூவரில்ஜேஷ்டன் ஞானியாய்மறைவன் கனிட்டன் களத்திரமூலம் துன்பமடைவன் மற்றவன் உத்தியோகமூலம் மேன்மையடைவனென்பர்.

மீனலக்கினம் 5-ல் பு-ச-கே.

(25) ஐந்தாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சந்திரன், கேதுவுடன்கூடி மற்றெவரும் நோக்காமலிருந்தால் மாமனிரிவர்தீர்க்கம் இளமையில் தாய்மரணம் ஜாதகன் மதபேதகனாவனென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ரவி கேதுவுடன்கூடி பிதுர்ஸ்தானமேறிய லாபவிரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் புதன்திசை ஆதி விவாகம் விவாகம் முந்திபிதாவும், பிந்தி தாயுமரணம் கஷ்டதிசை ஜாதகன் அறிவிலி மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 6-ல் பு-சூ

(27) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர ரோகாதிபதியுடன்கூடி மற்றெவரும் நோக்காமலிருந்தால், புதன் புக்தி தொழில்பேதம் ரோகவிர்த்தி புக்தி அந்தியம் பிதாவுக்குரோணபாதை நிவர்த்தி காலில் றிணரோக முண்டென்பர்.

மீனலக்கினம் 6-ல் பு-செ.

(28) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன், த்விதியபாக்கிய ஸ்தானாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை கடைசி பிதுர்மாதுரிருவருக்கும் மரணகண்டம் வருமென்பர்.

மீனலக்கினம் 6-ல் பு. 12-ல் குரு.

(29) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன்ஏகனாய்தனித்து விரையமடைந்த ஜென்மகர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், புதன்திசைமுற்பாகம் களத்திரமரணம் பின்னும் மருவிவாக முண்டென்பர்.

மீனலக்கினம் 6-ல் பு-ரா.

(30) ஆறுமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன், ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் மாதுலஸ்தானம் சுத்தமாயிருந்தால மாமன்வர்க்கனாசம் புதன்திவசகடைசி தந்தை அன்னியதீவு போவனென்பர்.

| ல | | | செ |
|---|---|---|---|
| | ராசி | | |
| | | | |
| | | | பு |

(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஸ்வக்ஷேத்திரவுச்சனாய்ஏகனாகதனித்து, சதுர்த்தகேந்திர மேறிய தனபாக்கியாதிபதியால் நோக்கப் பட்டிருந்தால், புதன்திசை கடைசி ஜாதகனுக்கு விவாக முண்டென்பர்.

மீனலக்கினம் 5-ல் சு. 7-ல் பு-சனி,

(32) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் லாப விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் திருதியாஷ்டமாதி பதியாகிய சுக்கிரன் மாதுலஸ்தானமேறி யிருந்தால் தாய்மாமன்மூவர் ஜாதகனுக்கு ரோககளத்திரமென்பர்.

மீனலக்கினம் 7-ல் சு-பு.

(33) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திரவுச்சனாய், நீச்ச மடைக்கோளுடன்கூடி மற்றெவரும்நோக்காமலிருந்தால் புதன்திசை முற்பாகம் களத்திரமுண்டாய் மரணம் விவகாரம பொருள்நஷ்டம் சகோதரக்கர்மம் பின் விவாகமுண்டென்பர்.

மீனலக்கினம் 7-ல் பு-சு. 10-ல் சனி.

(34) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் ரோகாதிபதியுடன்கூடி கர்மஸ்தானமேறிய லாப விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் வித்தையுண்டாம். புதன் திசையில்ஜாதகன் நீர்ரோகத்தால் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 5-ல் சனி. 7-ல் பு-செ-சு

(35) ஏழாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், தனரோகபாக்கியாதிபதிளுடன்கூடி. பஞ்சமதிரிகோணமேறிய லாபவிரையாதிபதியால் நோக்கப்பட்டு, புதன் திசையும் நேர்ந்தால் ஜாதகன்மரித்துப் பிறப்பனென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டா மிடத்தில் மாதுலக்காரகன் தனபாக்கிய லாபவிரையாதி பதிகளுடன் கூடி தியாகஸ்தானமேறிய ஜென்ம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன் திசையில் ஜாதகனுக்கு நேத்திரரோகம். பிதாவுக்கு உத்தியோகம் தனக்கு மரணமென்பர்.

மீனலக்கினம் 8-ல் பு-சூ-ரா.

(37) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன், ரவி, ராகுவுடன்கூடி ஒருவரும்பாராதிருந்தால், புதன்திசையில் அரசர்தொழில்மூலம் பெரிதானபொருள் நஷ்டம் அதுமுதல் சுகமில்லை பென்பர்.

மீனலக்கினம் 8-ல் பு-சு-சனி,

(38) எட்டாமிடத்தில் மாதுலக்காரனுகியபுதன் ஸ்வக்ஷேத்திரவுச்ச திருதியாஷ்டம லாப விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் புதன்திசையில் ஜாதகன் உத்தியோகமூலம் அடிக்கடி இடமாரலா யிருப்பனென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி. 8-ல் பு-ச.

(39) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் பஞ்சமாதிபதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய லாப விரையாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவர் கஷ்டஜீவனம் புதன் திசையில் களத்திரமரணம் பிதுர்ரோகம் ஸ்தானப்ரஸ்டமென்பர்.

மீனலக்கினம் 5-ல் செ, 8-ல் பு-சூ-கே.

(40) எட்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புலவன், சூரியன், கேதுவுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய தனபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை தாயேகம் புதன்திசையும்நேர்ந்தால் ஜாதகன ஜெனித்தவுடனே மரணமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் பஞ்சமாதிபதியாகிய நீச்ச சந்திரனுடன் கூடி ஒருவருமநோக்காமலிருந்தால்புதன் திசையில் ஜாதகன் மாமன்வீட்டில் சவரெக்ஷணை செய்யப்படுவனென்பர்.

மீனலக்கினம் 3-ல் ச. 9-ல் பு-சு-கே.

(42) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், சுக்கிரன், கேதுவுடன்கூடி திருதியமேறிய உச்சசந்திரனால் நோக்கப்பட்டிருந்தால், புதன்புக்தியில் ஜலயாத்திரை பொருள்நஷ்டம் புண்ணியதீர்த்தஸ்நானம் கடைசி மரணமென்பர்.

மீனலக்கினம் 3-ல் சனி. 9-ல் பு-கே.

(43) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகியபுதன் கேதுவுடன் கூடி வீரியஸ்தானமேறிய லாப விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் சனிதிசை புதன்புக்தி கடைசி ஜாதகன் புத்திரவிவாகம் தனக்குக் காலில்ரோகம்கண்டு மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 5-ல் ரா. 7-ல் சனி. 9-ல் செ-பு.

(44) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஸ்வக்ஷேத்திர தன பாக்கியாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரம் பெற்ற நோய்முகனால் நோக்கப்பட்டு மாதுலஸ்தானத்தில் ராகுயிருந்தால், மாமனேகம் பூமிபூலம் ஜீவனம் வித்தையற்பமென்பர்.

மீனலக்கினம் 9-ல் பு-சு-சூ-செ.

(45) ஒன்பதாமிடத்தில் மாதுலக்காரகன் தனதிருதிய ரோக அஷ்டம பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை முற்பாகம் களத்திரமரணம் பிதுர்கர்மம்புத்திரரோகம் பாக்கியக்குறைவுமுண்டாம் பிற்பாகம்கொஞ்சம் சுகமுண்டென்பர்.




## (46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் மாதுலக் காரகனுகிய புதன் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால், மாமனிருவர் கஷ்டஜீவனம் புதன்திசையில் ஜாதகன் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 10-ல் பு-சு.

(47) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனுகியபுதன் திருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி, ஒருவரும் பாராமலிருந்தால், புதன்திசை ஆதி பிதுர்மரணம் அப்பால்ஜாதகனுக்குவிவாகம் அதுமுதல் பூமி பொருள் நாற்கால்சேர்க்கை தெய்வகடாக்ஷம் ஜனகூட்டமென்பர்.

மீனலக்கினம் 7-ல் செ. 10-ல் பு-சனி-சூ-சு,

(48) பத்தாமிடத்தில் மாதுலக்காரகன் திருதியரோக அஷ்டமலாபவிரையாதிபதிகளுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற தனபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை வருங்காலமமேலானயோக முண்டென்பர்.

மீனலக்கினம் 4-ல் குரு, 10-ல் சனி-பு

(49) பத்தாமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன், லாபவிரையாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய ஜென்மகர்மாதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமன்வர்க்கமைந்தில்தீர்க்கமூன்று கல்வியுண்டாம் உத்தியோகமூலம் மேன்மை யடைவரென்பர்.

மீனலக்கினம் 4-ல்-ச, 10-ல் சனி-சு-பு.

(50) பத்தாமிடத்தில் மாதுலக்காரகனுகிய புதன் திருதியாஷ்டம லாப விரையாதிபதிளுடன்கூடி சுககேந்திரமெறிய பஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன்மூன்று தாரங்களுடையவனுகி பின்னுல் சன்னுசங் கொள்வனென்பர்.




## (51) (பதினேராமிடம்)

பதினேராமிடத்தில்மாதுலக்காரகனுகிய புதன், உச்சகுஜனுடன்கூடி திருதியஸ்தானமேறிய ஜென்ம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்,புதன்புக்திகடைசியில் ஜாதகனுக்கும் கனிட்டனுக்கும் விவாகம் சேர்ந்துநடக்கும் அம்மான் பெண் மூன்றுவது ஜென்னம் சகோதரம் விர்த்தியில்லையென்பர்.

மீனலக்கினம் 5-ல் செ. 11-ல் பு-சனி-சூ.

(52) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ரோக லாப விரையாதிபதிகளுடன்கூடி பஞ்சம திரிகோணமேறிய தன பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனேகன் புதன்திசை முற்பாகம் கஷ்டம் பிற்பாகம் சுகமென்பர்.

மீனலக்கினம் 11-ல் பு-குரு.

(53) பதினோராமிடத்தில் மாதுலக்காரகன் ஜென்ம தசமகேந்திராதிபதியாகிய நீச்சகுருவுடன்கூடி ஒருவரும்பாராதிருந்தால் மாமனிருவர் அற்பவித்தை மூலம் ஜீவனம் புதன் பிற்பாகம் ஜாதகன் புண்ணியஸ்தலத்தில் அநாதிபாய் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி, 11-ல் பு-கே.

(54) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் கேதுவுடன்கூடி நேத்திரஸ்தானமேறிய லாபவிரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், மாமனில்லை தாயின்தந்தை தத்துபுத்திரன் புதன் திவச பிற்பாகத்தில் ஜாதகன் அரிட்டமாவனென்பர்.

மீனலக்கினம் ?-ல் சூ. 11-ல் செ-பு,

(55) பதினோராமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் உச்சதன பாக்கியாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோண மேறிய ரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், ஜாதகன் இளமையில் மரணமாவனென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்.)

பனிரெண்டா மிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஏகனாய்த்தனித்து தசமகேந்திரமேறிய லாப விரையாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால் புதன்திசைமுதல்நூதன உத்தியோகம் அதில்லாபம் விவாகம் பிதுர் மாதுர் கர்மமுண்டாம்திசைமத்தியில் இளைத்து பின்னும் மேலான யோகமுண்டென்பர்.

மீனலக்கினம் 6-ல் சனி. 12-ல் பு-சூ-குரு,

(57) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன் ஜென்மரோக கர்மாதிபதிகளுடன்கூடி ரோகஸ்தானமேறிய லாப விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால், புதன்திசை வியாழன் புக்தியில் பிதா வரிட்டமாவனென் பர்.

மீனலக்கினம் 2-ல் ச. 12-ல் பு-சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகனாகிய புதன், ஸ்வக்ஷேத்திர லாப விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் பஞ்சமஸ்தானாதிபதியாகிய சந்திரன் வாக்குஸ்தானமேறியிருந்தால்தாய்ம்மாமனேகம் தாயைப்பெற்றவன் ரோணத்தினால் தேசமாரிப்போவனென்பர்.

மீனலக்கினம் 6-ல் சு, 12-ல் செ-பு.

(59) பனிரெண்டாமிடத்தில் மாதுலக்காரகன் தனபாக்கியாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய திருதிய அஷ்டமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால், மாமனிருவரில் ஜேஷ்டன் இளமையில் தேசமாரிப் போவனென்பர்.

மீனலக்கினம் 5-ல் ச. 12-ல் பு-குரு.

(60) பனிரெண்டாமிடத்தில் மாதுலக் காரகனாகிய புதன் ஜென்ம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல், மாதுலஸ்தானத்தில் சந்திரனிருந்தால் தாய்மாமனிருவர் விர்த்தியுண்டாம். கனிட்டன் கல்வியில் நிபுணனாயும் அனேகபூமி பொருள்களுடையவனாயுமிருப்பனென்பர்.

ஆகலக்கினம் 12-க்கு சக்கரம் - 336

ஈஸ்வரநாடிசோதிட புதகாண்டம்

முற்றிற்று.

---

ஸ்ரீ முருகக்கடவுள் திருவருள்பெற்று

திருவண்ணாமலையி லெழுந்தருளியிருந்த

திருப்புகழ்பாடிய

# ஸ்ரீ அருணகிரிநாதர் திவ்வியசரிதம்.

இவரால் பாடப்பட்ட திருப்புகழ் இவ்வுலகெங்கும் போற்றப் பட்டுவருதல் சகலருக்கும் தெரிந்தவிஷயமே ஆனால் இவரது ஜீவிய சாந்திவரமுழுமையும் இதுவரை வெளிவந்ததில்லை. அக்குறையை நீக்குமாறு அநேகர் வேண்டுகோளின்படி இந்நூலை அச்சிட்டனம். திருப்புகழ் படித்தவர்களெல்லாம் இப்புத்தகத்தை அவசியம் வாசித்து இவரதுசரித்திரத்தை அறியவேண்டியது தற்சமயம் சொற்ப காப்பிகளே அச்சிட்டிருப்பதால் வேண்டியவர்கள் சீக்கிரம் பெற்றுக்கொள்ளும்படியாய் கோருகின்றனன். இதன்விலை அணா 8

மகாமகிமைபொருந்திய திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

# ஞானவெட்டியான்மூலமும்–உரையும்.

இந்த அருமையான நூலானது மகாமகிமை பொருந்தியதிருவள்ளுவ நாயனாரால் அருளிச்செய்யப் பட்டதென்று யாவரும்அறிந்தவிஷயமே ஆனாலும்இந்நூலானது அநேகவருஷங்களாகசுத்தமாகப் பதிப்பிக்கப்படாமல் பிழையாகவே பதிப்பிக்கப்பட்டுவருவதுடன் நல்லகாகிதத்திலும் அச்சிடப்படாமலேயிருந்தது இந்நூற்றுண்டில் கல்விமுதிர்ச்சியின் மிகுதியினால் உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் சுத்தப்பதிப்பாகவும் நல்லகடிதமாகவும் நூற்கள் இருத்தல் வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகையால் ஜனங்களின் அபிப்பிராயத்தை அனுசரித்து இந்த ஞானவெட்டியைப் பிழைபாடில்லாமல் நன்றாய்சுத்தபாடமாகத்திருத்தி தக்கவரைக்கொண்டு அருமையான உரையும்எழுதி நல்லகடிதத்தில் அச்சிட்டிருக்கிறோம்.

இதன்விலை ரூபா 2 8 0

**கோமலாம்பாள் அல்லது கலியாணய்யர்**

**ஓர்புதியநாவல் விலை அணா 12**

இப்படிக்கு,

டி ஆர். வெங்கடேசமுதலியார்.

நெ. 34 முத்துகிருஷ்ணன்தெரு,

மின்ட்பில்டிங்போஸ்டு, மதருஸ்.

7809